**வ.து.(தெ)ந.க.எண்.அ9/1156 /2021**

**தீர்மானஎண்.496/2021** **நாள்:01-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - தெற்கு வட்டார அலுவலகம் - கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - அவசர அவசியம் கருதி 11 முதல் 15 வரையிலான மண்டலங்களில் கொரோனா தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையில் மூன்று மாத காலத்திற்கு மண்டல அலுவலர் மூலம் அந்தந்த மண்டலத்திலேயே சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு ஆணையினை எதிர்நோக்கி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) இரண்டாம் அலை பல நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95, நாள்.13.03.2020ல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் (Focus Volunteers (Friend of Covid Citizen under Surveillance) தன்னார்வலர்களை ஐந்து தெருக்களுக்கு ஒருவர் வீதம் 1 முதல் 15 மண்டலங்களில் 4000 நபர்களை கோவிட்-19 நோய் தொற்றின் போது கடந்த ஆண்டு இப்பணிக்கென நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த தன்னார்வலர்கள் நோய் அதிகம் பாதிக்கப்பட்ட தெருக்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளை கண்காணிப்பதோடு வீட்டில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இதனால் நோய் பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் செல்லாமல் இருந்த காரணத்தினால் கொரோனா நோயினை வெகுவாக கட்டுப்படுத்த முடிந்தது. மேற்படி தன்னார்வலர்கள் மண்டல உதவி வருவாய் அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிந்தனர்.

தற்போது கோவிட் இரண்டாம் அலை பணிக்கென முதற்கட்டமாக வார்டு ஒன்றிற்கு பத்து தன்னார்வலர்கள் வீதம் 200 வார்டுகளுக்கு 2000 தன்னார்வலர்கள் பணியமர்த்த ஆணையர் அவர்களால் 12.04.2021 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில், மண்டலம் 11 முதல் 15 மண்டலங்களில் உள்ள 58 வார்டுகளுக்கு 580 தன்னார்வலர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுசுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டலங்களில் 3577 கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 2326 தற்காலிக பணியாளர்கள் NULM மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த பணியாளர்கள் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 2020-2021 ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்தில், கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.391/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு மாத கால ஊதியம் 30x391= ரூ.11,730/-ஆகும். மாநகராட்சி மூலம் பணியமர்த்தப்படும் கொசு ஒழிப்பு பணியாளர்களும் இந்த சம்பள அடிப்படையிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே, கொரோனா நோய் இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கைக்காக தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரையிலான 58 வார்டுகளுக்கு 580 தன்னார்வலர்களை மாதம் ரூ.11,730/- சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் 3 மாத காலத்திற்கு பணியமர்த்தலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது. இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது .

வ.து.(தெ)ந.க.எண்.அ9/1156 /2021

| S No | No.of Zones | No.of Dns | Number of Focus Volunteers | Salary Per Person Per Month (Rs.) | Total Salary Per Month (Rs.) | Total Salary for 3 Months (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11 | 143 to 155 | 130 | 11,730 | 15,24,900 | 45,74,700 |
| 2 | 12 | 156 to 167 | 120 | 11,730 | 14,07,600 | 42,22,800 |
| 3 | 13 | 170 to 182 | 130 | 11,730 | 15,24,900 | 45,74,700 |
| 4 | 14 | 168, 169 & 183 to 191 | 110 | 11,730 | 12,90,300 | 38,70,900 |
| 5 | 15 | 192 to 200 | 90 | 11,730 | 10,55,700 | 31,67,100 |
| | Total | 58 | 580 | | 68,03,400 | 2,04,10,200 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95, நாள்.13.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries)/2020, நாள்.01.04.2020ன்படியும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(a) During natural calamities and emergencies declared by the Government;

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் இரண்டாம் அலை தொற்று தடுப்பு பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரையிலான 58 வார்டுகளுக்கு 580 தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை -1 அவர்களின் செயல்முறை ஆணை எண். C2/7393/2018 நாள்.07.07.2020ன்படி. நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையில் மாத ஊதியம் ரூ. 11730/- என நிர்ணயம் செய்து பணியமர்த்த அனுமதியும்,

2) அரசாணை (MS) எண் 161, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) நாள். 27.03.2020ன் படி கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் நேரடியாக 580 கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதியும்,

3) ஏற்கெனவே இப்பணியில் ஈடுபட்டிருந்த தன்னார்வலர்களையே முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்த அனுமதியும்,

4) மாதந்தோறும் சம்பந்தப்பட்ட மண்டல உதவி வருவாய் அலுவலர்களிடம் இருந்து சான்று பெற்று மண்டல அளவில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,

5) இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 2,04,10,200/- (ரூபாய் இரண்டு கோடியே நான்கு லட்சத்து பத்தாயிரத்து இருநூறு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,

**வ.து.(தெ)ந.க.எண்.அ9/1156 /2021**

6) இதற்கான செலவினம் கோவிட்-19-க்கென ஒதுக்கப்பட்ட நிதியில் மண்டல அளவில் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யவும், சிறப்பு அதிகாரி / மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறவும் ஆணையரின் 15.04.2021 நாளிட்ட ஆணை பெறப்பட்டு தன்னார்வலர்களின் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, மேற்குறிப்பிட்டபடி தன்னார்வலர்களை பணியமர்த்தப்பட்டதற்கு, மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 29.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

************

**பொது.ந.க.எண். பி15/9098 /2020**

**தீர்மானஎண்.497 / 2021** **நாள்:01-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை (ஓய்வூதியப்பிரிவு) - ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் - கொரோனா பெருந்தொற்றின் காரணமாக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் வருடாந்திர சரிபார்ப்புக்காக 2021-ம் 'ஆண்டிற்கான உயிர்வாழ் சான்றளிப்பதிலிருந்து தற்காலிகமாக விலக்கு அளித்து (Exemption from Annual Mustering Process for the year 2021 as a special case due to Covid -19 ) அரசு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது- இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி ஒவ்வொரு ஆண்டும் உயிர் வாழ் சான்று சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அரசாணை நிலை எண் 215, நிதி(ஓய்வூதியம்)த்துறை, நாள்.26.03.2020ல் ஆண்டுதோறும் ஓய்வூதியர்/ குடும்ப ஓய்வூதியர்கள் உயிர் வாழ் சான்றளிக்க ஏப்ரல், மே, ஜுன் மாதங்களுக்கு பதிலாக ஜுலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அளிக்க அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

அரசாணை நிலை எண் 288, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள்.29.06.2020ல் கெரரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக, சிறப்பு நிகழ்வாகக் கருதி, ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் வருடாந்திர உயிர்வாழ் சான்றளிப்பதிலிருந்து கடந்த 2020 ஆண்டு விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத் தீர்மான எண்.460/2020 நாள்.08.07.2020ல் நிறைவேற்றப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது அரசாணை நிலை எண்.134, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.26.05.2021ல், கெரரோனா வைரஸ் தொற்று காரணமாக சிறப்பு நிகழ்வாகக் கருதி, தமிழ்நாடு அரசு கருவூல விதிகள் 16, SR 67 (a) (1) மற்றும் S.R. 71(a) (1) - யை தளர்த்தி, ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் வருடாந்திர உயிர்வாழ் சான்றளிப்பதிலிருந்து 2021ம் ஆண்டிற்கு தற்காலிகமாக விலக்களித்து (Exemption from Annual Mustering Process for the year 2021 as a special case due to Covid -19 ) ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது..

எனவே, அரசாணை நிலை எண் 134, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 26.05.2021-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்திட, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 31.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**Br.D.C.No.B3/986/2020**

**Resolution No.498/2021** **Date:08-06-2021**

**Greater Chennai Corporation – Bridges Department – Demolition and reconstruction of Bridge across Otteri Nullah connecting Aspiran Garden II street and Kilpauk Garden Road in Dn-98, Zone-VIII – Estimate prepared for Rs. 5,41,00,000/- based on 2020-21 SOR – Estimate approval and Administrative Sanction – For orders.**

Aspiran Garden Residents association have requested to widen the bridge connecting the Aspiran garden and Kilpauk Garden Road near Bhavan Rajaji Vidyasram school vide letter dated18/09/2018.

The Under Secretary to Government, MA&WS Department vide letter dated.05.10.2018 has also requested to take necessary action regarding representation of the Aspiran Garden Residents association requesting to widen the bridge connecting the Aspiran garden and Kilpauk Garden Road.

The SE,PWD/WRD has requested vide letter dated. 29.06.2016, to increase the height of the bridge since the existing bridge deck slab is in lower level so as to avoid inundation of flood water into the residential areas during the rainy season.

The consultancy assignment was entrusted to M/s. Landtech Engineering Pvt .Ltd. to prepare Design and Drawing including Bill of Quantities (BOQ) for six locations as per the orders of the Commissioner on 04.06.2019.

The Consultants have submitted the Design, Drawing and Bill of Quantities (BOQ). Based on the BOQ estimate has been prepared forRs. 5,41,00,000/- as per 2020-21 Schedule of Rates.

The estimate cost of Rs. 5,41,00,000.00 includes the following:-

| | | | |
|---|---|---|---|
| i) | Civil work | - Rs. | 3,86,86,691.04 |
| ii) | Lighting Arrangements | - Rs. | 40,00,000.00 |
| iii) | Charges for Quality Control @ 1.0% | - Rs. | 3,86,866.91 |
| iv) | Tamil Nadu Manual workers welfare fund @1% | -Rs. | 3,86,866.91 |
| v) | Contingencies @2.5% | - Rs. | 9,97,172.22 |
| vi) | GST @12% | -Rs. | 46,42,402.92 |
| vii) | Non- Civil work (Shifting Charges) | - Rs. | 50,00,000.00 |
| | Total | Rs. | 5,41,00,000.00 |

Hence,

1. To accord Administrative Sanction for the estimate cost of Rs. 5,41,00,000 /- prepared based on 2020-21 SOR for Demolition and reconstruction of Bridge across Otteri Nullah connecting Aspiran Garden II street and Kilpauk Garden Road in Dn-98, Zone-VIII.

2. To meet the expenditure from the Capital funds of Greater Chennai Corporation.

3. To call for tenders after obtaining Administrative Sanction from the Special Officer (Council).

Sl.No 1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.05.06.2021 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

**********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/921/2021**

**தீர்மானஎண்.499/2021** **நாள்:08-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - கொரோனா வைரஸ் தடுப்பு பணி - கொரோனா நோய் தொற்று பாதிப்பின் 2ம் அலை மிக தீவீரமான காரணத்தால் அரசு 10.05.2021 முதல் முழு ஊரடங்கு அமுல்படுத்தியதை தொடர்ந்து ஊரடங்கை மீறும் மக்களுக்கு அறிவுரை வழங்கவும், விதிகளை மீறி நடைபெறும் கடைகள் மற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மண்டல அமலாக்க குழு அமைக்கப்பட்டது- இக்குழு ரோந்து மேற்கொள்ளும் பணிக்காக Innova, Tavera, Xylo போன்ற வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதற்கு நிர்வாக அனுமதி மற்றும் பின்னேற்பு அனுமதி.**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2020-ல் உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" *(Corona Virus)* மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் *(Pandemic)* என அறிவித்ததை தொடர்ந்து, தமிழ்நாடு அரசு, கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது கொரோனா வைரஸ் பரவல் 2வது அலை தீவிரமாக உள்ளதால், அரசு தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு அமுல்படுத்தியதை தொடர்ந்து ஊரடங்கை மீறும் மக்களுக்கு அறிவுரை வழங்கி வீட்டிற்கு திருப்பி அனுப்பவும், விதிகளை மீறி நடைபெறும் கடைகள் மற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மண்டல அமலாக்க குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் பெருநகர மாநகராட்சி சார்பாக வரிமதிப்பீட்டாளர் அல்லது உரிமம் ஆய்வாளர் அளவில் ஒரு அலுவலரும், காவல் துறை சார்பாக ஒரு அலுவலரும் இடம்பெற்றிருப்பார்கள். மேலும், ஒரு மண்டலத்திற்கு ஒரு குழு வீதம் 15 மண்டலத்திற்கு 15 குழு அமைக்கப்பட்டது,. இக்குழுவினர் ரோந்து பணி மேற்கொள்ள இயந்திர பொறியியல் துறை மூலம் *Innova, Tavera, Xylo* அல்லது அதற்கு இணையான வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தும்படி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்கள் அறிவுறுத்தியதை தொடர்ந்து தனியார் நிறுவனத்திடமிருந்து இவ்வகை வாகனங்களை வாடகை முறையில் அமர்த்த தீர்மானிக்கப்பட்டது.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால், பல்வேறு வகையான வாகனங்களை வாடகைக்கு வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலை புள்ளிகளை வழங்கியுள்ளனர்.

| Vehicle Type | Name of the Company | 10 Hours & 100 Kms. (Exclu. GST) | Extra Hour charges | Extra KM charges |
|---|---|---|---|---|
| Tavera, Xylo or Equivalent | M/s Anantha Travels | 2400 | 240 | 12 |
| | M/s AN Cabs | 2600 | 260 | 13 |
| | M/s Jyothi Cabs | 2400 | 240 | 12 |
| | M/s KK Cabs | 2600 | 260 | 13 |
| | Sri Chandya Travels | 2700 | 270 | 14 |
| Innova | M/s Anantha Travels | 2700 | 270 | 15 |
| | M/s AN Cabs | 2900 | 290 | 16 |
| | m/s Jyothi Cabs | 2700 | 270 | 15 |
| | M/s KK Cabs | 2900 | 290 | 16 |
| | M/s Sri Chandya Travels | **3000** | **300** | **17** |

மேற்கண்ட அட்டவணையின்படி *Tavera, Xylo* மற்றும் *Innova* வகை வாகனங்கள் வாடகை முறையில் வழங்க விலை புள்ளி வழங்கியுள்ள நிறுவனங்களில், திருவாளர்கள் *Anantha Travels* மற்றும் திருவாளர்கள் *Jyothi Cabs* ஆகியோர் கீழ்கண்டவாறு குறைந்த மற்றும் ஒரே விலைப்புள்ளி வழங்கியிருந்தனர்.

| Vehicle Type | Name of the Company | 10 Hours & 100 Kms. (Exclu. GST) | Extra Hour charges | Extra KM charges |
|---|---|---|---|---|
| Tavera, Xylo or Equivalent | M/s Anantha Travels | 2400 | 240 | 12 |
| | M/s Jyothi Cabs | 2400 | 240 | 12 |
| Innova | M/s Anantha Travels | 2700 | 270 | 15 |
| | m/s Jyothi Cabs | 2700 | 270 | 15 |

இந்நிலையில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் – 2021 பணிக்கென Innova, Tavera, Tempo Traveller, Tata Indica, Tourister, போன்ற வகை வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த வாடகை கட்டணம் நிர்ணயிக்க வேண்டி, பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள், போக்குவரத்து துறை அதிகாரிகள், காவல்துறை (போக்குவரத்து துறை) அதிகாரிகள் ஆகியோர் கொண்ட குழு கூடி நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் தற்போதைய சந்தை விலை மற்றும் காவல்துறை (போக்குவரத்து)ஆணையர் நிர்ணயித்துள்ள 2020-21 ஆம் ஆண்டிற்கான வாடகை கட்டணம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கூட்ட நடவடிக்கை குறிப்பில் தெரிவித்துள்ள வாடகை கட்டணத்தின் அடிப்படையிலும் பல்வேறு வகையான வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்த நிர்ணயிக்கப்பட்டிருந்த வாடகைத் தொகையில் Innova மற்றும் Tavera வகை வாகனங்களுக்கான வாடகை தொகை கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

| Type Of Vehicles (Air- conditioned) | 10 Hours, &100 Kms (Exclu.GST) | Extra Hour charges (Exclu.GST) | Extra KM charges (Exclu.GST) | Remarks |
|---|---|---|---|---|
| TAVERA, XYLO, TATA SUMO or equivalent | 2200.00 | 220.00 | 9.00 | Rates approved by the committee consist of RTO's , Police Officials and Tamilnadu Van owner Association Members |
| INNOVA | 2500 | 250.00 | 13.00 | |

திருவாளர்கள் Anantha Travels மற்றும் திருவாளர்கள் Jyothi Cabs ஆகியோர் Tavera, Xylo அல்லது அதற்கு இணையான வாகனங்கள் மற்றும் Innova வகை வாகனங்கள் வாடகை முறையில் வழங்க தெரிவித்திருந்த விலை புள்ளியானது தேர்தல் பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தை காட்டிலும் கூடுதலாக இருந்ததால் இந்நிறுவனங்களை மேற்கண்ட அட்டவணையில் உள்ளவாறு விலைகுறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட திருவாளர்கள் Anantha Travels மற்றும் திருவாளர்கள் Jyothi Cabs ஆகியோர் கீழ்கண்டவாறு ஒரே மாதிரியான விலை குறைப்பு வழங்கியுள்ளனர்.

| Vehicle Type | Name of the Company | 10 Hours & 100 Kms. (Exclu. GST) | Extra Hour charges | Extra KM charges |
|---|---|---|---|---|
| Tavera, Xylo or Equivalent | M/s Anantha Travels | 2200 | 220 | 9 |
| | M/s Jyothi Cabs | 2200 | 220 | 9 |
| Innova | M/s Anantha Travels | 2500 | 250 | 13 |
| | m/s Jyothi Cabs | 2500 | 250 | 13 |

மேற்கண்ட அட்டவணையின் அடிப்படையிலும் மற்றும் M/s Anantha Travels. M/s Jyothi Cabs, ஆகியோர் ஒரே மாதிரியான விலை குறைப்பு வழங்கியுள்ள நிலையிலும், இவ்விரு நிறுவனங்களிடமிருந்து 06.05.2021 முதல் மொத்தம் 15 எண்ணிக்கையில் வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 15.05.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில் கூடுதலாக 15 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், இயந்திர பொறியியல் துறையின் மூலமாக கூடுதலாக 15 எண்ணிக்கையிலான வாகனங்கள் பணியமர்த்த ஆணையிட்டுள்ளதால், அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட வாடகை கட்டணத்தில், ஏற்கனவே வாகனங்கள் வாடகை முறையில் வழங்கிய M/s Anantha Travels. M/s Jyothi Cabs, ஆகிய நிறுவனத்திடமிருந்து கூடுதலாக 15 வாகனங்கள் வாடகை முறையில் 14.05.2021 முதல் பணியமர்த்தப்பட்டது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/921/2021**

மேலும் 24.05.2021 முதல் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டதால் இரண்டாம் கட்டமாக கூடுதலாக பணியமர்த்தப்பட்ட 15 எண்ணிக்கையிலான வாகனங்கள் திரும்ப பெறப்பட்டது.

கொரோனா நோய் தொற்று பாதிப்பின் 2ம் அலை மிக தீவீரமான காரணத்தால் தமிழக அரசு தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு அமுல்படுத்தியதை தொடர்ந்து ஊரடங்கை மீறும் மக்களுக்கு அறிவுரை வழங்கவும், விதிகளை மீறி நடைபெறும் கடைகள் மற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பணிக்காக அமைக்கப்பட்ட அமலாக்க குழுவினரின் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டி Innova, Tavera, Xylo போன்ற வாகனங்களை வாடகை முறையில் பணியமர்த்த, தேர்தல் பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாக கொண்டும், தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலை புள்ளியின் அடிப்படையிலும் வாடகை தொகை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தோராய மதிப்பீடு கணக்கிடப்பட்டது.

| Sl. No | Purpose | Type of Vehicle | Total No of vehicle | Date of Deployment | Total No of days | Hire Charges per day per vehicle Exclu. GST) Rs. | Total Amount Rs. (Exclu .GST) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Zonal Enforcement Team | Innova | 15 Nos | 06.05.2021 to 31.05.2021 | 26 days | 3000/- (10 hrs 100 Kms=2500 +Extra 2hrs 250=3000) | 11,70,000 |
| | | Innova | 14 Nos | 14.05.2021to 24.05.2021 | 11days | 3000/- (10 hrs 100 Kms =2500 +Extra 2hrs 250=3000) | 4,62,000 |
| | | Tavera , Xylo Or Equivalent Vehicle | 1 | 14.05.2021to 24.05.2021 | 11 days | 2640/- (10 hrs 100 Km= 2200 + Extra 2hrs 440=2640) | 29040 |
| Total | | | | | | | 16,61,040/- |
| GST@5% | | | | | | | 83,052/- |
| Grand Total | | | | | | | 17,44,092 |

மேற்கண்ட அட்டவணையின்படி COVID-19 தடுப்பு பணியின் ஒரு பகுதியாக மண்டல அமலாக்க குழுவின் பயன்பாட்டிற்கென பணியமர்த்தப்படும் Innova, Xylo, Tavera வகை வாகனங்கள் 31.05.2021 வரையிலான காலத்திற்கு வாடகை முறையில் அமர்த்துவதற்கான தோராய செலவீனம் ரூ17,44,092/- (Inclu.GST@5%) என கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட விலை விகிதத்தில் 06.05.2021 முதல் Innova வாகனங்கள் 15 எண்ணிக்கையிலும் மற்றும் 14.05.2021 முதல் Innova வாகனங்கள் 14 எண்ணிக்கையிலும் Tavera அல்லது அதற்கு இணையான வாகனங்கள் 1 எண்ணிக்கையிலும் வாடகை முறையில் அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட விலை விகிதத்தில் Innova வாகனங்கள், Tavera அல்லது அதற்கு இணையான வாடகை முறையில் வழங்க சம்மதிக்கும் நிறுவனங்கள் மூலம் வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. கொரோனா வைரஸ் நோய் தொற்றின் தாக்கம் அதிகமாகி வரும் நிலையில் தமிழக அரசு முழு ஊரடங்கை அமல்படுத்தியுள்ளதால் ஊரடங்கை மீறும் மக்களுக்கு அறிவுரை வழங்கவும், விதிகளை மீறி நடைபெறும் கடைகள் மற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பணிக்காக அமைக்கப்பட்ட அமலாக்க குழுவினரின் பயன்பாட்டிற்கு 06.05.2021 முதல்31.05.2021 வரையிலான காலத்திற்கு 15 எண்ணிக்கையிலும் 14.05.2021 முதல் 24.05.2021 வரையிலான காலத்திற்கு 15 எண்ணிக்கையிலும் என 30 எண்ணிக்கையில் Innova மற்றும் Tavera, Xylo அல்லது அதற்கு இணையான வாகனத்தினை ரூ.17,44,092/- தோராய மதிப்பீட்டில் வாடகை முறையில் அமர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால், தேர்தல் பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாக கொண்டும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலை புள்ளியின் அடிப்படையிலும் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு விலை நிர்ணயம் செய்ததற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

| Type Of Vehicles (Air- conditioned) | 10 Hours, &100 Kms (Exclu.GST) | Extra Hour charges (Exclu.GST) | Extra KM charges (Exclu.GST) | Remarks |
|---|---|---|---|---|
| TAVERA, XYLO, TATA SUMO or equivalent | 2200.00 | 220.00 | 9.00 | Rates approved by the committee consist of RTO's , Police Officials and Tamilnadu Van owner Association Members |
| INNOVA | 2500 | 250.00 | 13.00 | |

3. 06.05.2021 முதல் 31.05.2021 வரையிலான காலத்திற்கு 15 எண்ணிக்கையிலும் 14.05.2021 முதல் 24.05.2021 வரையிலான காலத்திற்கு 15 எண்ணிக்கையிலும் என 30 எண்ணிக்கையில் Tavera, Xylo, Innova வகை வாகனங்கள் M/s Anantha Travels, M/s Jyothi Cabs, ஆகிய நிறுவனத்திடமிருந்து தோராய மதிப்பீடான ரூ.17,44,092/- செலவீனத்தில் வாடகை முறையில் பணியமர்த்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை பெற ஆணை வேண்டியும்,

4. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணி மேற்கொள்ளப்படுவதால், வாகனங்கள் வாடகைக்கு வழங்கும் நிறுவனங்களுடன் பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

5. இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

6. இனம் 1 முதல் 4 வரை ஏற்பின், இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் ரூ.17,44,092/- நிதி ஒதுக்கீடு செய்து வழங்க, நிதி ஆலோசகர் அவர்களை கோர அனுமதி வேண்டியும்,

<u>இ.பொ.து.ந.க.எண்.எம்1/921/2021</u>

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0961/2021

தீர்மானஎண்.500/2021 நாள்:08-06-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - கொரோனா வைரஸ் தடுப்பு பணி - கொரோனா நோய் தொற்று பாதித்த மக்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல “108 Ambulance “ வாகனம் பற்றாக்குறையாக உள்ள நிலையில் கொரோனா தொற்று நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் Covid Special Ambulance ஆக மாற்றம் செய்யப்பட்ட Innova, Tavera, Xylo போன்ற வாகனங்களில் பொருத்துவதற்கென 250 எண்ணிக்கையில் Revolving light-கள் பொருத்தும் பணிக்கென விலை புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை புள்ளி அளித்த திருவாளர்கள் M.M. Engineers நிறுவனத்தாரிடமிருந்து 52 எண்ணிக்கையில் Magnetic Type Tri Colour Revolving Light-களும் 198 எண்ணிக்கையில் Magnetic Type Blue colour Revolving Light-களும் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி.**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2020-ல் உலக சுகாதார நிறுவனம், “கொரோனா வைரஸ்” (Corona Virus)மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்ததை தொடர்ந்து தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கடந்த ஆண்டு மார்ச்-2020 –லிருந்து கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று பாதித்த மக்களுக்கு சிகிச்சை அளித்து அத் தொற்றிலிருந்து மீட்டு எடுப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில், தற்போது கொரோனா வைரஸ் பரவல் 2-வது அலை தீவிரமாக உள்ளதால், கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட மக்களை வீட்டில் இருந்து Screening Center, அல்லது Covid Care Center-க்கு அழைத்து செல்ல பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறை மூலம் Tempo Traveller மற்றும் Tourister அல்லது அதற்கு இணையான வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நோய் தொற்றின் தாக்கம் தீவிரமாக உள்ள நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல “108 Ambulance “வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று அதிவேகமாக பரவி வரும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமான காரணத்தினால், “108 Ambulance“ வாகனத்தின் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தற்போதுள்ள Ambulance வாகனங்கள் போதுமானதாக இல்லாததால், கொரோனா நோய் தொற்று பாதித்த நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பொது மக்களின் பயன்பாட்டிற்கு “ Ambulance “ வாகனங்களை வழங்க வேண்டி Innova, Tavera, Xylo போன்ற வாகனங்களை Covid Special Ambulance வாகனங்களாக மாற்றவும், இவ்வாகனங்களில், நோய் தொற்று பாதிக்கப்பட்ட மக்களை அழைத்து செல்லும் வகையில் வாகனத்தில் உட்புறம் உரிய தடுப்புகள் ஏற்படுத்தியும், Revolving Lamp -கள் பொருத்தியும் மற்றும் பொதுமக்கள் இவ்வாகனத்தினை ஆம்புலன்ஸ் வாகனம் என அறியும் வகையில் “கோவிட் மருத்துவ சிறப்பு அவசர ஊர்தி” என்ற Sticker-களை வாகனத்தின் நான்கு புறங்களில் ஒட்டியும் Covid Special Ambulance வாகனங்களாக பயன்படுத்த ஆணையர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனை செயல்படுத்திட தனியார் வாடகை கார் நிறுவனங்களிடமிருந்து Tavera , Xylo, Innova வகை வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்தி Ambulance -களாக பயன்படுத்திட தீர்மானிக்கப்பட்டு 250 எண்ணிக்கையில் வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாகனங்களை பொதுமக்கள் ஆம்புலன்ஸ் வாகனம் என அறியும் வண்ணம் இவற்றில் நீல நிறத்தில் மற்றும் மூன்று நிறங்களில் (Red, White, Blue) சுழலும் விளக்குகள் பொருத்திட தீர்மானிக்கப்பட்டது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0961/2021**

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால் Covid Special Ambulance வாகனங்களுக்கு தேவைப்படும் Magnetic Type Tri Colour Revolving Light-கள் மற்றும் Magnetic Type Blue colour Revolving Light கள் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டி இவ்வகை சுழலும் விளக்குகள் வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது இதில் கீழ்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலை புள்ளிகளை வழங்கியுள்ளனர்.

| Sl. No | Description | M/s M.M. Engineers& Agencies | | | M/s ANS Agencies | | | .M/s Effolresense | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Supply of Revolving Light- Magnetic Type (Blue Colour) | Basic Rate per Unit Rs. | GST@ 18% Rs. | Total Amount Rs. | Basic Rate per Unit Rs. | GST@ 18% Rs. | Total Amount Rs. | Basic Rate per Unit | GST@ 18% | Total Amount |
| | | 3100 | 558/- | 3658/- | 3400/- | 612/- | 4012 | 3550/- | 639/- | 4189 |
| 2. | Supply of Revolving Light- Magnetic Type (Tri Colour (Red, White, Blue)) | 4800/- | 864/- | 5664/- | 5100/- | 918/- | 6018/- | 5250/- | 945/- | 6195/- |

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். M.M. Engineers நிறுவனத்தார் குறைந்த விலை புள்ளி வழங்கியிருந்த நிலையில் இந்நிறுவனத்தாரை மேலும் விலை குறைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது

திருவாளர்கள். M.M. Engineers நிறுவனத்தார் ஏற்கனவே Tamil Nadu Motor Vehicle Maintenance Department-க்கு மற்றும் விழுப்புரம் மாவட்ட காவல் துறைக்கு வழங்கியுள்ள விலையினை விட குறைவாக விலை புள்ளி வழங்கியுள்ளதாகவும், எனவே தங்களால் மேலும் விலைகுறைப்பு வழங்க இயலவில்லை எனவும் தெரிவித்து ஏற்கனவே வழங்கியுள்ள விலை புள்ளியினை ஏற்குமாறும் தெரிவித்துள்ளனர்.

திருவாளர்கள். M.M. Engineers நிறுவனத்தார் இறுதியாக தெரிவித்துள்ள விலை புள்ளியின் படி Magnetic Type Blue colour Revolving Light ஒன்றின் விலை ரூ 3658/- (Inclu. GST@18%) மற்றும் Magnetic Type Tri Colour Revolving Light ஒன்றின் விலை ரூ.5664/. ஆகும்.

இந்நிலையில் 12.05.2021 அன்று 235 எண்ணிக்கையிலான Covid Special Ambulance வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது. இதனை தொடர்ந்து வரும் நாட்களில் தேவையின் அடிப்படையில் மட்டும் வாகனங்கள் பணியமர்த்தப்படவுள்ளதால், முதற்கட்டமாக வாகனத்தின் மேற்கூரையில் பொருத்துவதற்கு Revolving Light-கள் 218 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, திருவாளர்கள். M.M. Engineers நிறுவனத்தார் வழங்கிய இறுதி விலை புள்ளியினை ஏற்று இந்நிறுவனத்தாரிடமிருந்து Magnetic Type Tri Colour Revolving Light ஒன்றின் விலை ரூ.5664/- வீதம் 37 எண்ணிக்கையிலான Tri Colour Revolving Light- கள் ரூ2,09,568/- (Inclu. GST@18%) மதிப்பீட்டிலும், Magnetic Type Blue colour Revolving Light ஒன்றின் விலை ரூ3,658/- வீதம் 181 எண்ணிக்கையிலான Blue Colour Revolving Light –கள் ரூ.6,62,098/- மதிப்பீட்டிலும் என மொத்தம் 218 எண்ணிக்கையிலான Revolving Light –கள் ரூ.8,71,666/- (Inclu. GST@18%) (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து அறுநூற்று அறுபத்தி ஆறு மட்டும்) மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0961/2021**

இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென மற்றவை என்னும் தலைப்பின் கீழ் (others) வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-06 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் நிதி ஏதும் ஒதுக்கப்படாத நிலையில் போதிய நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. கொரோனா வைரஸ் நோய் தொற்றின் தாக்கம் அதிகமாகி வரும் நிலையில் ஆம்புலன்ஸ் வாகனங்களின் கூடுதல் தேவைக்காக Innova/Tavera/ Xylo வகை வாகனங்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து வாடகைக்கு அமர்த்தி Covid Special Ambulance- ஆக பயன்படுத்தி வரப்படும் வாகனங்களை ஆம்புலன்ஸ் வாகனம் என பொதுமக்கள் அறிந்திடும் வகையில் வாகனத்தின் மேல் பொருத்திட 218 எண்ணிக்கையில் Revolving Light-கள் ரூ.8,71,666/- (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து அறுநூற்று அறுபத்தி ஆறு மட்டும்) மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால் Covid Special Ambulance வாகனங்களுக்கு விலை புள்ளி கோரி Revolving Light-கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

3. கோவிட் மருத்துவ சிறப்பு அவசர ஊர்தி (Covid Special Ambulance) மேல் பொருத்திட Revolving Light-கள் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்திருந்த திருவாளர்கள். M.M. Engineers நிறுவனத்தாரிடமிருந்து Magnetic Type Tri Colour Revolving Light ஒன்றின் விலை ரூ.5664/- வீதம் 37 எண்ணிக்கையிலான Tri Colour Revolving Light-கள் ரூ2,09,568/-க்கும் (Inclu. GST@18%) மற்றும் Magnetic Type Blue colour Revolving Light ஒன்றின் விலை ரூ3,658/- வீதம் 181 எண்ணிக்கையிலான Blue Colour Revolving Light –கள் ரூ.6,62,098/-க்கும் ஆக மொத்தம் ரூ.8,71,666/- (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து அறுநூற்று அறுபத்தி ஆறு மட்டும்) மதிப்பீட்டில் 218 எண்ணிக்கையிலான Revolving Light-கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை பெற ஆணை வேண்டியும்

4. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணி மேற்கொள்ளப்படுவதால் வாகனங்கள் வாடகைக்கு வழங்கும் நிறுவனங்களுடன் பாதுகாப்பு தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

5. இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென மற்றவை என்னும் தலைப்பின் கீழ் (others) வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-06 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் நிதி ஏதும் ஒதுக்கப்படாத நிலையில் போதிய நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

6. இனம் 1 முதல் 5 வரை ஏற்பின், இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென மற்றவை என்னும் தலைப்பின் கீழ் (others) வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-06 என்னும் தலைப்பின் கீழ் ரூ.8,71,666/- நிதி ஒதுக்கீடு செய்து வழங்க, நிதி ஆலோசகர் அவர்களை கோர அனுமதி வேண்டியும்,

**<u>இ.பொ.து.ந.க.எண்.எம்1/0961/2021</u>**

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்),நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019**

**தீர்மானஎண்.501/2021** **நாள்:08-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-5, கோட்டம்-60ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்துவரும் நிலையில், 05.08.2003 அன்று காலமான தனது கணவர் திரு.கோட்டைய்யா, அவர்களின் வாரிசுதாரர்களின் ஒருவரான செல்வி.கிருஷ்டி, என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டி தவறான தகவல்கள் அளித்தது தொடர்பாக திருமதி.எம்.கோட்டம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்-60, மண்டலம்-5 அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு - இறுதி ஆணை வழங்கப்பட்டது - தண்டனையை ஆட்சேபித்து தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-60ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்துவரும் நிலையில், 05.08.2003 அன்று காலமான தனது கணவர் திரு.கோட்டைய்யா, அவர்களின் வாரிசுதாரர்களில் ஒருவரான செல்வி.கிருஷ்டி, என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டி தவறான தகவல்கள் அளித்தது தொடர்பாக திருமதி.எம்.கோட்டம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்-60, மண்டலம் -5 அவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 ஆம் ஆண்டு துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கி விளக்கம் பெறப்பட்டது.

**குற்றச்சாட்டு 1:**

மண்டலம்-5, கோட்டம்-60ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் தாங்கள், தங்கள் கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் காலமானதால், தங்களின் மகள் செல்வி.எம்கிருஷ்டி அவர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை பெறுவதற்காக, தாங்கள் அரசுபணியில் பணிபுரிந்து வருவதை மறைத்து தடையின்மை சான்றிதழ் வழங்கியுள்ளீர்.

**குற்றச்சாட்டு 2:**

தங்களது மகளான செல்வி.எம்.கிருஷ்டி அவர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை பெறும் நோக்கத்துடன், 26.06.2008 நாளிட்ட 20 ரூபாய் முத்திரைத்தாளில் தாங்கள் மத்திய / மாநில அரசு துறைகளில் பணிபுரியவில்லை என தவறான உறுதிமொழி பத்திரத்தை சமர்ப்பித்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு 3:**

மேற்கண்ட செயல்களின் மூலம் தாங்கள் உள்நோக்கத்துடன் அரசை ஏமாற்றி, தங்களது மகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாங்க தவறான தகவலை அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு 4:**

மேற்கண்ட செயல்கள், பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர் நடத்தை துணை விதிகள் 1983ல், விதி20ஐ மீறிய செயலாகும்.

**குற்றச்சாட்டு 1ற்கு விளக்கம்**

எனது கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும் போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனக்கு 5 மகள்கள் உள்ளனர். எனது கணவர் இறந்த சமயம் 3 மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றுவிட்டது. மீதம் உள்ள 2 மகள்களுக்கும் திருமணம் நடைபெறவில்லை. எனது கணவர் இறந்த சமயம் எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனக்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கு மொழியில் போடுவேன்.

எனது கணவர் இறந்த செய்தி கேட்டு எனது கணவருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனது கணவரின் ஈமச்சடங்கிற்கு ரூ.5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது கையொப்பம் பெற்று சென்றனர். மேலும் அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

**பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019**

நான் துப்புரவு ஆய்வாளரிடம் கையெழுத்து போட்ட வெள்ளை, தாளில் எனது கடைசி மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி துப்புரவு ஆய்வாளர் விண்ணப்பம் செய்துள்ளனர். அலுவலகத்திலிருந்து எனது கணவரின் இறப்பு சான்றிதழ், மகளின் கல்வி தகுதி சான்றிதழ் போன்ற இதர ஆவணங்களை எடுத்து வர கூறினார். அதனை ஏற்று எனது மகளும் ஆவணங்களை எடுத்து சென்றார். அதனை சரிபார்த்து கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, தற்சமயம் எவ்விதமான குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் மாசற்ற முறையில் பணியாற்றி வருகிறார்.

எனக்கு படிப்பறிவு கிடையாது, எழுதப்படிக்க தெரியாது, அரசு விதிமுறைகள் தெரியாது. எனவே, மேற்கண்ட எனது பதிலை ஏற்று, இந்த குற்றச்சாட்டிலிருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 2ற்கு விளக்கம்**

எனது கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனக்கு 5 மகள்கள் உள்ளனர். எனது கணவர் இறந்த சமயம் 3 மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றுவிட்டது, மீதம் உள்ள 2 மகள்களுக்கு திருமணம் நடைபெறவில்லை. எனது கணவர் இறந்த சமயம் எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனக்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும தெலுங்கு மொழியில் போடுவேன்.

எனது கணவர் இறந்த செய்தி கேட்டு எனது கணவருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனது கணவரின் ஈமச்சடங்கிற்கு ரூ-5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது கையொப்பம் பெற்று சென்றனர். மேலும் அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

நான் துப்புரவு ஆய்வாளரிடம் கையெழுத்த போட்ட வெள்ளை தாளில் எனது கடைசி மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி துப்புரவு ஆய்வாளர் விண்ணப்பம் செய்துள்ளனர். அலுவலகத்திலிருந்து எனது கணவரின் இறப்பு சான்றிதழ், மகளின் கல்வி தகுதி சான்றிதழ் போன்ற இதர ஆவணங்களை எடுத்து வர கூறினார். அதேபோன்று எனது மகளும் ஆவணங்களை எடுத்து சென்றார். அதனை சரிபார்த்து கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, தற்சமயம் எவ்விதமான குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் மாசற்ற முறையில் பணியாற்றி வருகிறார்.

எனக்கு படிப்பறிவு கிடையாது, எழுதப்படிக்க தெரியாது, அரசு விதிமுறைகள் தெரியாது. எனவே, மேற்கண்ட எனது பதிலை ஏற்று, இந்த குற்றச்சாட்டிலிருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 3 மற்றும் 4ற்கு விளக்கம்**

நான் சென்னை மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் சேர்ந்து, 1997ல் பணியில் நிரந்தரம் செய்யப்பட்டு, தொடர்ந்து எந்தவிதமான குற்றச்சாட்டுக்கும் ஆட்படாமல் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது, தெலுங்கில் மொழியில் மட்டும் கையொப்பம் இடுவேன். உயர் அலுவலர் இடும் பணியினை செவ்வனே செய்து வருகிறேன். நான் சென்னை மாநகராட்சி விதி 1983ன் ஆணை விதி 20ஐ எந்த ஒரு கால கட்டத்திலும் மீறியது இல்லை.

நான், எனது மகள்கள் அனைவருக்கும் திருமணம் செய்துவிட்டேன். அவர்கள் தனித்தனியே அவர்களின் கணவருடன் வசித்து வருகிறார்கள். நான் தனியாக வாழ்ந்து வருகிறேன். மாநகராட்சியில் ஊதியம் மற்றும் எனது கணவரின் ஒய்வூதியம் பெறுவரை தவிர வேறு எவ்விதமான வருமானமும் இல்லை.

எனக்கு உடல்நிலை சரியில்லை, ரத்தகொதிப்பு, சக்கரை நோய் உள்ளது. மருத்துவரிடம் காட்டி மருந்து, மாத்திரை சாப்பிட்டு வருகிறேன். இன்னும் சுமார் 3 ஆண்டுகளில் ஓய்வு பெற உள்ளேன். எனவே, எனது பதிலை ஏற்று, இம்முறை மன்னித்து என்னையும் எனது குடும்பத்தினையும் பாதுகாக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019**

**குற்றச்சாட்டு 1ற்கான விசாரணை அறிக்கை**

தனியருக்கு தெலுங்கு மொழி பேச மட்டுமே தெரியும் என்பதாலும், கணவர் இறந்த பின்னர் துப்புரவு ஆய்வாளர் மூலமே அனைத்து பயன்கள் மற்றும் கருணை அடிப்படையில் மகளுக்கு பணி பெற உதவி செய்ததாகவும் தெரிவித்துள்ளார். படிப்பறிவு இல்லாத இவருக்கு தவறான வழிநடத்துதலின் காரணமாகவே மகளுக்கு கருணை அடிப்படையில் பணிபெற்றிட தடையின்மை உறுதி பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளார். இதில் தனியரின் அறியாமை தெளிவாக உணரப்படுகிறது. **குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு 2ற்கான விசாரணை அறிக்கை**

படிப்பறிவு இல்லாத இவருக்கு தவறான வழிநடத்துதலின் காரணமாகவே மகளுக்கு கருணை அடிப்படையில் பணிபெற்றிட தடையின்மை உறுதி பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளார். இதில் தனியரின் அறியாமை தெளிவாக உணரப்படுகிறது. **குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு 3ற்கான விசாரணை அறிக்கை**

படிப்பறிவு இல்லாத இவருக்கு தவறான வழிநடத்துதலின் காரணமாகவே மகளுக்கு கருணை அடிப்படையில் பணிபெற்றிட தடையின்மை உறுதி பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளார். தனியர் மிகவும் பணக்கஷ்டத்தில் ஏழ்மையாக வாழ்ந்து, தனது ஐந்து மகள்களை வளர்த்து இருக்கும் சமயம் கணவர் இறந்து விட்டதால், செய்வதறியாமல், அரசாங்கத்தை ஏமாற்றும் நோக்கமில்லாமலும், இது போல் ஒரு அரசாணை இருப்பது தெரியாமல் தனது மகளுக்கு கருணை அடிப்படையிலான பணி வாங்கியுள்ளார். தவறாக அவர் வழிநடத்தப்பட்டுள்ளார். **குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு 4ற்கான விசாரணை அறிக்கை**

தனியரின் அறியாமை தெளிவாக தெரிந்தாலும் **குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**தனியரின் கூடுதல் விளக்கம்**

நான் தங்களிடம் பணிவுடன் தெரிவித்துக்கொள்வது யாதெனில், எனது கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார் என் 5 பெண்களுக்கு திருமணம் ஆகவில்லை. எனது கணவரின் ஈமசடங்கிற்கு துப்புரவு ஆய்வாளர் வந்து அரசு உதவி தொகை ரூ.5000/- முன்பணம் வழங்கிவிட்டு, 4 முதல் 5 வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுச் சென்றார். அதில் ஒன்றில் என் மகளுக்கு வாரிசு அடிப்படையில் பணி நியமனம் வேண்டி அவரே கடிதம் சமர்ப்பித்துள்ளார். நான் தவறான தகவலை தந்து, எனது மகளுக்கு வாரிசு அடிப்படையில் பணி நியமனம் பெற்றதாக கூறி, என்னை தற்காலிக பணி நீக்கம் செய்து, விசாரணை அலுவலரை நியமித்து விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையை அளித்துள்ளனர். அதன் மீது எனது கூடுதல் விளக்கம் பின்வருமாறு:-

1. என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு பதில் அளிப்பதற்கு ஏதுவாக 6 ஆவணங்கள் கோரியிருந்தேன். இதுநாள் வரை எந்த ஒரு ஆவணமும் வழங்கப்படவில்லை.
2. மேலும், நான் 26.06.2019 அன்று விசாரணை அலுவலருக்கு சமர்ப்பித்த கடிதத்தில் நான் 3ம் வகுப்பு தேர்ச்சி பெற்றேன் என்றும், போதிய அறிவு இல்லை என்றும், விசாரணைக்கு உதவியாக வழக்கறிஞர் நியமித்துக் கொள்ள அனுமதி கோரி கடிதம் சமர்ப்பித்தேன். அதற்கு பதில் ஏதுவும் வழங்கப்படவில்லை.
3. இந்நிலையில் வழக்கறிஞரை விசாரணைக்கு வைத்துக் கொள்ள அனுமதி கோரிய கடிதம் குறித்து விவரம் கேட்க திடக்கழிவு மேலாண்மை துறையை அணுகி கேட்ட போது, திருமதி.வித்யா, உதவி பொறியாளர் விசாரணை அலுவலர் அவர்கள் என்னையும், எனது மகளை உட்கார சொல்லி என்ன நடந்தது என வாய்மொழியாக கேட்டறிந்தார். எந்த ஒரு கையொப்பமும் பெறப்படவில்லை.

**பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019**

4. கடந்த 01.10.2019 நாளிட்ட விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை கடிதம் 08.11.2019 அன்று அலுவலகத்திற்கு வரவழைத்து தந்தனர். அதில் விசாரணை முடிக்கப்பட்டு விசாரணை அலுவலரின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. விசாரணை அலுவலர் விசாரணை முடித்த பிறகு ஒரு கையொப்பம் என்னிடம் மற்றும் எனது மகளிடம் பெறப்படவில்லை. குறிப்பாக விசாரணையில் ஆஜரானதற்கு வருகை பதிவேட்டில் கையொப்பமும், விசாரணை நடைபெற்ற பிறகு அதன் சாராம்சத்தில் எனது கையொப்பம் பெறப்படவில்லை.
5. நிர்வாக தரப்பு சாட்சியான செயற்பொறியாளர் திரு.காமராஜ் அவர்களிடம் குறுக்கு விசாரணை ஏதுவும் என்னால் செய்யப்படவில்லை.
6. விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை 26.07.2019 அன்று கையொப்பமிட்டு அளித்துள்ளனர் என்று விசாரணை நடைபெற்றுது. எந்த இடத்தில் நடைபெற்றது என்ற விவரம் எதுவும் இல்லை, அதற்கான கடிதம் வழங்கப்படவில்லை. மேலும் விசாரணை குறித்த கடிதம் எனக்கு வழங்கப்படவில்லை.
7. நான் துப்புரவு பணியாளர், விசாரணை அலுவலர் அவர்களின் 26.07.2019 நாளிட்ட விசாரணை அறிக்கை கடிதத்தில் துப்புரவு மேற்பார்வையாளர் என குறிப்பிட்டு கடிதம் தந்துள்ளனர்.

**குற்றச்சாட்டு 1ற்கான கூடுதல் விளக்கம்**

எனது கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனக்கு 5 மகள்கள் உள்ளனர். எனது கணவர் இறந்த சமயம் 3 மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றுவிட்டது. மீதம் உள்ள 2 மகள்களுக்கு திருமணம் நடைபெறவில்லை. எனது கணவர் இறந்த சமயம் எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனக்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கு மொழியில் போடுவேன்.

எனது கணவர் இறந்த செய்தி கேட்டு எனது கணவருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனது கணவரின் ஈமச்சடங்கிற்கு ரூ.5000/- ரொக்கமாக தந்தனர். மேலும், அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது கையொப்பம் பெற்று சென்றனர். மேலும் அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

நான் துப்புரவு ஆய்வாளரிடம் கையெழுத்து போட்ட வெள்ளை தாளில் எனது கடைசி மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி துப்புரவு ஆய்வாளர் விண்ணப்பம் செய்துள்ளனர். அலுவலகத்திலிருந்து எனது கணவரின் இறப்பு சான்றிதழ், மகளின் கல்வி தகுதி சான்றிதழ் போன்ற இதர ஆவணங்களை எடுத்து வர கூறினர். அதனை ஏற்று எனது மகளும் ஆவணங்களை எடுத்து சென்றார். அதனை சரிபார்த்து கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, தற்சமயம் எவ்விதமான குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் மாசற்ற முறையில் பணியாற்றி வருகிறார். நானும் பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநாள் வரை எவ்விதமான குற்றச்சாட்டுக்கும் ஆட்படாமல் உயர் அதிகாரி இடும் பணியினை மேற்கொண்டு வருகிறேன்.

எனக்கு படிப்பறிவு கிடையாது, எழுதப்படிக்க தெரியாது, அரசு விதிமுறைகள் தெரியாது. எனவே, மேற்கண்ட எனது பதிலை ஏற்று, இந்த குற்றச்சாட்டிலிருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 2ற்கான கூடுதல் விளக்கம்**

எனது கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனக்கு 5 மகள்கள் உள்ளனர். எனது கணவர் இறந்த சமயம் 3 மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றுவிட்டது, மீதம் உள்ள 2 மகள்களுக்கு திருமணம் நடைபெறவில்லை. எனது கணவர் இறந்த சமயம் எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனக்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கு மொழியில் போடுவேன்.

எனது, கணவர் இறந்த செய்தி கேட்டு எனது கணவருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனத கணவரின் ஈமச்சடங்கிற்கு ரூ.5000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது கையொப்பம் பெற்று சென்றனர். மேலும் அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

நான் துப்புரவு ஆய்வாளரிடம் கையெழுத்து போட்ட வெள்ளை தாளில் எனது கடைசி மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி துப்புரவு ஆய்வாளர் விண்ணப்பம் செய்துள்ளனர். அலுவலகத்திலிருந்து எனது கணவரின் இறப்பு சான்றிதழ், மகளின் கல்விதகுதி சான்றிதழ் போன்ற இதர ஆவணங்களை எடுத்து வர கூறினார். அதேபோன்று எனது மகளும் ஆவணங்களை எடுத்து சென்றார். அதனை சரிபார்த்து கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, தற்சமயம் எவ்விதமான குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் மாசற்ற முறையில் பணியாற்றி வருகிறார். நான் துப்புரவு பணியாளர், விசாரணை அலுவலர் அவர்களின் 26.07.2019 நாளிட்ட விசாரணை அறிக்கை கடிதத்தில் துப்புரவு மேற்பார்வையாளர் என குறிப்பிட்டு கடிதம் தந்துள்ளனர்.

எனக்கு படிப்பறிவு கிடையாது, எழுதப்படிக்க தெரியாது, அரசு விதிமுறைகள் தெரியாது. எனவே, மேற்கண்ட எனது பதிலை ஏற்று, இந்த குற்றச்சாட்டிலிருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குற்றச்சாட்டு 3 மற்றும் 4ற்கான கூடுதல் விளக்கம்</u>**

நான் சென்னை மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் சேர்ந்து 1997ல் பணியில் நிரந்தரம் செய்யப்பட்டு, தொடர்ந்து எந்தவிதமான குற்றச்சாட்டுக்கும் ஆட்படாமல் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது, தெலுங்கில் மொழியில் மட்டும் கையொப்பம் இடுவேன். உயர் அலுவலர் இடும் பணியினை செவ்வனே செய்து வருகிறேன். நான் சென்னை மாநகராட்சி விதி 1983-ன் துணை விதி 20ஐ எந்த ஒரு கால கட்டத்திலும் மீறியது இல்லை.

நான், எனது மகள்கள் அனைவருக்கும் திருமணம் செய்துவிட்டேன். அவர்கள் தனித்தனியே அவர்களின் கணவருடன் வசித்து வருகிறார்கள். நான் தனியாக வாழ்ந்து வருகிறேன். மாநகராட்சியில் ஊதியம் மற்றும் எனது கணவரின் ஓய்வூதியம் பெறுவதை தவிர வேறு எந்தவிதமான வருமானமும் இல்லை.

எனக்கு உடல்நிலை சரியில்லை, ரத்தகொதிப்பு, சர்க்கரை நோய் உள்ளது. மருத்துவரிடம் காட்டி மருந்து, மாத்திரை சாப்பிட்டு வருகிறேன். இன்னும் சுமார் 3 ஆண்டுகளில் ஓய்வு பெற உள்ளேன். எனவே, எனது பதிலை ஏற்று, இம்முறை மன்னித்து என்னையும் எனது குடும்பத்தினையும் பாதுகாக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி.எம்.கோட்டம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்-60, மண்டலம்-5 அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் விசாரணை அலுவலர் அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக அளித்துள்ள அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 22.12.2020 நாளிட்ட செயல் முறை ஆணையின்படி, இறுதி ஆணையாக, **கட்டாய ஓய்வு *(Compulsory Retirement from the Corporation service)*** வழங்கி ஆணையிடப்பட்டது.

மேற்படி, இறுதியாணை பெற்றுக்கொண்ட தனியர், தனது மேல் முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களுக்கு 22.12.2020 அன்று கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளார்.

**<u>தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்</u>**

"பார்வையில் கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு கீழ்க்கண்டவாறு எனது தாழ்மையான விளக்கத்தினை சமர்ப்பிக்கிறேன். எனக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் எனது மகளின் பெயர்க்கு முன்னாள் இனிசியல் கிடையாது, தவறாக "எம்" என குறிப்பிடப்பட்டுள்ளது. இணைப்பு -2ல் உண்மையை மறைத்து கருணை அடிப்படையில் மகளுக்கு பணி வழங்க 15.12.2017 அன்று உறுதிமொழி பத்திரம் தவறான தடையின்மை சான்றிதழ் வழங்கியதாக குறிப்பிட்டுள்ளது. 13.12.2017 அன்று உறுதிமொழி ஏதும் கூறவில்லை. இணைப்பு-3ல் நாள்.30.11.2007ல் கடிதம் வழங்கியதாகவும், எனது மகளுக்கு வழங்கிய குற்றச்சாட்டில் 03.12.2007ல் வழங்கியதாக வேறு வேறு நாள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் விசாரணை நடைபெற்ற நாளில் விசாரணையின் அன்றாட நிகழ்ச்சிகளின் அறிக்கையை நான் கேட்டும் எனக்கு வரவில்லை. மேலும் நான் தினக்கூலி அடிப்படையில் கடந்த 9 ஆண்டுகள் பணியாற்றி வந்தேன் பின்னர் எனது பணி 1998ம் ஆண்டு நிரந்தரம் செய்யப்பட்டது.

**குற்றச்சாட்டு எண்.1 ற்கு மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்:**

எனது கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனக்கு 5 மகள்கள் உள்ளனர். எனது கணவர் இறந்த சமயம் 3 மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றுவிட்டது, மீதம் உள்ள 2 மகள்களுக்கு திருமணம் நடைபெறவில்லை. எனது கணவர் இறந்த சமயம் எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனக்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கு மொழியில் போடுவேன்.

எனது கணவர் இறந்த செய்தி கேட்டு எனது கணவருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனது கணவரின் ஈமச்சடங்கிற்கு ரூ.5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது கையொப்பம் பெற்று சென்றனர். மேலும் அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

நான் துப்புரவு ஆய்வாளரிடம் கையெழுத்து போட்ட வெள்ளை தாளில் எனது கடைசி மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி துப்புரவு ஆய்வாளர் விண்ணப்பம் செய்துள்ளனர். அலுவலகத்திலிருந்து எனது கணவரின் இறப்பு சான்றிதழ், மகளின் கல்வி தகுதி சான்றிதழ் போன்ற இதர ஆவணங்களை எடுத்து வர கூறினார். அதனை ஏற்று எனது மகளும் ஆவணங்களை எடுத்து சென்றார். அதனை சரிபார்த்து கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, தற்சமயம் எவ்விதமான குற்றச்சாட்டுக்கும் ஆளாகமல் மாசற்ற முறையில் பணியாற்றி வருகிறார்.

எனக்கு படிப்பறிவு கிடையாது, எழுதப்படிக்க தெரியாது, அரசு விதிமுறைகள் தெரியாது. எனவே, மேற்கண்ட எனது பதிலை ஏற்று, இந்த குற்றச்சாட்டிலிருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண்.2 ற்குமேல்முறையீட்டு மனுவின் விளக்கம்:**

எனது கணவர் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனக்கு 5 மகள்கள் உள்ளனர். எனது கணவர்இறந்த சமயம் 3 மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றுவிட்டது, மீதம் உள்ள 2 மகள்களுக்கு திருமணம் நடைபெறவில்லை. எனது கணவர் இறந்த சமயம் எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனக்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கு மொழியில் போடுவேன்.

எனது கணவர் இறந்த செய்தி கேட்டு எனது கணவருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனது கணவரின் ஈமச்சடங்கிற்கு ரூ.5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது கையொப்பம் பெற்று சென்றனர். மேலும் அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

நான் துப்புரவு ஆய்வாளரிடம் கையெழுத்து போட்ட வெள்ளை தாளில் எனது கடைசி மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி துப்புரவு ஆய்வாளர் விண்ணப்பம் செய்துள்ளனர். அலுவலகத்திலிருந்து எனது கணவரின் இறப்பு சான்றிதழ், மகளின் கல்வி தகுதி சான்றிதழ் போன்ற இதர ஆவணங்களை எடுத்து வர கூறினார். அதேபோன்று எனது மகளும் ஆவணங்களை எடுத்து சென்றார். அதனை சரிபார்த்து கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, தற்சமயம் எவ்விதமான குற்றச்சாட்டுக்கும் ஆளாகமல் மாசற்ற முறையில் பணியாற்றி வருகிறார்.

எனக்கு படிப்பறிவு கிடையாது, எழுதப்படிக்க தெரியாது, அரசு விதிமுறைகள் தெரியாது. எனவே, மேற்கண்ட எனது பதிலை ஏற்று, இந்த குற்றச்சாட்டிலிருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு எண்.3 ற்குமேல்முறையீட்டு மனுவின் விளக்கம்:**

நான் சென்னை மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் சேர்ந்து, 1997ல் பணியில் நிரந்தரம் செய்யப்பட்டு, தொடர்ந்து எந்தவிதமான குற்றச்சாட்டுக்கும் ஆட்படாமல் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது, தெலுங்கில் மொழியில் மட்டும் கையொப்பம் இடுவேன். உயர் அலுவலர் இடும் பணியினை செவ்வனே செய்து வருகிறேன். நான் சென்னை மாநகராட்சி விதி 1983-ன் ஆணை விதி 20ஐ எந்த ஒரு கால கட்டத்திலும் மீறியது இல்லை.

நான், எனது மகள்கள் அனைவருக்கும் திருமணம் செய்துவிட்டேன். அவர்கள் தனித்தனியே அவர்களின் கணவருடன் வசித்து வருகிறார்கள். நான் தனியாக வாழ்ந்து வருகிறேன். மாநகராட்சியில் ஊதியம் மற்றும் எனது கணவரின் ஓய்வூதியம் பெறுவதை தவிர வேறு எவ்விதமான வருமானமும் இல்லை.

எனக்கு உடல்நிலை சரியில்லை, ரத்தகொதிப்பு, சக்கரை நோய் உள்ளது. மருத்துவரிடம் காட்டி மருந்து, மாத்திரை சாப்பிட்டு வருகிறேன். இன்னும் சுமார் 3 ஆண்டுகளில் ஓய்வு பெற உள்ளேன். எனவே, எனது பதிலை ஏற்று, இம்முறை மன்னித்து என்னையும் எனது குடும்பத்தினையும் பாதுகாக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்."

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், திருமதி.எம்.கோட்டம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்-60, மண்டலம் -5 (தற்காலிக பணிநீக்கம்) அவர்கள் மண்டலம்-5, கோட்டம்-60ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்துவரும் நிலையில், 05.08.2003 அன்று காலமான தனது கணவர் திரு.கோட்டைய்யா, அவர்களின் வாரிசுதாரர்களின் ஒருவரான செல்வி.கிருஷ்டி, என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டி தவறான தகவல்கள் அளித்தது தொடர்பாக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் **கட்டாய ஓய்வு *(Compulsory Retirement from the Corporation service)*** என வழங்கப்பட்டுள்ள தண்டனையை 17.11.2020 அன்று பெற்றுக்கொண்டு, தனக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை ஆட்சேபித்து தனது மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களுக்கு 22.12.2020 அன்று சமர்ப்பித்துள்ளார்.

தனியர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு புதிதாக விளக்கங்கள் / காரணங்கள் ஏதும் அளிக்கவில்லை. மேலும், தனியர் வகுப்பு 4ஐ சார்ந்த பணியாளர் என்பதால் இவரது மேல்முறையீட்டு மனுவை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

எனவே, திருமதி.எம்.கோட்டம்மா, துப்புரவு பணியாளர், கோட்டம்-60, மண்டலம்-5 (தற்காலிக பணிநீக்கம்) அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக வழங்கப்பட்டுள்ள **கட்டாய ஓய்வு தண்டனையை *"Compulsory Retirement from the Corporation service"*** எதிர்த்து தனியர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனு மீது உரிய முடிவு எடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி - மன்றம், அவர்களுக்கு சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 05.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"Comfirmed the punishment, என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019**

**தீர்மானஎண்.502/2021** **நாள்:08-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-5, கோட்டம்-60ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்துவரும் நிலையில், 05.08.2003 அன்று காலமான தங்களது தந்தை திரு.கோட்டைய்யா, அவர்களின் வாரிசுதாரர்களின் ஒருவரான கிருஷ்டி, கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டி தவறான தகவல்கள் அளித்து கருணை அடிப்படையில் பணி ஆணை பெற்றது தொடர்பாக திருமதி.எம். கிருஷ்டி, பெண் துப்புரவு பணியாளர், மருத்துவசேவைகள் துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5, புளியந்தோப்பு மருத்துவமனை அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு - இறுதி ஆணை வழங்கப்பட்டது - தண்டனையை ஆட்சேபித்து தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-60ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்துவரும் நிலையில், 05.08.2003 அன்று காலமான தங்களது தந்தை திரு.கோட்டைய்யா, அவர்களின் வாரிசுதாரர்களின் ஒருவரான தாங்கள், கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டி தவறான தகவல்கள் அளித்து கருணை அடிப்படையில் பணி ஆணை பெற்றது தொடர்பாக திருமதி.எம். கிருஷ்டி, பெண் துப்புரவு பணியாளர், மருத்துவசேவைகள் துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5, புளியந்தோப்பு மருத்துவமனைஅவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 ஆம் ஆண்டு துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கி விளக்கம் பெறப்பட்டது.

**குற்றச்சாட்டு 1:**

திருமதி.எம்.கிருஷ்டி, பெண் துப்புரவு பணியாளர், மருத்துவ சேவைகள் துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5 (தற்போது புளியந்தோப்பு மருத்துவமனை) ஆகிய தாங்கள் கருணை அடிப்படையில் வேலை பெற தங்களின் தாயார் திருமதி.கோட்டம்மா, பெருநகர சென்னை மாநகராட்சியில், துப்புரவு பணியாளராக மண்டலம்-5, கோட்டம்-60ல் பணிபுரிகிறார்கள் என்கின்ற உண்மையை மறைத்து வேலை பெற்றுள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு 2:**

தங்களின் தாயார், அரசுப்பணியில் பணிபுரிந்து வருகின்ற நிலையில், 03.12.2007 நாளிட்ட கருணை அடிப்படையில் வேலை வேண்டி தாங்கள் தவறான தகவல்கள் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு 3:**

மேற்கண்ட செயல்கள், பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர் நடத்தை துணைவிதிகள் 1983ல், விதி 20ஐ மீறிய செயலாகும்.

**குற்றச்சாட்டு 1ற்கு விளக்கம்**

எனது தகப்பனார் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனது தகப்பனார்க்கு என்னுடன் சேர்ந்து 5 மகள்கள் உள்ளனர். அதில் நான்தான் கடைசி, எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது 3 பெண்களுக்கு திருமணம் செய்துள்ளார். எனக்கும் எனது அக்காவிற்கும் திருமணம் ஆகவில்லை. மேலும் எனது தகப்பனார் இறந்தபோது, எனது குடும்பத்தினர் அனைவரும் நிலை குலைந்த நிலையில் இருந்தோம். எனது தாயும் அதிகம் படிப்பு அறிவு இல்லாதவர், எழுதப்படிக்க தெரியாது.

எனது தகப்பனார் மரணம் கேட்டு எனது தகப்பனாருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு, எனது தந்தையின் ஈமச்சடங்கிற்காக ரூ.5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது தாயரிடம் கையெழுத்து பெற்று சென்றனர். எனது தாய்க்கு தமிழ் தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கில் போடுவார். அவர்கள் நாங்கள் இருக்கின்றோம், தைரியமாக இருங்கள் என ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

<u>பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019</u>

எனது தாய், வெள்ளைதாளில் கையெழுத்து போட்ட பேப்பரில், எனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர். பின்னர் அலுவலகத்திலிருந்து, எனது பள்ளி சான்றிதழ் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் போன்ற ஆவணங்களை கொண்டு வந்து காட்டும்படி அறிவுறுத்தினர். அதன் அடிப்படையில் நானும் இருக்கின்ற ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்தேன்.

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 3ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை, எனக்கு அலுவலக நடைமுறை விதிகள் எதுவும் தெரியாது. மேலும் எனக்கு எழுத படிக்க எதுவும் தெரியாது. மேலும் அலுவலகத்திலிருந்து எனக்கு பணி ஆணை கிடைக்க பெற்றவுடன் பணியில், சேர்ந்து, எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளையும் செவ்வனே செய்து வருகிறேன். மேலும் நான் பணியில் சேர்ந்தது முதல், இதுநாள் வரை எனக்கு வழங்கப்பட்ட முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை இதுவே ஆகும்.

நான் எனது தாயார் மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் என்பதை எந்த ஒரு காலகட்டத்திலும் மறைக்கவில்லை. துப்புரவு ஆய்வாளர் கையெழுத்து இடக்கூறிய வெள்ளை பேப்பரில் மட்டும் எனது தாயார் கையொப்பம் இட்டுள்ளார். அவர்களே எனது தாயார் கையொப்பமிட்ட பேப்பரில் பணி வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர், அதன் அடிப்படையில் பணிநியமனம் பெற்றேன். எனவே, மேற்கண்ட பதிலை ஏற்று இந்த குற்றச்சாட்டு குறிப்பாணையில் இருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குற்றச்சாட்டு 2 ற்கு விளக்கம்</u>**

எனது தகப்பனார் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனது தகப்பனார்க்கு என்னுடன் சேர்ந்து 5 மகள்கள் உள்ளனர். அதில் நான்தான் கடைசி, எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது 3 பெண்களுக்கு திருமணம் செய்துள்ளார். எனக்கும் எனது அக்காவிற்கும் திருமணம் ஆகவில்லை. மேலும் எனது தகப்பனார் இறந்தபோது, எனது குடும்பத்தினர் அனைவரும் நிலை குலைந்த நிலையில் இருந்தோம். எனது தாயும் அதிகம் படிப்பு அறிவு இல்லாதவர், எழுதப்படிக்க தெரியாது.

எனது தகப்பனார் மரணம் கேட்டு எனது தகப்பனாருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு, எனது தந்தையின ஈமச்சடங்கிற்காக ரூ.5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது தாயாரிடம் கையெழுத்து பெற்று சென்றனர். எனது தாய்க்கு தமிழ் தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கில் போடுவார். அவர்கள் நாங்கள் இருக்கின்றோம், தைரியமாக இருங்கள் என ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

எனது தாய், வெள்ளைதாளில் கையெழுத்து போட்ட பேப்பரில், எனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர். பின்னர் அலுவலகத்திலிருந்து, எனது பள்ளி சான்றிதழ் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் போன்ற ஆவணங்களை கொண்டு வந்து காட்டும்படி அறிவுறுத்தினர், அதன் அடிப்படையில் நானும் இருக்கின்ற ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்தேன்.

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 3ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை, எனக்கு அலுவலக நடைமுறை விதிகள் எதுவும் தெரியாது. மேலும் எனக்கு எழுத படிக்க எதுவும் தெரியாது, மேலும் அலுவலகத்திலிருந்து எனக்கு பணி ஆணை கிடைக்க பெற்றவுடன் பணியில் சேர்ந்து, எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளையும் செவ்வனே செய்து வருகிறேன். மேலும் நான் பணியில் சேர்ந்தது முதல், இதுநான் வரை எனக்கு வழங்கப்பட்ட முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை இதுவே ஆகும்.

நான் எனது தாயார் மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் என்பதை எந்த ஒரு காலகட்டத்திலும் மறைக்கவில்லை. துப்புரவு ஆய்வாளர் கையெழுத்திட்ட வெள்ளை பேப்பரில் மட்டும் எனது தாயார் கையொப்பம் இட்டுள்ளார். எனவே, மேற்கண்ட பதிலை ஏற்று இந்த குற்றச்சாட்டு குறிப்பாணையில் இருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 3ற்கு விளக்கம்**

நான் சென்னை மாநகராட்சியில் கடந்த 20.04.2009 அன்று பெண் துப்புரவு பணியாளராக மருத்துவ சேவைகள் துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5 புளியந்தோப்பு மருத்தவமனையில் சேர்ந்தேன். நான் 2ம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றேன். 3ம் வகுப்பு பள்ளியில் படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது, அவ்வப்போது உயர் அலுவலர் இடும் பணியினை மேற்கொள்வதுடன் எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளும் செவ்வனே செய்து வருகிறேன். நான் பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநாள் வரை மாசற்ற முறையில் பணியாற்றி வந்துள்ளேன். நான் சென்னை மாநகராட்சி விதி 1983-ன் துணை விதி 20ஐ எந்த ஒரு காலகட்டத்திலும் மீறியது இல்லை. இதுவே எனது பணிக்காலத்தில் பெற்ற முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை ஆகும்.

எனக்கு 2 மகள்கள் 9 வயது மற்றும் 4 வயது முறையே உள்ளனர். எனது கணவர் கேஸ் கம்பெனியில் கூலி தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். எனது குடும்பத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால், அரசு விதிகள் தெரியாத காரணத்தினால், இம்முறை மன்னித்து, என்னையும் எனது குடும்பத்தையும் பாதுகாக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 1ற்கான விசாரணை அறிக்கை**

தனியர் வெளியுலகம் தெரியாமலும் ஆரம்ப படிப்பு மட்டுமே படித்திருந்த நிலையில் தாயார் அறிவுறுத்தலின்படி கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்துள்ளார். **குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு 2ற்கான விசாரணை அறிக்கை**

தனியருக்கு அரசு விதிகள் ஏதும் அறியாத நிலையில் கருணை அடிப்படையில் பணி பெற்றுள்ளார். இருப்பினும் **குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு 3ற்கான விசாரணை அறிக்கை**

தனியருக்கு அரசு விதிகள் ஏதும் அறியாத நிலையில் கருணை அடிப்படையில் பணி பெற்றுள்ளார் இருப்பினும் **குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**தனியரின் கூடுதல் விளக்கம்**

நான் தங்களிடம் பணிவுடன் தெரிவித்துக் கொள்வது யாதெனில், எனது தகப்பனார் திரு.எம்.கோட்டைய்யா, துப்புரவு மேஸ்திரியாக பணியாற்றி வந்த சமயம், அகால மரணம் அடைந்தார். அன்னாரது வாரிசாகிய நான், எனக்கு பணி நியமனம் வேண்டி, விண்ணப்பித்து அனைத்து ஆவணங்களும் சரிபார்த்து பின்னர் எனக்கு பணி நியமனம் வழங்கப்பட்டு பணியாற்றி வந்தேன். ஏதோ ஒரு ஆதாரத்தை வைத்து, தற்சமயம் என்னை பணிநீக்கம் செய்து விசாரணை நடைபெற்றது. விசாரணை அலுவலரின் அறிக்கை மீது கூடுதல் விளக்கம் பின்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

1. என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு பதில் அளிப்பதற்கு ஏதுவாக 6 ஆவணங்கள் கோரியிருந்தேன். இதுநாள் வரை எந்த ஒரு ஆவணமும் வழங்கப்படவில்லை.
2. மேலும், நான் 26.06.2019 அன்று விசாரணை அலுவலருக்கு சமர்ப்பித்த கடிதத்தில் நான் 3ம் வகுப்பு தேர்ச்சி பெற்றேன் என்றும், போதிய அறிவு இல்லை என்றும், விசாரணைக்கு உதவியாக வழக்கறிஞர் நியமித்துக் கொள்ள அனுமதி கோரி கடிதம் சமர்ப்பித்தேன். அதற்கு பதில் எதுவும் வழங்கப்படவில்லை.
3. இந்நிலையில் வழக்கறிஞரை விசாரணைக்கு வைத்துக் கொள்ள அனுமதி கோரிய கடிதம் குறித்து விவரம் கேட்க திடக்கழிவு மேலாண்மை துறையை அணுகி கேட்ட போது, திருமதி.ஜி.வித்யா, உதவி பொறியாளர் விசாரணை அலுவலர் அவர்கள் என்னையும், எனது தாயாரை உட்கார சொல்லி என்ன நடந்தது என வாய்மொழியாக கேட்டறிந்தார். எந்த ஒரு கையொப்பமும் பெறப்படவில்லை.

4. கடந்த 01.10.2019 நாளிட்ட விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை கடிதம் 16.10.2019 அன்றுஅலுவலகத்திற்கு வரவழைத்து தந்தனர். அதில் விசாரணை முடிக்கப்பட்டு விசாரணை அலுவலரின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. விசாரணை அலுவலர் விசாரணை முடித்த பிறகு ஒரு கையொப்பம் என்னிடம் மற்றும் எனது தாயாரிடமும் பெறப்படவில்லை. குறிப்பாக விசாரணையில் ஆஜரானதற்கு வருகை பதிவேட்டில் கையொப்பமும், விசாரணை நடைபெற்ற பிறகு அதன் சாராம்சத்தில் எனது கையொப்பம் பெறப்படவில்லை.

5. நிர்வாக தரப்பு சாட்சியான செயற்பொறியாளர் திரு.காமராஜ் அவர்களிடம் குறுக்கு விசாரணை எதுவும் என்னால் செய்யப்படவில்லை.

6. விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை 26.07.2019 அன்று கையொப்பமிட்டு அளித்துள்ளனர் என்று விசாரணை நடைபெற்றது. எந்த இடத்தில் நடைபெற்றது என்ற விவரம் எதுவும் இல்லை, அதற்கான கடிதம் வழங்கப்படவில்லை. மேலும் விசாரணை குறித்த கடிதம் எனக்கு வழங்கப்படவில்லை.

**குற்றச்சாட்டு 1 ற்கான கூடுதல் விளக்கம்**

நான் 3ம் வகுப்பு மட்டுமே படித்துள்ளேன், வெளி உலகம் தெரியாது. எனது தந்தை இறந்த சமயம் எங்களது குடும்பமே சோகத்தில் ஆழ்ந்திருந்தது செய்வது அறியாது தவித்தோம். இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் எனது தகப்பனாரின் ஈமசடங்குக்கு ரூ.5000/- பணம் தந்து சில வெள்ளைத்தாளில் எனது தாயாரிடம் கையொப்பம் பெற்று சென்றனர். சில நாட்கள் சென்று அலுவலகத்திலிருந்து எனது பள்ளி சான்றிதழ், தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழ் போன்ற ஆவணங்களை சரிபார்த்தனர். எனக்கு அரசு விதிகள் எதுவும் தெரியாது. எனக்கு வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றிதழ் கடிதத்தின் அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. நான் எந்த ஒரு நிலையிலும் எனது தாயார் பணிபுரிந்து வரும் தகவலை மறைக்கவில்லை.

துப்புரவு ஆய்வாளர் எனது தாயார் கையொப்பமிட்ட வெள்ளைத்தாளில் எனக்கு பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர். அதன் அடிப்படையில் பணி நியமனம் பெற்றேன். எனது தாயார் எந்த ஒரு நேரத்தில், எந்த ஒரு இடத்திலும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி கையொப்பம் இட என்னை அறிவுறுத்தவில்லை, இது முற்றிலும் தவறு, இது குறித்து விசாரணை அலுவலர் தவறாக தனது அறிக்கையை குறிப்பிட்டுள்ளார், என்னிடம் கையொப்பமும் பெறவில்லை.

**குற்றச்சாட்டு 2 ற்கான கூடுதல் விளக்கம்**

எனது தகப்பனார் மரணம் கேட்டு எனது தகப்பனாருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்த ஆறுதல் கூறிவிட்டு, எனது தந்தையின் ஈமச்சடங்கிற்காக ரூ.5000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைத்தாளில் எனது தாயாரிடம் கையெழுத்து பெற்று சென்றனர். எனது தாய்க்கு தமிழ் தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கில் போடுவார். அவர்கள் நாங்கள் இருக்கின்றோம், தைரியமாக இருங்கள் என ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன், 3ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை, எனக்கு அலுவலக நடைமுறை விதிகள் எதுவும் தெரியாது. மேலும் எனக்கு எழுத படிக்க எதுவும் தெரியாது. மேலும் அலுவலகத்திலிருந்து எனக்கு பணி ஆணை கிடைக்க பெற்றவுடன் பணியில் சேர்ந்து எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களையும், கடமைகளையும் செவ்வனே செய்து வருகிறேன். மேலும் நான் பணியில் சேர்ந்தது முதல், இதுநாள் வரை எனக்கு வழங்கப்பட்ட முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை இதுவே ஆகும்.

**குற்றச்சாட்டு 3 ற்கான கூடுதல் விளக்கம்**

நான் சென்னை மாநகராட்சியில் கடந்த 20.04.2009 அன்று பெண் துப்புரவு பணியாளராக மருத்துவ சேவைகள் துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5 புளியந்தோப்பு மருத்துவமனையில் சேர்ந்தேன். நான் 2ம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றேன். 3ம் வகுப்பு பள்ளியில்

படித்துள்ளேன், எனக்கு எழுத, படிக்க தெரியாது, அவ்வப்போது உயர் அலுவலர் இடும் பணியினை மேற்கொள்வதுடன் எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளும் செவ்வனே செய்து வருகிறேன். நான் பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநாள் வரை மாசற்ற முறையில் பணியாற்றி வந்துள்ளேன். நான் சென்னை மாநகராட்சி விதி 1983-ன் துணை விதி 20-ஐ எந்த ஒரு காலகட்டத்திலும் மீறியதும் இல்லை.

எனவே, மேற்கூறிய பதிலை ஏற்று, இந்த குற்றச்சாட்டு குறிப்பாணையிலிருந்து விலக்கி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி. எம். கிருஷ்டி, பெண் துப்புரவு பணியாளர், மருத்துவ சேவைகள்துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5, புளியந்தோப்பு மருத்துவமனைஅவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் விசாரணை அலுவலர் அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக அளித்துள்ள அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, She has submitted false documents about her mother's employment status to get compassionate grounds appointment in Greater Chennai Corporation after her father's death, who was an employee of Greater Chennai Corporation. Hence, she is dismissed from Corporation service as per rule 5(xi) of Chennai Corporation Class III & IV Services (Discipline and Appeal) Bye – Laws 1983 it is ordered that Tmt.M.Christy is dismissed from Corporation service because she is not eligible for appointment under Compassionate grounds as per G.O (Ms) 40, Labour and Employment Department of Government of TamilNadu, Dated.05.01.1990. எனஆணையிடப்பட்டது.

மேற்படி, இறுதியாணை பெற்றுக்கொண்ட தனியர், தனது மேல் முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களுக்கு 22.12.2020 அன்று கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளார்.

**தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்**

"பார்வையில் கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு கீழ்க்கண்டவாறு எனது தாழ்மையான விளக்கத்தினை சமர்ப்பிக்கிறேன். எனக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் எனது பெயர்க்கு முன்னர் இனிசியல் கிடையாது, தவறாக "எம்" என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இணைப்பு -1ல் கண்டுள்ள குற்றச்சாட்டு எண்.1ல் எனது தாயார் பெயர் திருமதி.கோட்டம்மா என்பதற்கு பதில் திருமதி.எஸ்தரம்மா என தவறாக குறிப்பிடப்பட்டள்ளது. மேலும் இணைப்பு -2ல் கண்டுள்ள குற்றச்சாட்டு 1 முதல் 3 வரை தந்தையாரின் பெயர் திரு.கோட்டைய்யா என்பதற்கு பதில் திரு.முனுசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இணைப்பு-3ல் எனது கடிதம் நாள் என 03.12.2017 என்றும், எனது தாயார்க்கு வழங்கி குற்றச்சாட்டு இணைப்பு-3ல் எனது கடித நாள் 30.11.2007 என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் விசாணை நடைபெற்ற நாளில் விசாரணையின் அன்றாட நிகழ்ச்சிகளின் அறிக்கையை நான் கேட்டும் எனக்கு வரவில்லை. மேலும் எனது தாய் தினக்கூலி அடிப்படையில் கடந்த 9 ஆண்டுகள் பணியாற்றி வந்தார். பின்னர் அவரது பணி 1998ம் ஆண்டு நிரந்தரம் செய்யப்பட்டது.

**குற்றச்சாட்டு எண்.1 ற்குமேல்முறையீட்டு மனுவின் விளக்கம்:**

எனது தகப்பனார் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனது தகப்பனார்க்கு என்னுடன் சேர்ந்து 5 மகள்கள் உள்ளனர். அதில் நான்தான் கடைசி, எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது 3 பெண்களுக்கு திருமணம் செய்துள்ளார். எனக்கும் எனது அக்காவிற்கும் திருமணம் ஆகவில்லை. மேலும் எனது தகப்பனார் இறந்தபோது, எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனது தாயும் அதிகம் படிப்பு அறிவு இல்லாதவர், எழுதப்படிக்க தெரியாது.

<u>பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019</u>

எனது தகப்பனார் மரணம் கேட்டு எனது தகப்பனாருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனது தந்தையின் ஈமச்சடங்கிற்கு ரூ.5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது தாயாரிடம் கையொழுத்து பெற்று சென்றனர். எனது தாய்க்கு தமிழ் தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கில் போடுவார். அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

எனது தாய், வெள்ளைதாளில் கையெழுத்து போட்ட பேப்பரில், எனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர். பின்னர் அலுவலகத்திலிருந்து, எனது பள்ளி சான்றிதழ் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் போன்ற ஆவணங்களை கொண்டு வந்து காட்டும்படி அறிவுறுத்தினர், அதன் அடிப்படையில் நானும் இருக்கின்ற ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்தேன்.

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 3ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை, எனக்கு அலுவலக நடைமுறை விதிகள் எதுவும் தெரியாது. மேலும் எனக்கு எழுத படிக்க எதுவும் தெரியாது. மேலும் அலுவலகத்திலிருந்து எனக்கு பணி ஆணை கிடைக்க பெற்றவுடன் பணியில் சேர்ந்து, எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளையும் செவ்வனே செய்து வருகிறேன். மேலும் நான் பணியில் சேர்ந்தது முதல், இதுநாள் வரை எனக்கு வழங்கப்பட்ட முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை இதுவே ஆகும்.

நான் எனது தாயார் மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் என்பதை எந்த ஒரு காலகட்டத்திலும் மறைக்கவில்லை. துப்புரவு ஆய்வாளர் கையெழுத்து இடக்கூறிய வெள்ள பேப்பரில் மட்டும் எனது தாயார் கையொப்பம் இட்டுள்ளார். அவர்களே எனது தாயார் கையொப்பமிட்ட பேப்பரில் பணி வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர், அதன் அடிப்படையில் பணிநியமனம் பெற்றேன். எனவே, மேற்கண்ட பதிலை ஏற்று இந்த குற்றச்சாட்டு குறிப்பாணையில் இருந்து விலக்கிக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

<u>குற்றச்சாட்டு எண்.2 ற்குமேல்முறையீட்டு மனுவின் விளக்கம்:</u>

எனது தகப்பனார் திரு.கோட்டைய்யா அவர்கள் பணியில் இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் கடந்த 05.08.2003 அன்று அகால மரணம் அடைந்தார். எனது தகப்பனார்க்கு என்னுடன் சேர்ந்து 5 மகள்கள் உள்ளனர். அதில் நான்தான் கடைசி, எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது 3 பெண்களுக்கு திருமணம் செய்துள்ளார். எனக்கும் எனது அக்காவிற்கும் திருமணம் ஆகவில்லை. மேலும் எனது தகப்பனார் இறந்தபோது, எனது குடும்பத்தினர் அனைவரும் நிலைகுலைந்த நிலையில் இருந்தோம். எனது தாயும் அதிகம் படிப்பு அறிவு இல்லாதவர், எழுதப்படிக்க தெரியாது.

எனது தகப்பனார் மரணம் கேட்டு எனது தகப்பனாருடன் பணிபுரிந்த மேஸ்திரி மற்றும் துப்புரவு ஆய்வாளர் எனது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறிவிட்டு எனது தந்தையின் ஈமச்சடங்கிற்கு ரூ.5,000/- ரொக்கமாக தந்தனர். மேலும் அவர்கள் 3 முதல் 4 வெள்ளைதாளில் எனது தாயாரிடம் கையொழுத்து பெற்று சென்றனர். எனது தாய்க்கு தமிழ் தெரியாது, கையெழுத்து மட்டும் தெலுங்கில் போடுவார். அவர்கள் நாங்கள் இருக்கின்றோம் தைரியமாக இருங்கள் என்று கூறி ஆறுதல் கூறிவிட்டு சென்றனர்.

எனது தாய், வெள்ளைதாளில் கையெழுத்து போட்ட பேப்பரில், எனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் செய்துள்ளனர். பின்னர் அலுவலகத்திலிருந்து, எனது பள்ளி சான்றிதழ் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் போன்ற ஆவணங்களை கொண்டு வந்து காட்டும்படி அறிவுறுத்தினர், அதன் அடிப்படையில் நானும் இருக்கின்ற ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்தேன்.

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 3ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை, எனக்கு அலுவலக நடைமுறை விதிகள் எதுவும் தெரியாது. மேலும் எனக்கு எழுத படிக்க எதுவும் தெரியாது. மேலும் அலுவலகத்திலிருந்து எனக்கு பணி ஆணை கிடைக்க பெற்றவுடன் பணியில் சேர்ந்து, எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளையும் செவ்வனே செய்து வருகிறேன். மேலும் நான் பணியில் சேர்ந்தது முதல், இதுநாள் வரை எனக்கு வழங்கப்பட்ட முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை இதுவே ஆகும்.

**<u>பொ.து.ந.க.எண்.ஈ13/2926/2019</u>**

நான் எனது தாயார் மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் என்பதை எந்த ஒரு காலகட்டத்திலும் மறைக்கவில்லை. துப்புரவு ஆய்வாளர் கையொழுத்திட்ட வெள்ளை பேப்பரில் மட்டும் எனது தாயார் கையொப்பம் இட்டுள்ளார். எனவே, மேற்கண்ட பதிலை ஏற்று இந்த குற்றச்சாட்டு குறிப்பாணையில் இருந்த விலக்கிக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குற்றச்சாட்டு எண்.3 ற்குமேல்முறையீட்டு மனுவின் விளக்கம்:</u>**

நான் சென்னை மாநகராட்சியில் கடந்த 20.04.2009 அன்று பெண் துப்புரவு பணியாளராக சுகாதாரத்துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5 புளியந்தோப்பு மருத்துவமனையில் சேர்ந்தேன். நான் 2ம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றேன். 3ம் வகுப்பு பள்ளியில் படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது, அவ்வப்போது உயர் அலுவலர் இடும் பணியினை மேற்கொள்வதுடன் எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளையும், கடமைகளும் செவ்வனே செய்து வருகிறேன். நான் பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநான் வரை மாசற்ற முறையில் பணியாற்றி வந்துள்ளேன். நான் சென்னை மாநகராட்சி விதி 1983-ன் துணை விதி 20ஐ எந்த ஒரு காலகட்டத்திலும் மீறியது இல்லை. இதுவே எனது பணிக்காலத்தில் பெற்ற முதல் குற்றச்சாட்டு குறிப்பாணை ஆகும்.

நான் தெலுங்கு பேசும் ஆதி திராவிட கிறிஸ்துவ இனத்தை சார்ந்தவர், எனக்கு 2 மகள்கள் 9 வயது மற்றும் 4 வயது முறையே உள்ளனர். எனது கணவர் கேஸ் கம்பெனியில் கூலி தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். எனது குடும்பத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால், அரசு விதிகள் தெரியாத காரணத்தினால், இம்முறை மன்னித்து, என்னையும் எனது குடும்பத்தையும் பாதுகாக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்."

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், மண்டலம்-5, கோட்டம்-60ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்துவரும் நிலையில், 05.08.2003 அன்று காலமான தங்களது தந்தை திரு.கோட்டைய்யா, அவர்களின் வாரிசுதாரர்களின் ஒருவரான தாங்கள், கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டி தவறான தகவல்கள் அளித்து கருணை அடிப்படையில் பணி ஆணை பெற்றது தொடர்பாக திருமதி.எம். கிருஷ்டி, பெண் துப்புரவு பணியாளர், மருத்துவ சேவைகள்துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5, புளியந்தோப்பு மருத்துவமனை அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இறுதி ஆணையாக, **பணியறவு தண்டனை *(Dismissal from Corporation service)*** வழங்கி ஆணையிடப்பட்டது. மேற்படி தண்டனையை 21.11.2020 அன்று பெற்றுக்கொண்டு, தனக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை ஆட்சேபித்து தனது மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களுக்கு 22.12.2020 அன்று சமர்ப்பித்துள்ளார்.

தனியர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு புதிதாக விளக்கங்கள் / காரணங்கள் ஏதும் அளிக்கவில்லை. மேலும், தனியர் வகுப்பு 4ஐ சார்ந்த பணியாளர் என்பதால் இவரது மேல்முறையீட்டு மனுவை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

எனவே, திருமதி.எம். கிருஷ்டி, பெண் துப்புரவு பணியாளர், மருத்துவசேவைகள் துறை, இந்திய மக்கள் தொகை திட்டம்-5, புளியந்தோப்பு மருத்துவமனை அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக வழங்கப்பட்டுள்ள பணியறவு தண்டனையை ***"Dismissal from the Corporation service"*** தள்ளுபடி செய்ய கோரி, தனியர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனு மீது உரிய முடிவு எடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி - மன்றம், அவர்களுக்கு சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 05.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"Comfirmed the punishment, என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.4வ.து.ந.க.எண்.ஆர்1/757/2021**

**தீர்மானஎண்.503/2021** **நாள்:08-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கொரோனா தடுப்பு நடவடிக்கை - மண்டலம் - 4, வார்டு–34 முதல் 48 வரை - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையில் மூன்று மாத காலத்திற்கு மண்டல அலுவலர்–4ன் மூலமாக பணியமர்த்த சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு அனுமதி ஆணை பெறப்பட்டது - அவசரம் மற்றும் அவசியம் கருதி கூடுதலாக 108 தன்னார்வலர்களை ஒப்பந்த அடிப்படையில் 11.05.2021 முதல் 01.06.2021 வரை பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 24.05.2021 நாளிட்ட குறிப்பின் மீது கோப்பு மீள சமர்ப்பிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) இரண்டாம் அலையின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் (Focus Volunteers) (Friend of Covid Citizen under Surveillance) தன்னார்வலர்களை ஐந்து தெருக்களுக்கு ஒருவர் வீதம் 1 முதல் 15 மண்டலங்களில் 4000 நபர்களை கோவிட்–19 நோய் தொற்றின் போது கடந்த ஆண்டு இப்பணிக்கென நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த தன்னார்வலர்கள் நோய் அதிகம் பாதிக்கப்பட்ட தெருக்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளை கண்காணிப்பதோடு நோய் பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் செல்லாமல் வீட்டில் இருந்த காரணத்தினால் கொரோனா நோயினை வெகுவாக கட்டுப்படுத்த முடிந்தது. மேற்படி தன்னார்வலர்கள் மண்டல உதவி வருவாய் அலுவலர்களின் மேற்பார்வையில் பணிபுரிந்தனர்.

தற்போது கோவிட் இரண்டாம் அலை பணிக்கென முதற் கட்டமாக வார்டு ஒன்றிற்கு பத்து தன்னார்வலர்கள் வீதம் 200 வார்டுகளுக்கு 2000 தன்னார்வலர்கள் பணியமர்த்த ஆணையர் அவர்களால் 12.04.2021 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் மண்டலம் 1 முதல் 5 மண்டலங்களில் உள்ள 63 வார்டுகளுக்கு 630 தன்னார்வலர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தவும் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

கொரோனா நோய் இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கைக்காக ஆணையர் அவர்களின் 15.04.2021 நாளிட்டசெயல்முறை ஆணையின்படி, வடக்கு வட்டார அலுவலகத்திற்கு உட்பட்ட மண்டலம்–4ல் 34 முதல் 48 வரையிலான கோட்டங்களுக்கு ஒரு கோட்டத்திற்கு 10 நபர்கள் வீதம் 15 கோட்டத்திற்கு 150 தன்னார்வலர்களை மாதம் ரூ.11730/– சம்பளத்தில் 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு பின்னேற்பு ஆணையினை எதிர்நோக்கி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி செலவீனம் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மண்டலம்–4ற்கு உட்பட்ட கோட்டம் 34 முதல் 48 வரை ஒரு கோட்டத்திற்கு 10 நபர்கள் வீதம் 15 கோட்டத்திற்கு 150 தன்னார்வலர்களை மாதம் 11730/– சம்பளத்தில் 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி செலவீனம் மேற்கொள்ள சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.435/2021, நாள்.03.05.2021ன்படி சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நேர்வில், கோவிட் தொற்று நோய் இரண்டாம் அலை தாக்கம் அதிகமாக பரவி வருவதை கட்டுப்படுத்துவது தொடர்பாக கடந்த 08.05.2021 அன்று துணை ஆணையர் (வமநி) அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில், கொரோனா நோய் அதிகமாக பரவி வருவதை கருத்தில் கொண்டு தேவைக்கேற்றவாறு கூடுதலாக தன்னார்வலர்களை (Focus Volunteers) பணியமர்த்தி நோய் தொற்றினை கட்டுப்படுத்தும் பணியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியிருந்தார்.

மண்டலம்–4ல் 34 முதல் 48 வரையுள்ள கோட்டங்களில் 01.05.2021 முதல் 10.05.2021 வரை கொரோனா நோய் தொற்று பாதிப்பு எண்ணிக்கை அதிகமாக இருந்ததன் அடிப்படையிலும், மேலும், மேற்கண்ட துணை ஆணையர் (வமநி) அவர்களின் 08.05.2021 நாளிட்ட கலந்தாய்வு

<u>ம.அ.4.வ.து.ந.க.எண்.ஆர்1/757/2021</u>

கூட்டத்தில் தொற்று பரவலுக்கு ஏற்றவாறு கூடுதலாக தன்னார்வலர்களை நியமித்து நோய் தொற்றினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதன் அடிப்படையில், தேவைக்கேற்ப 10 தன்னார்வலர்களை கூடுதலாக நியமித்து சிறப்பு அலுவலர் (மன்றம்) அவர்களின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில், துணை ஆணையர் (வமநி) அவர்களின் 24.05.2021 நாளிட்ட குறிப்பில், கூடுதலாக தன்னார்வலர்களை நியமனம் செய்ததற்கு உரிய ஆவணங்களுடன் மீள சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார்.

அதனடிப்படையில் மண்டலம்-4ல் கொரோனா நோய் தொற்று 01.05.2021 முதல் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளதன் காரணமாக அவசர அவசியம் கருதியும் நோய் தொற்றினை மேலும் பரவாமல் கட்டுப்படுத்த வேண்டியிருந்ததாலும் கீழ்கண்ட அட்டவணையின்படி கூடுதலாக தன்னார்வலர்கள் பணியமர்த்தப்பட்டனர். அதன் விவரம் பின்வருமாறு.

| Dn | 01.05.2021 | 02.05.2021 | 03.05.2021 | 04.05.2021 | 05.05.2021 | 06.05.2021 | 07.05.2021 | 08.05.2021 | 09.05.2021 | 10.05.2021 | கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் | கொரோனா தொற்று அதிகமாக பரவியதன் காரணமாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட 10 தன்னார்வலர்களுடன் 11.05.2021 முதல் கூடுதலாக நியமிக்கப்பட்ட தன்னார்வலர்களின் எண்ணிக்கை விவரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 34 | 50 | 41 | 42 | 62 | 25 | 50 | 32 | 64 | 33 | 64 | 463 | 10 |
| 35 | 44 | 54 | 34 | 44 | 28 | 52 | 47 | 57 | 35 | 46 | 441 | 10 |
| 36 | 57 | 45 | 43 | 69 | 29 | 54 | 63 | 56 | 66 | 76 | 558 | 10 |
| 37 | 34 | 37 | 37 | 28 | 28 | 37 | 38 | 48 | 30 | 45 | 362 | 10 |
| 38 | 25 | 19 | 30 | 24 | 13 | 31 | 33 | 43 | 22 | 47 | 287 | 2 |
| 39 | 10 | 6 | 10 | 15 | 4 | 19 | 21 | 18 | 15 | 20 | 138 | 5 |
| 40 | 15 | 31 | 30 | 56 | 16 | 35 | 36 | 54 | 29 | 41 | 343 | 5 |
| 41 | 14 | 13 | 15 | 14 | 17 | 11 | 22 | 38 | 14 | 19 | 177 | 4 |
| 42 | 27 | 18 | 16 | 30 | 11 | 30 | 25 | 39 | 20 | 38 | 254 | 4 |
| 43 | 14 | 5 | 12 | 15 | 10 | 17 | 16 | 16 | 45 | 16 | 166 | 6 |
| 44 | 13 | 25 | 43 | 28 | 27 | 14 | 31 | 33 | 34 | 50 | 298 | 10 |
| 45 | 23 | 16 | 25 | 28 | 15 | 26 | 23 | 38 | 8 | 46 | 248 | 10 |
| 46 | 6 | 12 | 8 | 13 | 4 | 10 | 14 | 23 | 6 | 30 | 126 | 10 |
| 47 | 13 | 6 | 13 | 15 | 11 | 14 | 13 | 12 | 4 | 17 | 118 | 2 |
| 48 | 19 | 18 | 19 | 18 | 9 | 31 | 21 | 25 | 15 | 30 | 205 | 10 |
| **Total** | **364** | **346** | **377** | **459** | **247** | **431** | **435** | **564** | **376** | **585** | **4184** | **108** |

மேலும் தற்சமயம் கொரோனா பரவல் குறைந்துள்ள காரணத்தினால் 02.06.2021 முதல் கூடுதலாக நியமிக்கப்பட்ட 108 தன்னார்வலர்களை பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஏற்கெனவே சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.435/2021, நாள்.03.05.2021 மன்ற பின்னேற்பு அனுமதியின்படி, 150 தன்னார்வலர்கள் மட்டும் தொடர்ந்து பணி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் கோவிட் தொற்று நோயின் இரண்டாம் அலை தாக்கம் அதிகமாக பரவிய காலத்தில் கூடுதலாக பணியமர்த்தப்பட்ட தன்னார்வலர்களுக்கு ஊதியம் வழங்க,

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் இரண்டாம் அலை தொற்று தடுப்புப் பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி மண்டலம்-4ல் கோட்டம் 34 முதல் 48 வரையிலான வார்டுகளுக்கு 1 கோட்டத்திற்கு 10 நபர்கள் வீதம் மண்டலம்-4ற்குட்பட்ட 15 கோட்டங்களுக்கு 150 தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையில் மாத ஊதியம் ரூ.11730/- என நிர்ணயம் செய்து சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.435/2021, நாள்.03.05.2021, மன்ற பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது. கடந்த மாதம் மண்டலம்-4ல்

கொரோனா தொற்று அதிகமாக பரவியதன் காரணமாக 11.05.2021 முதல் 01.06.2021 வரை 22 நாட்களுக்கு மட்டும் கூடுதலாக பணியமர்த்தப்பட்ட 108 தன்னார்வலர்களை பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும், மேற்கண்ட சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையில் மாத ஊதியம் ரூ.11730/- என்ற அடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதி வேண்டியும், .

2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161 நாள்.27.03.2020ல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள் முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் நேரடியாக 150 கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ள மண்டல அலுவலருக்கு அனுமதி அளித்து, சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.435/2021, நாள்.03.05.2021, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது கொரோனா தொற்று நோய் அதிகமாக பரவி வருவதை கருத்தில் கொண்டு மண்டலம்-4 ல் கூடுதலாக 108 தன்னார்வலர்களை (Focus Volunteers) 11.05.2021 முதல் 01.06.2021 வரையிலான காலங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ள மண்டல அலுவலருக்கு அனுமதியும்,

3. இப்பணிக்காக சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.435/2021, நாள்.03.05.2021, மன்றத்தின் பின்னேற்பு அனுமதியின்படி, நிர்வாக செலவீனம் ரூ.11730 X 150 X 3 மாதங்களுக்கு மொத்த செலவீனத்தொகை ரூ. 52,78,500/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து ஐநூறு மட்டும்) மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது கூடுதலாக பணியமர்த்தப்பட்டுள்ள 108 தன்னார்வலர்களுக்கு 11.05.2021 முதல் 01.06.2021 வரை ஒரு மாத ஊதியம் ரூ.11730 X 108 X 22 / 31 நாட்கள் = ரூ.8,99,079/- (ரூபாய் எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எழுபத்து ஒன்பது மட்டும்) கூடுதலாக செலவீனம் மேற்கொள்ள அனுமதியும் ,

4. இதற்கான செலவீனம் கோவிட்-19க்கென ஒதுக்கப்பட்டுள்ள கணக்கு குறியீடு எண். 20-21-07, கணக்கு தலைப்பு எண். 230 - 70 -12- 03 கீழ் நிதி ஒதுக்கீடு செய்து செலவு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 07.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**S.W.D.C.No.B1/0662-26 /2020**

**Resolution No.504/2021** **Date:14-06-2021**

**Greater Chennai Corporation – Storm Water Drain Department – Construction of Integrated Storm Water Drain (ISWD) in Kosasthalaiyar Basin in the extended areas of Greater Chennai Corporation in Package 26 under financial assistance of Asian Development Bank (ADB) – Tenders called for - Orders of the Special Officer-in-Council-obtained for approval and award of tender to M/s. Road link Infrastructure - Rock and Arch Constructions (I) Pvt. Ltd (JV)- ADB on post review of the package 26 has recommended for calling retender – orders for revoking of the award of tender – For orders.**

Tamil Nadu Government has accorded Revised Administrative Sanction vide G.O.MS.No.06,M.A & W.S (MC1) Department, dated 02.02.2021, for Construction of Integrated Storm Water Drain in Kosasthalaiyar basin for a length of 769 km at an estimated cost of Rs.3220 Crore. The implementation of this project is very important for mitigation of flood in the extended areas of Greater Chennai Corporation (mostly in North Chennai) in Zones – 1, 2, 3 part of Zone – 6 and 7, which have seen exponential growth in terms of newly developed residential colonies and IT industries and other core industries and also due to proposed Chennai Metro Rail Corridors.

Tender Notice for Packages 16 to 32 and Retender for Packages 39, 40 and 42 were published in the English News paper namely The Times of India, Regional News paper Dinamani inviting for the prospective bidding from the eligible bidders for 20 packages with the pre-bid meeting date fixed on 23.11.2020 and the date of submission of Bid was proposed on 10.12.2020.

The pre-bid meeting for Packages 16 to 32, 39, 40, 42 was conducted on 23.11.2020 and one contracting firm have participated the meeting and their queries have been replied after getting NOC from ADB and was uploaded in the www.tntenders.gov.in portal. Due to Covid – 19 pandemic, the bid submission date for the tender of Packages 16 to 32, 39, 40, 42 the opening date was postponed to 29.12.2020 with approval of ADB.

It is stated that e-tenders were called for the 20 packages viz Package 16 to 32, 39, 40& 42 for Rs.1049.27 Crore (work value inclusive of GST 12%) and bids were received for 17 packages on the due date of submission on 29.12.2020 and bids for retender packages 39, 40, 42. were received on the due date of 05.02.2021.

Further the technical evaluation for the Packages 26 have been completed by GCC subject to post review by ADB and approval.

The bidders, who were found to be technically qualified, were called for opening of the price bid and the price bids were opened on 04.02.2021 The rates quoted by the bidders for the packages are mentioned below:

| Sl. No | Phase | Package No. | File No. | Name of the Lowest Bidder M/s. | 2019-20 Office Work Value including GST 12% & Excluding Provisional sum Rs. | Provisional sum Value in (Rs.) | Quoted rate (including provisional sum) Rs. | Excess/ Less Compared with office SOR 2019-20 (with GST 12%) excluding provisional sum |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 26 | B1/662-26/ 2020 | M/s. Road link Infrastructure - Rock and Arch Constructions (I) Pvt. Ltd (JV) | 528209534.00 | 4700000.00 | 611231926.00 | (+)14.83% |
| | | | | M/s.Sree Saravana Engineering Bhavani (P) Ltd | | | 622034670.00 | (+)16.87% |

**S.W.D.C.No.B1/0662-26/2020**

During the Price Bid Evaluation of package 26 it was found that both the tenderers have qualified individually for this package and on evaluation of the Combined aggregate for annual turnover it was found that there is a short fall of INR 6 Million for the tenderer M/s. Road link Infrastructure - Rock and Arch Constructions (I) Pvt. Ltd (JV) and a shortfall of INR 8 million for M/s.Sree Saravana Engineering Bhavani (P) Ltd. Since the shortfall is very minimal for combined aggregate evaluation and that the tender has been called for Value of Work + GST 12% +TNCWWF 1% Usually in GCC tender /World Bank tender/ KfW tenders, this TNCWWF 1% will not be considered for calling tender and considering this the Tender sub committee found that it could be considered and hence recommended to the tender scrutinizing Committee for sanction and approval of Special Officer/Council obtained and accordingly LOA was issued to the Tenderer M/s. Road link Infrastructure - Rock and Arch Constructions (I) Pvt. Ltd (JV) for an amount of Rs. 611231926.00 which is +14.83% higher than the office value of work.

ADB during the post review of the package 26 has suggested for calling retender for the package 26 based on the ADB's evaluation.

Hence, in these circumstances,

1. For revoking of the approval of the tender awarded for the Construction of ISWD in Kosasthalaiyar Basin in Package 26 to M/s. Road link Infrastructure - Rock and Arch Constructions (I) Pvt. Ltd (JV) for an amount of Rs. 61.12 Crore.
2. For Calling retender for the Construction of ISWD in Kosasthalaiyar Basin in Package 26 and to inform ADB prior to calling of Notice for Invitation of Tender .

Sl.No 1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.12.06.2021 is read.

**"Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

********

**பொ.து.ந.க.எண்.ஈ1/10212 /2021**

**தீர்மானஎண்.505/2021** **நாள்:15-06-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - 15.05.2021 மைய நாளாகக் கொண்டு - 2021- 2022 ஆம் ஆண்டிற்கான உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கான தெரிவுப் பட்டியல் தயாரிப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க கீழ்க்காண் விவரங்கள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | உதவி கணக்கு அலுவலர் |
| 2 | மைய நாள் | 15.05.2021 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600-39100 + 5400 தர ஊதியம்<br>(7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி (level 22)<br>ரூ.56100 – 177500/- ஊதியக் கட்டு) |
| 4 | காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) | 1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் - 29<br>(அ) தற்காலிக பணியிடம் -<br>(ஆ) நிரந்தர பணியிடம் - 29<br><br>2) தற்போது பணிபுரிபவர்கள் - 24<br>(அயற்பணியில் பணிபுரிபவர்கள் – 8<br>பெ.செ.மா.உதவி கணக்கு அலுவலர்கள் -16)<br><br>3) 15.05.2021 மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் - 5<br><br>4) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடம் - 0<br>ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் - 0<br><br>5) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் - 0<br><br>6) எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் 40%<br>(G.O.Ms.No.103 நாள்.09.10.2014) - 2<br>--------<br>7 |
| 5 | வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | நிர்வாக அலுவலர்<br>(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம்.<br>(ஆ) ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டுக்கு குறையாமல் பணி முடித்து இருக்க வேண்டும். |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? | கடந்த ஆண்டு உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதியான 3 நபர்களுக்கு, உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. |

அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள்.14.11.2017 ல், பெருநகர சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகள் 1970ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான பணி நியமன விதிகளில், திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இப்பணிவிதிகள் 31.08.2010 முதல் நடைமுறைப்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/10212 /2021**

உதவி கணக்கு அலுவலர் பதவியினை நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு:-

| Name of the Post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **Category – 2 Assistant Accounts Officer Rs.**15600-39100 + GP 5400 | a) By promotion from the category of Administrative Officer or Head Clerk in the Greater Chennai Corporation including Council Section in Class III who have put in not less than one year of service; or"; **(G.O. Ms. No. 116 MA &WS (MC-3)Department dated.14.11.2017 )** | (i) A graduate of a recognized University. (ii) A pass in the Accounts Test for subordinate Officers Parts I and II or any other Accounts Tests prescribed by Government as equivalent thereto; and (iii) Must have served as Administrative Officer or Head Clerk in the Greater Chennai Corporation including Council Section in Class III for a period not less than one year." ; **(G.O. Ms. No. 116 MA &WS (MC-3)Department dated. 14.11.2017)** |
| | b) By Appointment on deputation from the category of District Inspectors of Local Funds, Junior Accounts Officers, Sub Treasury Officers, Grade I, Asst. Treasury Officers, and the Accountants Grade I, of the Treasury and Accounts Subordinate Service, who have put in not less than five years of service in their respective posts, or"; | (iv)must served as District Inspector orLocal Fund Accounts or JuniorAccounts or Sub-Treasury OfficerGrade I of the Assistant TreasuryOfficer or Accountant Grade I ofthe Treasury and Accounts Subordinate Service for a period ofnot less than five years. |
| | c) By direct recruitment | (v) To pass Chartered Accountant or Cost and works Accountant (Final) |

பெருநகர சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் -1970 ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு திருத்தியமைக்கப்பட்ட பணிவிதிகளின்படி, ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டுக்கு குறையாமல் பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்பதாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 29 பணியிடங்களில், அயற்பணி அடிப்படையில் 8 கணக்கு அலுவலர்களும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி கணக்கு அலுவலர்களும் 16 பேரும் கணக்கு அலுவலர்களாக பணிபுரிகின்றனர். மீதமுள்ள பணியிடங்களில் 5 பணியிடங்கள் காலிப்பணியிடங்களாக உள்ளது.

மேலும், ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 25.02.2021 நாளிட்ட நேர்முக கடிதம் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சியில் நிதி நிர்வாக பிரிவில் உள்ள தலைமை கணக்கு அலுவலர் மற்றும் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஊட்டப்பதவியில் தகுதியான நபர்கள் உள்ளதால், அயற்பணி அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு மேலாக பணிபுரியும் அலுவலர்களை 31.05.2021க்குள் திரும்ப பெற்றுக்கொள்ளுமாறும், மேலும் இனிவரும் காலங்களில் மேற்கண்ட பதவிகளுக்கு அயற்பணி அடிப்படையில் பணிபுரிய கோரிக்கை அனுப்பினால் மட்டுமே, அரசு கருவூலத் துறையிலிருந்து அலுவலர்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் காலிப்பணியிடங்கள் எழ வாய்ப்புள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/10212 /2021**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவியில் 5 காலிப்பணியிடங்களும் மற்றும் அரசாணை (நிலை) எண்.103 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்: 09.01.2014-ன்படி எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் (40%) 2 காலிப்பணியிடங்களையும் சேர்த்து மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 7 ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், பணிவிதிகளின்படி மூப்பு நிலையில் உள்ள நிர்வாக அலுவலர்களின் விவரம் பின்வருமாறு:-

**பட்டியல்-1**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் நிர்வாக அலுவலர்களின் பணி மூப்பு பட்டியல்**

| வ. எண் | பெயர் | பட்டதாரி /பட்டதாரி அல்லாதவர் | நிர்வாக அலுவலர் பதவி உயர்வு செயல்முறை ஆணை நாள் / பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | ஜி.விக்டோரியா மேரிராணி | பட்டதாரி அல்லாதவர் | 12.08.2016 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 2 | பி.விஜயலட்சுமி | பட்டதாரி அல்லாதவர் | 24.07.2017 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 3 | யாஸ்மின்சுல்தானா | பட்டதாரி அல்லாதவர் | 05.06.2018 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 4 | எல்.ஆனந்தலட்சுமி | **பட்டதாரி** | 09.07.2018 | பணிவிதிகளின்படி மைய நாளன்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. இருப்பினும் தனியர் தனது 14.05.2020 நாளிட்ட கடிதத்தில், 2019-2020 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு தற்காலிகமாக விருப்பமில்லை எனத் தெரிவித்துள்ளார். பணிவிதிகளின்படி தனியரின் பெயர் தெரிவுப்பட்டியலில் மூன்றாண்டுகளுக்கு சேர்க்க இயலாது. |
| 5 | எஸ்.ஜெயகுமார் | பட்டதாரி அல்லாதவர் | 09.07.2018 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 6. | எஸ்.விநாயகமூர்த்தி | **பட்டதாரி** | 19.07.2019 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 7. | எ.கிருஷ்ணமூர்த்தி | **பட்டதாரி** | 19.07.2019 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | சி.வசந்தா | **பட்டதாரி** | 19.07.2019 | தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 9. | கே.புஷ்பா | பட்டதாரி அல்லாதவர் | 24.07.2019 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 10. | எம்.இராமச்சந்திரன் | **பட்டதாரி** | 19.07.2019 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 11. | டி.நளினி | **பட்டதாரி** | 22.07.2019 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 12. | எம்.வஜ்ரவேலு | **பட்டதாரி** | 26.08.2019 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 13. | என்.வி.அனுராதா | பட்டதாரி அல்லாதவர் | 27.08.2019 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 14. | டி.ரவிச்சந்திரன் | **பட்டதாரி** | 26.08.2019 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 15. | எஸ்.ரவணம்மா | **பட்டதாரி** | 26.08.2019 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரிகின்றார். தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதால், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 16. | ஆர்ஜானகி | பட்டதாரி அல்லாதவர் | 22.08.2019 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 17. | அ.கலையரசி | **பட்டதாரி** | 16.11.2020 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | இ.குலசேகரராவ் | பட்டதாரி அல்லாதவர் | 16.11.2020 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 19. | சாந்தா தாமஸ் | **பட்டதாரி** | 16.11.2020 | பணிவிதிகளின்படி மைய நாளான்று ஓராண்டிற்கு மேல் நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை. |
| 20. | என்.கிருஷ்ணண் | பட்டதாரி அல்லாதவர் | 16.11.2020 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |

உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க 26.03.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, நிர்வாக அலுவலர் பதவியில் 1 ஆண்டுக்கு குறையாமல் பணிபுரிந்துள்ள பட்டதாரி நிர்வாக அலுவலர்களின் விவரங்கள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

15.05.2021 அன்று மைய நாளாகக் கொண்டு துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பணிமூப்பின்படி நிர்வாக அலுவலர்களின் விவரம் பின்வருமாறு :-

**பட்டியல்-2**

| வ. எண். | பெயர் மற்றும் துறை/மண்டலம் (திருவாளர்கள்) | நிர்வாக அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | மையநாளான 15.5.2021ல் நிர்வாக அலுவலர் பதவியில் பணி முடித்த காலம் |
|---|---|---|---|
| 1 | எஸ்.விநாயகமூர்த்தி (மண்டலம் 13) | 19.07.2019 | 1 வருடம் 9 மாதம் 28 நாட்கள் |
| 2 | எ.கிருஷ்ணமூர்த்தி (திடக்கழிவு மேலாண்மைத் துறை) | 19.07.2019 | 1 வருடம் 9 மாதம் 28 நாட்கள் |
| 3. | சி.வசந்தா (மண்டலம் 12) | 19.07.2019 | 1 வருடம் 9 மாதம் 28 நாட்கள் |
| 4. | எம்.இராமச்சந்திரன் (பொதுத்துறை) | 19.07.2019 | 1 வருடம் 9 மாதம் 28 நாட்கள் |
| 5. | டி.நளினி (மண்டலம் 3) | 22.07.2019 | 1 வருடம் 9 மாதம் 25 நாட்கள் |
| 6. | எம்.வஜ்ரவேலு (மண்டலம் 10) | 26.08.2019 | 1 வருடம் 8 மாதம் 21 நாட்கள் |
| 7. | டி.ரவிச்சந்திரன் (மண்டலம் 5) | 26.08.2019 | 1 வருடம் 8 மாதம் 21 நாட்கள் |

அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள்.14.11.2017 ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள்-1970ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு திருத்தியமைக்கப்பட்ட பணிவிதிகளின்படி, ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டுக்கு குறையாமல் பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்ற பணிக்கால தகுதியின் அடிப்படையிலும், தனியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என பொதுத்துறை மூலமாக இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளதாலும், **பட்டியல்-2ல் _வரிசை எண்.1 முதல் 7 வரையுள்ள_** நபர்கள் தற்போது தயாரிக்கப்பட உள்ள உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான **தெரிவுப்பட்டியலில் இடம் பெற தகுதியுள்ளவர்களாக உள்ளனர்.**

மேற்கண்ட தனியர்கள் மீது நாளது தேதி வரையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-2ன் கீழ்வரும் உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு அளிக்கும் அதிகாரம் மன்றம் வசம் உள்ளது.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள்.24.10.2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், பதவி உயர்வு அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே,

**அ)** அரசாணை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள்.14.11.2017 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு, ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டிற்கு குறையாமல் பணிபுரிந்து கொண்டிருக்கும் கீழ்கண்ட நிர்வாக அலுவலர்களை கொண்டு, 15.05.2021 யை அறுதி நாளாகக் கொண்டு 2021-22 ஆம் ஆண்டிற்கான உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

| **வ. எண்.** | **பெயர் மற்றும் பணிபுரியும் துறை / மண்டலம் திருவாளர்கள்** | **நிர்வாக அலுவலர் பதவியில் சேர்ந்த நாள்** |
|---|---|---|
| 1 | எஸ்.விநாயகமூர்த்தி (மண்டலம் 13) | 19.07.2019 |
| 2 | எ.கிருஷ்ணமூர்த்தி (திடக்கழிவு மேலாண்மைத் துறை) | 19.07.2019 |
| 3 | சி.வசந்தா (மண்டலம் 12) | 19.07.2019 |
| 4 | எம்.இராமச்சந்திரன் (பொதுத்துறை) | 19.07.2019 |
| 5 | டி.நளினி (மண்டலம் 3) | 22.07.2019 |
| 6 | எம்.வஜ்ரவேலு (மண்டலம் 10) | 26.08.2019 |
| 7 | டி.ரவிச்சந்திரன் (மண்டலம் 5) | 26.08.2019 |

**ஆ)** மேற்காண் பட்டதாரி நிர்வாக அலுவலர்களுக்கு, உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்கியும், 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படியும், (level 22) ரூ. 56100-177500/- என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தற்போது ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் உதவி கணக்கு அலுவலராக பணியமர்வு செய்து ஆணை வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 11.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு, அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பொ.து.ந.க.எண். ஈ3/12943/2021**

**தீர்மானஎண்.506/2021** **நாள்:15-06-2021**

**அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பெருநகர சென்னை மாநகராட்சி, அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் - சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் அனுமதி.**

அரசாணை (வாலாயம்) எண்.1982, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 09.05.2021 மற்றும் அரசாணை (வாலாயம்) எண்.2057, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 17.05.2021ன்படி, கீழ்க்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 11.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண் | பெயர் (ம) பதவி | அரசாணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., முதன்மை செயலர்/ ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.1982, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 09.05.2021 | 09.05.2021 பி.ப. |
| 2. | டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., துணைஆணையர்(சுகாதாரம்), பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2057, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 17.05.2021 | 18.05.2021 மு.ப. |
| 3. | திரு. ராஜா கோபால் சுன்கரா, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர்(தெற்கு), பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2057, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 17.05.2021 | 18.05.2021 மு.ப. |
| 4. | திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., துணைஆணையர்(பணிகள்), பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2057, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 17.05.2021 | 19.05.2021 மு.ப. |
| 5. | திரு. விஷு மஹாஜன், இ.ஆ.ப., துணைஆணையர்(வ (ம) நி), பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2057, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 17.05.2021 | 19.05.2021 மு.ப. |

**"தகவல் மற்றும் பதிவிற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**பொ.து.ந.க.எண்.இ6/10220/2021**

**தீர்மானஎண்.507/2021** **நாள்:18-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி.C.M.திருஅருள், இளநிலை உதவியாளர், மண்டலம்-3 அவர்கள் 21.06.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3ல், இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.C.M.திருஅருள் அவர்கள் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், குடும்ப சூழ்நிலையின் காரணமாகவும் தன்னால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை என தெரிவித்து, தன்னை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு (Voluntary Retirement) 90 நாட்கள் முன்னறிவிப்புடன் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களிடம் 24.03.2021 அன்று மனு அளித்துள்ளார்.

திருமதி.C.M.திருஅருள், இளநிலை உதவியாளர், மண்டலம்-3 அவர்களின் பணிவிவரங்கள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | தனியரின் பணி விவரங்கள் | பதவி மற்றும் நாள். |
|---|---|---|
| 1. | பிறந்த தேதி | 30.07.1969 |
| 2, | தனியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த பதவி மற்றும் நாள். | பொறியியல் உடனாளர் (Engineer Attender) நாள். 22.12.1993 கல்வித்துறை (மாநகராட்சிஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்) |
| 3. | தனியர் பெற்ற பதவி உயர்வு மற்றும் பணியில் சேர்ந்த நாள். | இளநிலை உதவியாளர் 18.06.2001, மத்திய கணக்கு குழுமம். |
| 4. | தனியர் தற்போது பணிபுரியும் இடம் | மண்டலம்-3 |
| 5. | தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடிந்த நாள். | பணி வரன்முறை செய்யப்பட்ட நாள். 18.06.2001. தகுதிகாண்பருவம்முடித்த நாள்.17.06.2003. |
| 6. | தனியர் தன் விருப்ப ஓய்வு மனுவினை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளித்த நாள். | 24.03.2021 |
| 7. | தனியர் 90 நாட்கள் முன்னறிவுப்புடன் தன் விருப்ப ஓய்வு பெறும் நாள். | 21.06.2021 |
| 8- | தன் விருப்ப ஓய்வு விண்ணப்பித்த நாள். அன்று தனியரின் வயது | 51 ஆண்டுகள் 7 மாதங்கள், 23 நாட்கள் பூர்த்தி. |
| 9. | தன் விருப்ப ஓய்வு விண்ணப்பித்த நாள். அன்று தனியர் நிறைவு செய்த பணி ஆண்டுகள். | 27ஆண்டுகள் 3 மாதங்கள் 2 நாட்கள். |

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அவர்களின் 07.05.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. காவல்துறை கண்காணிப்பாளர்/விழிப்பு அலுவலர் அவர்களின் 31.05.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் பணிபுரிந்த மண்டலம்-3ல் பெறப்பட்ட கடிதங்களில், தனியர் பணிபுரிந்த காலங்களில் தணிக்கைத் தடை, முன் பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.இ6/10220/2021**

பெருநகர சென்னை அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தின் 31.05.2021 நாளிட்ட கடிதத்தில், திருமதி.C.M.திருஅருள், இளநிலை உதவியாளர், மண்டலம்-3 அவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களிடமிருந்து தணிக்கைத்தடை சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

அரசாணை எண்.376 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, 11.12.1995 நாளிட்ட ஆணையில், "F.R.56(3)(a): After completion of 20 years of qualifying service or 50 years of age, notice of not less than 3 months for Voluntary Retirement may be given in writing direct to the appointing authority" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதிமுறைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டதில், தனியர் தன் விருப்ப ஓய்வு விண்ணப்பித்த நாள் அன்று 51 வயது 7 மாதங்கள் 24 நாட்கள் பூர்த்தி செய்துள்ளதாலும், 27 ஆண்டுகள் 3 மாதங்கள் 2 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்வு கோரி 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களிடம் அளித்துள்ளதால், தனியரை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க தடையேதுமில்லை என கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, திருமதி.C.M.திருஅருள், இளநிலை உதவியாளர், மண்டலம்-3 அவர்களை தன் விருப்ப ஓய்வில் *(Voluntary Retirement)* செல்ல அனுமதிக்க 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 24.03.2021 அன்று சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களிடம் மனு அளித்துள்ளதை தொடர்ந்து, தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கைத்தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து *(Pension Gratuity)* பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 21.06.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**<u>ம.க.கு.ந.க.எண்.அ11/0296/2021</u>**

**தீர்மானஎண்.508/2021** **நாள்:18-06-2021**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - திரு.R.S.ரவிச்சந்திரன், உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் அவர்கள் 23.06.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.R.S.ரவிச்சந்திரன், என்பவர், 26.03.2021 நாளிட்ட கடிதத்தில், தான் பெருநகர சென்னை மாநகராட்சியில் 03.03.2014 அன்று பணியில் சேர்ந்து, தொடர்ந்து தற்போது வரை பணிபுரிந்து வருகிறேன் என்றும் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு (Voluntary Retirement) அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டு, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு விருப்ப கடிதம் அளித்துள்ளார்.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறை அவர்களின் 04.05.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் விழிப்பு அலுவலர் அவர்களின் 04.06.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளளது. மேலும், தனியர் பணிக்காலத்தில் பணிபுரிந்துள்ள மத்திய கணக்கு குழுமத்திலிருந்து பெறப்பட்ட கடிதங்களில், தனியர் பணிபுரிந்த காலங்களில் தணிக்கைத் தடை, முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தின் 02.06.2021 நாளிட்ட கடிதத்தில், திரு.R.S.ரவிச்சந்திரன், உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லையென சான்றளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனியரது பணிப்பதிவேட்டினை சரிபார்க்கப்பட்டதில், திரு.R.S.ரவிச்சந்திரன், உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் என்பவர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தேர்ந்து எடுக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் மூன்றாம் நிலையான உதவியாளர் பதவியில் முதன்முதலாக 03.03.2014 அன்று மத்திய கணக்கு குழுமத்தில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். இப்பதவியில் 03.03.2014 மு.ப அன்று பணிவரன்முறையும், 02.03.2016 பி.ப அன்று தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டு பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனியர் பயின்றுள்ள கல்விப்பாடம் தமிழ் மொழி ஆகும். இவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் எடுக்கப்பட்டதற்கான பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதிவு இல்லையென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.07.10.1991 மற்றும் அரசாணை எண்,376 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.11.12.1995ன்படியும். மேற்காணும் தனியரை பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிப்பதற்கு இவர் 50 வயதினை கடந்தவராக இருக்கவேண்டும் அல்லது இவரது பணிக்காலம் 20 வருடம் முடித்தவராக இருக்க வேண்டும். ஆனால், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாளான 03.03.2014 அன்றைய தேதியினை கணக்கீடு செய்ததில் இவர் 7 வருடம் 23 நாட்கள் பணிக்காலம் முடித்துள்ளார். மேலும் தனியர் 26.03.2021 அன்று 59 வயது பூர்த்தி செய்துள்ளார் என்பதனை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தனியரது பதவியானது பெருநகர சென்னை மாநகராட்சியில் மூன்றாம் நிலை பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இவரை பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிப்பதற்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களது அனுமதி ஆணை பெறப்படவேண்டும்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் திரு.R.S.ரவிச்சந்திரன், உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் என்பவர் அன்னாரது குடும்ப சூழ்நிலையினை குறிப்பிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து தன்விருப்ப ஓய்வில் (Voluntary Retirement) செல்ல அனுமதிக்குமாறு கோரியுள்ளதன் பேரில், இவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை மற்றும் மாநில விழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் இவர் மீது

**<u>ம.க.கு.ந.க.எண்.அ*11/ 0296/2021*</u>**

விசாரணைகள் ஏதும் இல்லையெனவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில் இவர் உறுப்பினராக இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதுகுறித்து மேற்காணும் தனியர் அளித்துள்ள *26.03.2021* நாளிட்ட தன்விருப்ப ஓய்வு மனுவினை ஏற்று, இவர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை, நிதி இழப்பீடு, தணிக்கைத்தடை மற்றும் நீண்டகால முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், இதனை தனியருக்கு வழங்கவிருக்கும் ஓய்வூதிய பங்களிப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு, இத்தனியரை *23.06.2021* அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பொ.து.ந.க.எண். ஈ3 /24499 /2018**

**தீர்மானஎண்.509 / 2021** **நாள்:22-06-2021**

**அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி. எஸ். சசிகலா, இணை இயக்குநர்/ மண்டல அலுவலர், மண்டலம்-2 அவர்களின் அயற்பணிக் காலம் 06.06.2021 அன்று மூன்று ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் தனியரின் அயற்பணிக் காலத்தினை மேலும் ஓராண்டு நீட்டித்து அரசின் ஆணை பெற, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

அரசாணை (வ) எண்.97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ.1) துறை, நாள்.28.05.2018ன்படி, திருமதி. எஸ். சசிகலா, இணை இயக்குநர்/ மண்டல அலுவலர், மண்டலம்-2, அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் 07.06.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். தனியரின் அயற்பணி காலம் 06.06.2021 அன்று மூன்று ஆண்டுகள் முடிவுற்றது.

தற்போது சென்னை மாநகரில் கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், திருமதி. எஸ். சசிகலா, இணை இயக்குநர்/ மண்டல அலுவலர், மண்டலம்-2, அவர்களின் பணி பெருநகர சென்னை மாநகராட்சியில் அவசியமானதாக உள்ளது.

இது தொடர்பாக, தனியரின் அயற்பணி காலத்தினை நீட்டிக்கும் வகையில் மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு, முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 11.06.2021 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

ஆகவே, சென்னை மாநகரில் கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், திருமதி. எஸ். சசிகலா, இணை இயக்குநர்/ மண்டல அலுவலர், மண்டலம்-2, பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்களின் பணி பெருநகர சென்னை மாநகராட்சியில் அவசியமானதாக கருதப்படுவதால், நிர்வாக நலன் கருதி தனியரின் அயற்பணிக் காலத்தை 07.06.2021 முதல் மேலும் ஓராண்டு (நான்காம் ஆண்டு) நீட்டித்து அரசின் ஆணை பெற, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்1/3369/2020**

**தீர்மானஎண்.510/2021** **நாள்:25-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 - வருவாய்துறை - கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகள் - சமுதாய நல கூடங்களில் தங்க வைக்கப்பட்ட ஆதரவற்றோர் - வீடட்றோர் - புலம் பெயர்ந்த் தொழிலாளர்களுக்கு தினமும் மூன்று வேலை உணவு வழங்கியது - அத்தியவசிய பொருட்கள் மற்றும் குடிநீர் வழங்கியது - முன்பணம் ரூ. 13,06,928/- பெறப்பட்டது - மொத்த செலவீனத்தை நேர் செய்திட அனுமதி.**

உலக சுகாதார நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்சி குழு பரிந்துரை, மாண்புமிகு பாரத பிரதமர், மாண்புமிகு தமிழக முதல்வர் ஆகியோர் உத்திரவிற்கிணங்க தமிழக அரசு கொரோனா நோய் தொற்று பரவல் தடுக்கும் பணிகளின் முதற்கண்ட நடவடிக்கையாக, கடந்த மார்ச் மாதம் *(23.03.2020)* பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்திரவால் *(144* தடை உத்திரவு*)* பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் போக்குவரத்து முடக்கத்தால் சொந்த ஊருக்கு செல்ல இயலாத நிலையில் ஆதரவற்று இருந்தவர்கள், வீடற்று தெருக்களில் சுற்றி திரிந்தவர்கள், ஆதரவற்றவர்கள் ஆகியோருக்கு கொரோனா நோய் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு அவர்கள் அனைவரையும் மண்டலம்-*09* எல்லைக்குப்பட்ட சமுதாய நலக்கூடங்களில் சமூக இடைவெளியை பின்பற்றி தங்க வைக்கப்பட்டு அதில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களை அவர்களின் சொந்த ஊருக்கு ஏற்ப இரயில் வண்டிகளில் முன்பதிவு மேற்கொண்டு உணவு பொட்டலம் மற்றும் குடிநீருடன் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதே போல் ஆதரவற்றோர், வீடற்றோர், முதியவர்கள் ஆகியோர் சமுதாய நல கூடங்களில் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இரவு காப்பகங்களிலும் *(Night Shelter)* சமூக இடைவெளியை பின்பற்றி பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு தடை உத்தரவால் கடந்த *23.03.2020* முதல் மண்டலம்-*09* உள்ள சுமார் ஐந்து சமுதாய நல கூடங்களில் தங்க வைக்கப்பட்ட மேற்கண்டவர்களுக்கு தினந்தோறும் மூன்று வேளை உணவுகள் சுழ்நிலைக்கேற்ப ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க அம்மா உணவகங்கள் மூலமாகவும், அதிகபடியான தேவையின்போது பற்றாக்குறையின் பொருட்டு தனியார் உணவகங்களில் இருந்து பொட்டலங்கள் பெறப்பட்டு எவ்வித உணவு தட்டுபாடும் இன்றி சுகாதாரமான முறையில் மேற்கண்டவர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டது. இதற்கான செலவு தொகைகளை ஆணையர் அவர்களின் அறிவுரைக்கிணங்க அந்தந்த மண்டலங்கள் வட்டார துணை ஆணையர் மூலமாக அவசரத்துக்கு ஏற்ப முன்பணம் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கொரோனா நோய் தொற்று தடுப்பு பணியில் தொடர் நடவடிக்கையாக ஊரடங்கு உத்திரவு கால நீடிப்பு செய்யப்பட்டதால் மேற்கண்டவர்களை அவரவர் சொந்த ஊருக்கு அனுப்புவதில் காலதாமதம் எற்பட்டது, அவர்களின் அசௌகரியங்களையும் பொருட்டு காலை கடன்களை முடிக்கும் வகையில் அவர்களுக்கு தேவையான டூத் பேஸ்ட், டூத் பிரஸ், குளியல் சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவை தங்கி இருப்பவர்களுக்கு ஆணையர் அவர்களின் அறிவுரைக்கேற்ப (அவ்வப்போது நடைபெற்ற கானொலி காட்சி ஆய்வு கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகள்*)* கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

மேலும், அவர்களுக்கு குடிப்பதற்கு தேவையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் காலை மற்றும் மாலை இருவேளைகள் தேநீர் மற்றும் பிஸ்கட் வாரத்தில் இரண்டு மூன்று முறை மாலை நேரங்களில் சமூசா போன்ற சிற்றுண்டிகள் அவர்களின் மன அழுத்தத்தை போக்கி மகிழ்விக்கும் வகையில் வழங்கப்பட்டது. அதற்கான செலவுகளும் பெறப்பட்ட முன்பணம் மூலமாக ஒரு குறிப்பிட்ட தொகை பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

ஊரடங்கு தொடக்கத்தில் சமூக நலக்கூடங்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கு சமூகநலக்கூடங்களில் சமையல் செய்து வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உயர் அதிகாரிகள் அறிவுறுத்தியதற்கிணங்க அமுதம் நிறுவனத்தில் அதற்கான மளிகை பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு சுமார் ஐந்து நாட்களுக்கு கோட்டம்-*124*ல் உள்ள இரவு காப்பகத்தின் சமையல் கூடத்தில் சமைத்து உணவு வழங்கப்பட்டது. அவர்கள் உணவு உண்பதற்கு ஏதுவாக சில்வர் தட்டுகள் கட்டணத்திற்கு கொள்முதல் செய்து வழங்கப்பட்டது.

**ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்1/ 3369/2020**

மண்டலம்-9 ஐ பொருத்தவரை சமுதாய நல கூடங்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கு இரவில் உறங்குவதற்கு வசதியாக பாய் மற்றும் போர்வைகள் தொண்டு நிறுவனங்களால் ஒரு குறிப்பிட்ட அளவு வழங்கப்பட்டது போக பற்றாக்குறை நபர்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. அதேபோல் அவ்வப்போது தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட உணவு பொட்டலங்கள் மாநகராட்சி இரவு காப்பகங்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கும், மாநகராட்சியில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணியில் ஈடுபட்ட கடை நிலை ஊழியர்களான துப்புரவு தொழிலாளிகளுக்கும் வழங்கும் பொருட்டு மண்டலத்தின் பல்வேறு கோட்டங்களில் அமைந்துள்ள சமுதாய நலகூடங்கள் மற்றும் இரவு காப்பகங்களுக்கு வழங்குவதற்கும் ஏதுவாக வாகன வசதி ஏற்படுத்தப்பட்டு (தனியார் ஆட்டோ) விநியோகம் செய்யப்பட்டது. அதற்கான செலவு தொகை முன் பணத்தில் இருந்து தீர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

மேற்கண்ட செலவுகளை மேற்கொள்ள ஏதுவாக சூழ்நிலைக்கேற்ப அவசர அவசிய பணிகளின் பொருட்டு மிக அத்தியாவசிய தேவைகளை உடனடியாக கொள்முதல் செய்திட ஏதுவாக ஐந்து முறை வெவ்வேறு நாட்களில் வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெறப்பட்டு ரூபாய் பதினொரு லட்சம் (1,00,000 + 2,00,000 + 2,00,000 + 3,00,000 + 3,00,000 = ரூ. 11,00,000/-) பெறப்பட்டு வழங்கப்பட்டது. மண்டலம்-9ல் பெறப்பட்ட முன்பணம் ரூ.11,00,000/-ஐ கொண்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது அதன் விவரங்கள் சமூகநலக்கூடம் வாரியாக பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

**கோட்டம் - 116, வெங்கட்ரங்கன் பிள்ளை தெரு (V.R.Pillai Street) சமுகநலக்கூடம்:**

| வ.எண் | பொருளடக்கம் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| 01. | பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா உணவகம் மூலமாக பெறப்பட்டு வழங்கப்பட்ட உணவுக்கான செலவு தொகை (23.03.2020 முதல் 18.06.2020 வரை) | ரூ.82,890/- |
| 02. | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்து வழங்கப்பட்டதற்கான செலவு தொகை ( 23.03.2020 முதல் 20.06.2020 வரை) | ரூ.16,200/- |
| 03. | தேநீர் மற்றும் பிஸ்கேட் காலை மற்றும் மாலை இருவேளை வழங்கப்பட்டதற்கான செலவு தொகை (09.04.2020 முதல் 20.06.2020 வரை) | ரூ.1,30,590/- |
| 04. | அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிட (டூத்பேஸ்ட், டூத்பிரஸ், சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய்) மேற்கொள்ளப்பட்ட செலவு தொகை (09.04.2020 முதல் 31.05.2020 வரை) | ரூ.18,360/- |
| 05. | மாலை வேளையில் ஒருநாள் விட்டு ஒருநாள் சிற்றுண்டி (சமோசா) வாங்கிட மேற்கொள்ளப்பட்ட செலவு (09.04.2020 முதல் 29.05.2020 வரை) | ரூ.21,126/- |
| | மொத்தம் | ரூ.2,69,166/- |

**கோட்டம் - 117, டாக்டர் கிரியப்பா சாலை (Dr.Giriyappa Road) சமுகநலக்கூடம்:**

| வ.எண் | பொருளடக்கம் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| 01. | பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா உணவகம் மூலமாக பெறப்பட்டு வழங்கப்பட்ட உணவுக்கான செலவு தொகை (23.03.2020 முதல் 09.07.2020 வரை) | ரூ.1,24,038/- |
| 02. | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்து வழங்கப்பட்டதற்கான செலவு தொகை ( 23.03.2020 முதல் 09.07.2020 வரை) | ரூ.29,850/- |
| 03. | தேநீர் மற்றும் பிஸ்கேட் காலை மற்றும் மாலை இருவேளை வழங்கப்பட்டதற்கான செலவு தொகை (09.04.2020 முதல் 09.07.2020 வரை) | ரூ.2,09,850/- |

ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்1/ 3369/2020

| | | |
|---|---|---|
| 04. | அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிட (டூத்பேஸ்ட், டூத்பிரஸ், சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய்) மேற்கொள்ளப்பட்ட செலவு தொகை (09.04.2020 முதல் 09.07.2020 வரை) | ரூ.44,240/- |
| 05. | மாலை வேளையில் ஒருநாள் விட்டு ஒருநாள் சிற்றுண்டி (சமோசா) வாங்கிட மேற்கொள்ளப்பட்ட செலவு (09.04.2020 முதல் 29.05.2020 வரை) | ரூ.29,918/- |
| | மொத்தம் | ரூ.4,37,896/- |

**வாகனப் பயன்பாட்டிற்கான செலவு விவரம்:**

| | | |
|---|---|---|
| 01. | தொண்டு நிறுவனங்கள் வழங்கிய உணவு பொட்டலங்களை மண்டலம்-9ல் உள்ள சமுதாய நலக்கூடங்களில் தங்க வைக்கப்பட்டவர்களும், இரவு காப்பகங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் உரிய நேரத்தில அவ்வுணவு பொருட்களை வழங்கிட ஏதுவாக வாகன வசதி தனியார் ஆட்டோ பயன்படுத்தியதற்காக வழங்கப்பட்ட செலவினத் தொகை (15.04.2020 முதல் 19.05.2020 வரை) 35 நாட்கள் நாளோன்றுக்கு ரூ.1000/- வீதம் | ரூ.35,000/- |

**கோட்டம்-116 மற்றும் 117ல் தங்கவைக்கப்பட்டவர்களுக்கு டவல் கொள்முதல் செய்து வழங்கப்பட்ட செலவு விவரம்**

| | | |
|---|---|---|
| 01. | கோட்டம்-116 மற்றும் 117ல் தங்கவைக்கப்பட்டவர்களுக்கு அவ்வப்பொழுது தேவைக்கேற்ப டவல் மொத்தம் சுமார் 1650 எண்ணிக்கையில் வெவ்வேறு நாட்களில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டது. ஒரு டவலின் வலை ரூ.32/- வீதம் ( 1650 X 32/- ) கணக்கிடப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டது. கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் விவரம் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. | ரூ.52,800/- |

**கோட்டம் - 122, 123, மற்றும் 125 ஆகிய சமூகநலக்கூடங்கள்:**

| வ.எண் | பொருளடக்கம் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| 01 | பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா உணவகம் மூலமாக பெறப்பட்டு வழங்கப்பட்ட உணவுக்கான செலவு தொகை (23.03.2020 முதல் 09.07.2020 வரை) | ரூ.34,169/- |
| 02. | தனியார் உணவத்தில் இருந்து பெறப்பட்டு வழங்கப்பட்ட உணவுக்கான தொகை | ரூ.49,225/- |
| 03 | மளிகை பொருட்கள் ( அமுதம்) | ரூ.37,227/- |
| 04 | காய்கறிகள் | ரூ. 5,035/- |
| 05 | பாத்திரம் (Steel Plates) | ரூ.8,000/- |
| 06 | தேங்காய் எண்ணெய் (Oil) | ரூ. 4,500/- |
| 07 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்து வழங்கப்பட்டதற்கான செலவு தொகை ( 23.03.2020 முதல் 09.07.2020 வரை ) | ரூ.75,120/- |
| 08 | தேநீர் மற்றும் பிஸ்கெட் காலை மற்றும் மாலை இருவேளை வழங்கப்பட்டதற்கான செலவு தொகை ( 09.04.2020 முதல் 09.07.2020 வரை ) | ரூ.1,56,795/- |

| | | |
|---|---|---|
| 09 | அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிட (டூத்பேஸ்ட், டூத்பிரஸ் மற்றும் சோப்பு ) | ரூ.52,500/- |
| 10 | சமுதாய நலக்கூடத்தில் (23.03.2020 முதல் 09.07.2020 வரை) தங்க வைக்கப்பட்டவர்களுக்கு Bed Sheet சுமார் 400 எண்ணிக்கையில் 07.04.2020 மற்றும் 01.06.2020 ஆகிய இரண்டு நாட்களில் ஒரு Bed Sheet-ன் விலை ரூ.130/- ( 400 x 130) கொள்முதல் செய்து வழங்கப்பட்டதற்கான செலவு தொகை | ரூ.52,000/- |
| | மொத்தம் | ரூ.4,74,521/- |

மேற்கண்ட பட்டியலில் இதுகாறும் சுமார் ரூ. 12,69,383/- தொகை சமுதாய நலகூடங்களில் தங்க வைக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசியத்தின் காரணமாக செலவிடப்பட்டது. இச்செலவினங்கள் அனைத்தும் கடந்த 23.03.2020 முதல் 09.07.2020 வரை கணக்கிடப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலுவைத் தொகையில் ஐந்து சமுதாய நலக்கூடத்தில் (கோட்டம்-116, 117, 122, 123 மற்றும் 125ல்) தங்க வைக்கப்பட்டவர்களுக்கு அம்மா உணவகத்தின் மூலமாக மிக குறைந்த விலையில் சுவையான உணவு பெறப்பட்டு வழங்கப்பட்டதற்கான மொத்த செலவு ரூ. 2,41,097/-ல் இதுகாறும் வழங்கப்பட்ட தொகை ரூ. 34,169/- போக மீதமுள்ள ரூ.2,06,928/- தொகை அம்மா உணவகத்திற்கு செலுத்தப்பட வேண்டும். (அவ்வப்பொழுது அரசால் இடையிடையே அம்மா உணவகத்தில் உணவுகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டதால் மற்ற தினங்களுக்கான தொகையினை உடனடியாக கணக்கிட்டு தீர்வு செய்யப்படாததால் ரூ.2,06,928/- நிலுவையில் இருந்தது.

அம்மா உணவகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.2,06,928/- ஐ பெறப்பட வேண்டிய கூடுதல் செலவினத் தொகையில் இருந்து வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்பட வேண்டிய தொகை மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் சுகாதார துறையின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். எனவே இரண்டு நிகழ்வுகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதால் உணவுக்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகையினை பெற்று செலுத்துவதில் இருந்து நேரடியாகவே ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று விலக்களிக்கலாம் என என்ற கருத்திற்கு துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) 28.09.2020 நாளிட்ட மேற்குறிப்பில் மாவட்ட வருவாய் அலுவலர் (அஉ) அவர்களின் கருத்துரு கோரப்பட்டது.

மேற்படி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் உத்தரவிற்கு, மாவட்ட வருவாய் அலுவலர் (அஉ) அவர்கள் கீழ்கண்டவாறு கருத்துரு வழங்கியுள்ளார்.

" இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் அறிவுறுத்தலின்படி, 23.03.2020 முதல் 09.07.2020 வரை மண்டலம்-9 கோட்டம்-116 மற்றும் 117ல் கெரோனா தொற்று காலத்தில் சமுதாய நல கூடங்களில் தங்க வைக்கப்பட்ட ஆதரவற்றோர், வீடற்றோர் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அம்மா உணவகங்களில் உணவு பெற்று வழங்கப்பட்டமைக்குரிய செலவினத் தொகை ரூ. 2,06,928/- யினை ஆதரவற்றோர், வீடற்றோர் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அத்தியாவசிய தேவைகள் வழங்க பெறப்பட்ட மத்திய அரசின் நிதியிலிருந்து மேற்குறிப்பிட்ட ரூ. 2,06,928/- யினை செலுத்திய பின், மண்டலம்-9ல் கொரோனா தொற்று காலத்தில் சமுதாய நலக்கூடங்களில் தொழிலாளர்களுக்கு அத்தியாவசிய தேவைகள் செய்தமைக்காக பெறப்பட்ட முன்பணத் தொகையினை பட்டி நேர் செய்ய அறிவுறுத்த வேண்டி, துணை ஆணையர் (வ ம நி) அவர்களுக்கு கோப்பு மீள சமர்பிக்கப்படுகிறது. "

மேற்படி பணிகள் செயல்படுத்த முன்பணமாக ரூ. 11,00,000/- பெறப்பட்டது. ஆனால் இப்பணிகள் முழுமையாக நிறைவேற்ற மொத்த ரூ.12,69,383/- வரை செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக அம்மா உணவகத்தில் மட்டும் (1) ரூ. 82,890/- (2) ரூ. 1,24,038/- (3) ரூ. 34,169/- என மொத்தம் ரூ. 2,41,097/- அளவிற்கு உணவுகள் கொள்முதல் செய்யப்பட்டது. இதில் பெறப்பட்ட முன்பணத்தில் ரூ. 34,169/- மட்டும் செலுத்தப்பட்ட நிலையில் மீதம் ரூ. 2,06,928/- அம்மா உணவகத்திற்கு செலுத்தப்பட வேண்டும். ஆகமொத்தம் பெறப்பட்ட முன்பணம் ரூ. 11,00,000/-ல் ரூ. 10,62,455/- செலவுகள் மேற்கொள்ளப்பட்டு, மீதமுள்ள தொகை ரூ. 37,545/-ஐ கருவூலத்தில் செலுத்தப்பட்டது. ( செலுத்தப்பட்ட கருவூல ரசீது இணைக்கப்பட்டுள்ளது )

மேலும், அவசியம் மற்றும் அவசர நிலையை கருத்தில் கொண்டு பெறப்பட்ட முன்பணம் ரூ. 11,00,000/-க்கு மிகையாக செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அம்மா உணவகத்திற்கு ரூ. 2,06,928/- செலுத்தப்பட வேண்டியுள்ளதால், மத்திய வட்டார இணை ஆணையர் அவர்களின் 05.11.2020 நாளிட்ட ஆணையின்படி ரூ.2,06,928/- முன்பணம் பெற்று அதனை அம்மா உணவகத்தின் கணக்கு தலைப்பின் கீழ் கருவூலத்தில் செலுத்தப்பட்டது. கருவூல ரசீது எண்.06/2021-22/0223460, நாள் : 10.06.2021 ( கருவூல செலான் இணைக்கப்பட்டுள்ளது)

எனவே, பெறப்பட்ட முன்பண தொகை ரூபாய் 11,00,000/- மற்றும் ரூ.2,06,928/- என மொத்தம் ரூ. 13,06,928/- தொகையினை சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டியல்களின் அடிப்படையில் மண்டல கணக்கு அலுவலர்-9 அவர்களின் வழிமுறையாக பெருநகர சென்னை மாநகராட்சி நிதி ஆலோசகர் அவர்கள் மூலமாக நேர் செய்திட,

(அ) கொரானா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தால் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-09 எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 5 சமூக நலக்கூடங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த ஆதரவற்று வெளியில் செல்ல இயலாத நிலையில் இருந்தவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் அம்மா உணவகங்களில் இருந்து கடந்த 23.03.2020 முதல் 09.07.2020 வரை பெறப்பட்ட உணவுகள் மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டது. இதற்காக முன்பணம் ரூ. 11,00,000/- மற்றும் ரூ. 2,06,928/- என ரூ. 13,06,928/-யினை வைக்கப்பட்டுள்ள பட்டிகளின் அடிப்படையில் நேர் செய்திடவும்,

ஆ) மேற்படி தொகையினை நேர் செய்வதற்கு ஏதுவாக கொரோனா செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்ணில் ரூ. 13,06,928/- நிதியை நிதி ஆலோசகர் அவர்கள் மூலம் ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 14.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**Br.D.C.No.B3/1589/2004**

**Resolution No.511/2021** **Date:17-06-2021**

**Greater Chennai Corporation - Bridges Department - Construction of ROB in lieu of existing Level Crossing at Villivakkam LC-1 in Division 65, 95 & 96, Zone VI & VIII (at Km 8/34-36 near Villivakkam Railway station - ICF Gate) – Work is in progress – Work delayed due to Covid-19 pandemic situation & Land Acquisition – Extension of time requested – For approval.**

The work of construction of ROB in lieu of existing Level Crossing at Villivakkam LC-1 in Division 65, 95 & 96, Zone VI & VIII (at Km 8/34-36 near Villivakkam Railway station - ICF Gate) has been entrusted to M/s.Thomas Iyyadurai Infrastructure Private Ltd JV with M/s.Arul Jothi Infrastructure Private Ltd. Letter of Acceptance was issued to the contractor on 31.10.2019. The work was commenced by the contractor on 28.01.2020 and the work is in progress.

The work could not be taken up on either side of the Railway tracks since on the southern side encroachments were exists and in the northern side encroachments and private lands to be acquired.

Due to Covid-19 pandemic situation work could not be continued from 23.03.2020, as Government of Tamil Nadu vide G.O.(Ms).No.152 dated 23.03.2020 instructed to close the industries to contain the spread of Corona Virus. Subsequently, Government vide G.O.(Ms).No.262 dated 31.05.2020, stated that industries can operate with 100% of employees. Hence the work was stalled for the period of 2 months, from 23.03.2020 to 31.05.2020.

At present, bridge works are in progress on southern side (ICF side), after relocating the 34 families to Athipet TNSCB Slum tenements and after construction of new compound wall and demolition of the existing compound wall by ICF. Bridge work on northern side (Kolathur side) could be taken up only after the Land Acquisition (LA) and shifting of existing utilities of CMWSSB and TANGEDCO in the acquired land portion.

The Government has accorded Administrative Sanction for LA vide G.O.(Ms) No.129 dated 16.11.2020. In order to speed up the LA process, it has been requested the Government to amend the G.O. for acquiring the private lands through private negotiation and the amended G.O. yet to be received from the Government.

The contractor vide his letter dated.04.06.2021, stated that the work could not be completed due to the following reasons:-

1. Land pertaining to Pier-1, Pier - 4, Abutment & retaining wall area portions are handed over by ICF only on Apr’21
2. Shifting of metro water line fouls on the alignment of Pier-3
3. Shifting of electricity poles at Pier-3 locations was delayed and shifted only on Apr’21

**Br.D.C.No.B3/1589/2004**

4. Lock down imposed by GOI due to Covid-19 from 22.03.2020 & 10.05.2021 to till date
5. On Northern side, work could not be carried out due to land acquisition and shifting of CMWSSB & TANGEDCO utilities.

It is submitted that as per the contract, the date of completion of this project is 27.07.2021. The lock down period from 23.03.2020 to 31.05.2020 may be considered as break period (2 months). The contract period may be extended for 8 months from the date of handing over the site on northern side after LA and shifting of CMWSSB & TANGEDCO utilities in acquired land portion.

Hence, to extend the contract period for 8 months from the date of handing over the site on northern side after LA and shifting of CMWSSB & TANGEDCO utilities in acquired land portion. Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.15.06.2021 is read.

**"Approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

************

**ம.அ.13,ந.க.எண்.சி1/2259/2021**

**தீர்மான எண்.512/2021** **நாள்:26-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கோவிட்-19 (அலை-2) - மண்டலம்-13க்குட்பட்ட வார்டு-170 CITS Hostel-ல் உள்ள National Skill Institute, வார்டு-174 IIT-ல் உள்ள தாமிரபரணி Hostel மற்றும் குருநானக் பள்ளி மற்றும் வார்டு-171 அண்ணா பல்கலைகழக புதிய கட்டிடத்தில் உள்ள Covid Care Centre-ல் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு வழங்கவும், தூய்மைப்பணி மேற்கொள்ளவும், கழிவறை சுத்தம் செய்யும் பணி, பாதுகாவலர் பணி மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் (MCC) நடைமுறையில் இருந்ததினால் பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா-19 (அலை-1)ல் இப்பணிகளை மேற்கொண்ட தனியார் நிறுவனமான M/s.GRT Enterprises மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13க்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று (அலை-2) அதிக அளவில் ஏற்படுவதால், சிகிச்சை அளிப்பதற்கு போதுமான இடவசதி இல்லாததால், தனியார் நிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைகழங்களில் உள்ள தங்கும் விடுதிகள் தேர்வு செய்யப்பட்டு, அவ்விடத்தில் படுக்கை வசதிகளை ஏற்படுத்தி, கொரோனா வைரஸ் நோய் தொற்று கண்டறியப்பட்டவர்களை தனிமைப்படுத்தி, சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பல்வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால், மண்டலம்-13க்குட்பட்ட வார்டு-170 CITS Hostel-ல் உள்ள National Skill Institute, வார்டு-174 IIT-ல் உள்ள தாமிரபரணி Hostel மற்றும் குருநானக் பள்ளி மற்றும் வார்டு-171 அண்ணா பல்கலைகழக புதிய கட்டிடத்தில் உள்ள Covid Care Centre ஆக மொத்தம் 4 Covid Care Centre-ல் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு வழங்கவும், தூய்மைப்பணி மேற்கொள்ளவும், கழிவறை சுத்தம் செய்யும் பணி, பாதுகாவலர் பணி மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் (MCC) நடைமுறையில் இருந்ததினால் பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா-19 (அலை-1)ல் இப்பணிகளை மேற்கொண்ட தனியார் நிறுவனமான M/s.GRT Enterprises மூலம் மேற்கொள்ளலாம் என கருதி 15.04.2021 நாளிட்ட கடிதம் பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தொகையின் விவரம் பின்வருமாறு:-

**ANNA UNIVERSITY NEW BUILDING-Date of Commencement 23-4-2021**

| SL NO | Description | SHIFT 1 | SHIFT -2 | SHIFT -3 | TOTAL | Rate (INR) per day per person + GST 18% | Total Amount for 90 days |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TOILET CLEANING & DISINFECTION | 5 | 5 | 5 | 15 | 616.00+ 111.00 = Rs.727.00 | 727 x 44 x 90 = 2878920.00 |
| 2 | FOOD DISTRIBUTORS AND ATTENDANT | 5 | 5 | 0 | 10 | | |
| 3 | WARD CLEANING & DISINFECTION | 6 | 5 | 5 | 16 | | |
| 4 | SUPERVISORS | 1 | 1 | 1 | 3 | | |
| | **TOTAL** | **17** | **16** | **11** | **44** | **Total -A** | **2878920.00** |

**CITS GUINDY- Date of Commencement 16-4-2021**

| SL NO | Description | SHIFT 1 | SHIFT -2 | SHIFT -3 | TOTAL | Rate (INR) per day per person + GST 18% | Total Amount for 90 days |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TOILET CLEANING & DISINFECTION | 4 | 4 | 5 | 13 | 616.00+ 111.00 = Rs.727.00 | 727 x 36 x 90 = 2355480.00 |
| 2 | FOOD DISTRIBUTORS AND ATTENDANT | 5 | 3 | 0 | 8 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | WARD CLEANING & DISINFECTION | 4 | 4 | 4 | 12 | | |
| 4 | SUPERVISORS | 1 | 1 | 1 | 3 | | |
| 5 | SECURITY | 1 | 1 | 1 | 3 | 450.00+ 81.00 = Rs.531.00 | 531 x 3 x 90 = 121500.00 |
| | **TOTAL** | **15** | **13** | **11** | **39** | **Total -B** | **2476980.00** |

**<u>GURUNANK SCHOOL - Date of Commencement 17-4-2021</u>**

| SL NO | Description | SHIFT 1 | SHIFT -2 | SHIFT -3 | TOTAL | Rate (INR) per day per person + GST 18% | Total Amount for 90 days |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TOILET CLEANING & DISINFECTION | 4 | 4 | 5 | 13 | 616.00+ 111.00 = Rs.727.00 | 727 x 40 x 90 = 2617200.00 |
| 2 | FOOD DISTRIBUTORS AND ATTENDANT | 6 | 5 | 0 | 11 | | |
| 3 | WARD CLEANING & DISINFECTION | 4 | 4 | 5 | 13 | | |
| 4 | SUPERVISORS | 1 | 1 | 1 | 3 | | |
| 5 | SECURITY | 1 | 1 | 1 | 3 | 450.00+ 81.00 = Rs.531.00 | 531 x 3 x 90 = 121500.00 |
| | **TOTAL** | **16** | **15** | **12** | **43** | **Total -C** | **2738700.00** |

**<u>IIT TAMIRABARANI - Date of Commencement 20-4-2021</u>**

| SL NO | Description | SHIFT 1 | SHIFT -2 | SHIFT -3 | TOTAL | Rate (INR) per day per person + GST 18% | Total Amount for 90 days |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TOILET CLEANING & DISINFECTION | 4 | 4 | 4 | 12 | 616.00+ 111.00 = Rs.727.00 | 727 x 44 x 90 = 2878920.00 |
| 2 | FOOD DISTRIBUTORS AND ATTENDANT | 6 | 5 | 0 | 11 | | |
| 3 | WARD CLEANING & DISINFECTION | 7 | 6 | 5 | 18 | | |
| 4 | SUPERVISORS | 1 | 1 | 1 | 3 | | |
| 5 | SECURITY | 1 | 1 | 1 | 3 | 450.00+ 81.00 = Rs.531.00 | 531 x 3 x 90 = 121500.00 |
| | **TOTAL** | **19** | **17** | **11** | **47** | **Total -D** | **3000420.00** |
| | | | | **G. Total - (A to D)** | | | **11095020.00** |

பேரிடர் காலங்களில் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோராமல் தேவையான மருத்துவ உபகரணங்களை நேரடியாக கொள்முதல் செய்வதற்கான வழிவகைகள் தலைவர் மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமை மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு பேரிடர் மேலாண்மை விதி எண்.50 (a)-ல் பின்வருமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

*50. Emergency Procurement and accounting:- Where by reason of any threatening disaster situation or disaster, the National Authority or the State Authority or the District Authority is satisfied that immediate procurement of provisions or materials or the immediate application of resources are necessary for rescue or relief.*

*(a) It may authorize the concerned department or authority to make the emergency procurement and in such case, the standard procedure requiring inviting of tenders shall be deemed to be waived;*

**ம.அ.13நக.எண்.சி1/2259/2021**

*(b) A Certificate about utilization of provisions or materials by the controlling officer authorized by the National Authority, State Authority of District Authority, as the case may be, shall be deemed to be a valid document or Voucher for the purpose of accounting of emergency, procurement of such provisions or materials*

மேலும், சென்னை, கூடுதல் முதன்மை நிதி செயலாளரின் கடித எண்.74/JS (MA)/ Finance (Salaries)/ 2020 நாள்.01.04.2020 நாளிட்ட கடிதத்தில் அவசர காலத்தில் COVID -19 நோய் தடுப்பதற்காக மருந்து பொருட்களை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், கொரோனா வைரஸ் நோய் தொற்று தீவிரம் காட்டி வருவதால், நோய் தடுப்பு பணி மேற்கொள்வது மிக அவசியமான பணியாக இருக்கிறது. இந்நோய் தொற்று கட்டுக்குள் கொண்டுவரும் வரை இப்பணி மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே, பணியின் அவசரம் அவசியம் கருதி மண்டலம்-13க்குட்பட்ட வார்டு-170 CITS Hostel-ல் உள்ள National Skill Institute, வார்டு-174 IIT-ல் உள்ள தாமிரபரணி Hostel மற்றும் குருநானக் பள்ளி மற்றும் வார்டு-171 அண்ணா பல்கலைகழக புதிய கட்டிடத்தில் உள்ள Covid Care Centre ஆக மொத்தம் 4 Covid Care Centre-ல் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவு வழங்கவும், தூய்மைப்பணி மேற்கொள்ளவும், கழிவறை சுத்தம் செய்யும் பணி, பாதுகாவலர் பணி மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகளை கொரோனா-19 (அலை-1)ல் இப்பணிகளை மேற்கொண்ட தனியார் நிறுவனமான M/s.GRT Enterprises மூலம் இப்பணியை 90 நாட்கள் மேற்கொள்வதற்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-13க்குட்பட்ட வார்டு-170 CITS Hostel-ல் உள்ள National Skill Institute, வார்டு-174 IIT-ல் உள்ள தாமிரபரணி Hostel மற்றும் குருநானக் பள்ளி மற்றும் வார்டு-171 அண்ணா பல்கலைகழக புதிய கட்டிடத்தில் உள்ள Covid Care Centre ஆக மொத்தம் 4 Covid Care Centre-ல் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உணவளித்தல், மேற்குறிப்பிட்ட கட்டிடங்களில் உள்ள அனைத்துப் பகுதிகளும் கழிப்பறைகள், குளியலறைகள் (Toilet cleaner, floor cleaner, pineoil, sanitizer, hand wash ஆகியவைகளை கொண்டு) சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளவும் மேலும், பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்கள் தகுந்த தற்காப்பு உபகரணங்கள் அணிவது, தலைகவசம் மற்றும் கையுறையுடன் பணிகள் மேற்கொள்ளவும், இவைகளை கண்காணிக்க மேற்பார்வையாளர்களை கொண்டு முறையாக பணிகளை மேற்கொள்ளவும் (பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் உணவு மற்றும் போக்குவரத்து ஒப்பந்ததாரரை சார்ந்தது) இப்பணியினை தேர்தல் நன்னடத்தை விதிகள் (MCC) நடைமுறையில் இருந்ததினால் பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா-19 (அலை-1)ல் இப்பணிகளை மேற்கொண்ட தனியார் நிறுவனமான M/s.GRT Enterprises மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக ஒப்புதலும்.
2. அதன்படி, மண்டலம்-13க்குட்பட்ட வார்டு-170 CITS Hostel-ல் உள்ள National Skill Institute-ல் உள்ள Covid Care Centre-ல் 16.04.2021 முதல், வார்டு-174 IIT-ல் உள்ள தாமிரபரணி Hostel-ல் உள்ள Covid Care Centre-ல் 20.04.2021 முதல் மற்றும் குருநானக் பள்ளியில் உள்ள Covid Care Centre-ல் 17.04.2021 முதல் மற்றும் வார்டு-171 அண்ணா பல்கலைகழக புதிய கட்டிடத்தில் உள்ள Covid Care Centre-ல் 23.04.2021 முதல் 90 நாட்கள் ஆக மொத்தம் 4 Covid Care Centre-க்கு ரூ.1,10,95,020.00 (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து இருபது மட்டும்) மதிப்பில் இப்பணியினை மேற்கொள்ள அனுமதியும்,
3. இப்பணிக்கு ஆகும் செலவினத்தொகையை மண்டலம்-13ல் முன் பணமாக மனித வளம் (Man Power) பிரிவு எண்.20-21-07, கணக்கு குறியீடு எண். 230-70-12-03ல் கூடுதல் நிதி பெற்று வருகை பதிவேட்டின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் ஒப்பம் பெற்று ஊதியம் வழங்க அனுமதியும்,

**<u>ம.அ.13ந.க.எண்.சி1/2259/2021</u>**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 12.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

மஅ-13 வதுநகஎண். ஆர்1/1156 /2021

**தீர்மானஎண்.513/2021** **நாள்:17-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 13 - கொரோனா நோய் தடுப்பு பணி - கொரோனா நோய் வைரஸ் அதிக அளவில் பரவுவதால் கூடுதலாக 60 தன்னார்வலர்களை (Focus Volunteers) 26.04.2021 முதல் 15.07.2021 வரையில் வார்டு வாரியாக கூடுதலாக பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதிப்பிற்குரிய ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் ஆணை பெறப்பட்டு மன்றத் தீர்மானங்களின்படி மண்டலம் – 13ல் தன்னார்வ பணியாளர்கள் 14.06.2020 முதல் 11.10.2020 முடிய நான்கு மாதங்களுக்கு ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ.500/- வீதம் 207 தன்னார்வ பணியாளர்களும், 12.10.2020 முதல் 15.11.2020 முடிய 35 நாட்களுக்கு 91 தன்னார்வ பணியாளர்களும். 16.11.2020 முதல் 15.01.2021 முடிய 31 நாட்களுக்கு 56 தன்னார்வ பணியாளர்களும் பணியாற்ற அனுமதி பெறப்பட்டு ஏற்கனவே பணி செய்து வந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 15.04.2021 நாளிட்ட செயல் முறை ஆணையின்படி கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் (Focus Volunteers (Friend of Covid Citizen under Surveillance) பணியாளர்களுக்கு குறைந்தபட்ச தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.391/- என நிர்ணயம் செய்யப்பட்டு மண்டலம் – 13ல் 130 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

மண்டல அலுவலர். மண்டலம் -13 அவர்களின் தலைமையில் 19/04/2021 அன்று மண்டல நல அலுவலர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் உதவி பொறியாளர்கள் ஆலோசனை கூட்டத்தில், மண்டலம் -13ல் வார்டு 178, 179, தவிர அனைத்து வார்டுகளிலும் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தாக்கம் தற்போது அதிகரிக்கத்தொடங்கியுள்ளதால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு கூடுதலாக தன்னார்வ பணியாளர்கள் நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டதை தொடர்ந்து மண்டலம் – 13 எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு வாரியாக வார்டுகளுக்குள் (Reallocation) நியமனம் செய்யப்பட்டுள்ள தன்னார்வ பணியாளர்களை (Focus Volunteers) கூடுதலாக நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது.

தற்போது, கொரோனா நோய் வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டவர்களை வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கும் பணி மேலும் 16.04.2021 முதல் 15.07.2021 வரை தற்காலிகமாக 130 தன்னார்வ பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், கொரோனா வைரஸ் அதிக அளவில் பரவுவதால் கூடுதலாக வார்டு ஒன்றிற்கு ஐந்து முதல் பத்து வீதம் 13 வார்டுகளுக்கு 26.04.2021 முதல் 15.07.2021 முடிய 81 நாட்களுக்கு 60 தன்னார்வ பணியாளர்களை கூடுதலாக நியமிக்க ஆணை வேண்டப்படுகிறது.

**ம.அ-13 வ.து.ந.க.எண். ஆர்1/1156 /2021**

எனவே,

1. COVID -19 கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை வீட்டு தனிமைப்படுத்தல் மற்றும் தனிமை மேலாண்மை அமைப்பு (HQIMS) ன் கீழ் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட தனி நபர்கள்/ குடும்பங்களுக்கு அடிப்படைத் தேவைகள் மற்றும் மருந்துகள் வழங்குவதை உறுதி செய்யும் பணிக்காக ஏற்கனவே 16.04.2021 முதல் 15.07.2021 தற்காலிகமாக 130 தன்னார்வ பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், கொரோனா வைரஸ் அதிக அளவில் பரவுவதால் கூடுதலாக வார்டு ஒன்றிற்கு ஐந்து முதல் பத்து வீதம் 13 வார்டுகளுக்கு 26.04.2021 முதல் 15.07.2021 முடிய 81 நாட்களுக்கு 60 தன்னார்வ பணியாளர்களை கூடுதலாக பணி அமர்த்த அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியமாக ரூ. 11,730 /- வீதம் (ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.391/- வீதம்) 81 நாட்கள் மட்டும் 60x391x81 ஊதியம் ரூ.19,00,260/- வழங்கவும்,
3. மேற்கூறிய தொகைக்கான செலவினத்தை மண்டலம்-13 கணக்கு குறியீடு எண்.230701203 பிரிவு எண்.202107ல் நிதி ஒதுக்கீடு வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 14.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

ம.அ.1ந.க.எண்.பி1/1879/2021

**தீர்மானஎண்.514/2021** **நாள்:26-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 பகுதி-1 - வார்டு 1, 2 (ம) 4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட தேவைப்படும் பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் - 01.05.2021 முதல் 31.10.2021 வரை ஆறு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1,2 (ம) 3, வார்டு 1 முதல் 14 வரை உள்ளடக்கிய கோட்டங்களாகும். இப்பகுதிகள் 26.69 ச.கி.மீ பரப்பளவு உள்ளடக்கியது ஆகும். வார்டு 1 முதல் 14 வரை உள்ள பகுதிகள் மொத்த சாலைகள் 1498 இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 87,418 ஆகும். சென்னை பெரு நகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் 25.10.2011ல் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. நகராட்சியாக செயல்பட்டபோது மேற்கு பகுதிகளில் வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள பகுதிகள் பாதாள சாக்கடை கட்டமைப்பு இல்லாததாலும் மற்றும் வார்டு எண் 8 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பாதாளசாக்கடை கட்டமைப்பு ஒரு சில பகுதிகளை தவிர தேவையான அளவு உள்ளதாலும், தற்போது மண்டலம்-1ல் பயன்பாட்டிலுள்ள பக்க கால்வாய்கள் எண்ணிக்கை 360 (54.15 கி.மீ) அமைக்கப்பட்டு மழைநீர் சிறு பாலங்கள் வழியாக பொதுபணித்துறை பக்கிங்காம் கால்வாய் வழியே கடலில் சென்று அடைகிறது.

மேற்படி வார்டு எண் 1 முதல் 9 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் சேர்ந்துள்ளதால் மழை நீர் தேக்கம் அடைந்து, சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இவற்றை தவிர்த்திட போர்கால அடிப்படையில் பக்க கால்வாய்களில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுகளால் கொசு உற்பத்தி ஆகாமல் தடுத்திடவும் அக்கால்வாய்களில் தூர்வாரி அகற்றிட தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் தினக்கூலி அடிப்படையில் ஆறு மாதத்திற்கு (01.08.2020 முதல் 31.01.2021) ஆணையர் அவர்களின் 07.08.2020 நாளிட்ட ஆணை மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண் 536/2020, நாள் 10.08.2020ன்படி அனுமதி பெற்று பணிகள் முடிவுற்றது.

உதவி செயற்பொறியாளர்- பகுதி-1 அவர்களின் 21.04.2021 நாளிட்ட குறிப்பில், 01.08.2020 முதல் 31.01.2021 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவடைந்த நிலையில் இனிவரும் காலங்களில் பொது மக்களின் நலன் கருதி பக்க கால்வாய்களில் அடைப்புகள் ஏதும் ஏற்படாமல் இருப்பதற்கு கால்வாய்களில் தூர்வாரும் பணிக்கு பகுதி-1க்கு 13 பணியாளர்கள் மூலம் 01.05.2021 முதல் 31.10.2021 வரை ஆறு மாத காலம் பணிகள் மேற்கொள்ள ஆவண செய்யுமாறு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி உதவி செயற்பொறியாளர்-1 அவர்களின் குறிப்பின் அடிப்படையில் மண்டலம்-1ல் வார்டு 1,2 மற்றும் 4 வரையிலான பகுதிகளில் உள்ள பக்க கால்வாய்களுக்கு நாள் ஒன்றுக்கு 500 மீட்டர் ஒரு நபர் வீதம் 3 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் (54.06 கி.மீ) NULM மூலம் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்கள் கொண்டு பக்க கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | தெருக்களின் எண்ணிக்கை | தெருக்களின் நீளம்/ மீ | பக்ககால்வாய் எண்ணிக்கை | நீளம்/மீ | பக்க கால்வாய் தூர்வாரும் பணிக்கு தேவைப்படும் (NULM) பணியாளர்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 119 | 18779 | 61 | 10869 | 5 | |
| 2 | 2 | 106 | 11009 | 93 | 10110 | 6 | |
| 3 | 3 | 104 | 21017 | - | - | 0 | |
| 4 | 4 | 148 | 18805 | 80 | 11135 | 2 | |
| மொத்தம் | | 477 | 69610 | 234 | 32114 | 13 | |

**ம.அ.1ந.க.எண்.பி1/1879 /2021**

மேலே பட்டியலில் குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி வார்டு 1, 2 மற்றும் 4 வரையிலான பகுதிகளுக்கு பக்க கால்வாய்களின் எண்ணிக்கை 234 , (32114 மீ நீளம் உள்ளது) இக்கால்வாய்களில் உள்ள மண் மற்றும் கழிவுகள் அகற்றிட தினக்கூலி அடிப்படையில் NULM பணியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 13 பணியாளர்கள் 183 நாட்களுக்கு பணியமர்த்த (மே 01.05.2021 முதல் 31.10.2021 அக்டோபர் வரை) (ரூ.391 x 13 நபர்கள் X 183 நாட்கள்= ரூ.9,30,189/-) ரூ.9.30 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம்-1ல் 2021-22 ஆம் ஆண்டு வருவாய் நிதி, பிரிவு எண் 40-41-03, கணக்கு குறியீட்டு எண் 230-150-100ல் ரூ.1000 மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1) மண்டலம்-1 பகுதி-1, வார்டு 1 முதல் 4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட NULM மூலம் தற்காலிக பணியாளர்களை. (01.05.2021 முதல் 31.10.2021 வரை) மே முதல் அக்டோபர் வரை ஆறு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் அளித்துள்ள விலைப்பட்டியலின் அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு) ரூ.391/- வீதம் (ரூ.391x13 நபர்கள் X 183 நாட்கள் = ரூ. 9,30,189 /- ) ரூ.9.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) மேற்குறிப்பிட்ட வார்டுகளிலுள்ள 234 பக்க கால்வாய்களில் தூர்வார தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும்,
3) இப்பணிக்கு பிரிவு எண் 40-41-03, கணக்கு குறியீட்டு எண் 230-150-100ல் பட்டிகள் தீர்வு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 17.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பொ.சு.கா.ம.பி.ந.க.எண்.அ2/0238 /2021**

**தீர்மானஎண்.515 / 2021** **நாள்:26-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவு - சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களான புதுப்பேட்டை 'டி' மற்றும் பெரம்பூர் 'ஜி' ஆகியவற்றில் அடைக்கப்பட்டு - மூன்று தினங்களுக்கு அவற்றை பராமரிப்பதற்காக கடந்த 01.04.2018 முதல் வசூலிக்கப்பட்டு வரும் அபராதத் தொகையான ரூ.10,750/-ஐ மாடு வளர்போரின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு கனிசமாக குறைத்து ரூ.1,550/- என நிர்ணயம் செய்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையினரால், தெருக்களில் சுற்றித்திரியும் பசு, எருமை, காளை ஆகியவற்றை கால்நடை பிடிக்கும் வாகனங்கள் மூலம் பிடிக்கப்பட்டு புதுப்பேட்டை மற்றும் பெரம்பூரில் உள்ள மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு தொழுவங்களில் அடைக்கப்படும் மாடுகளுக்கு அபராதத்தொகையாக மாடு ஒன்றிற்கு கடந்த *31.03.2018* வரை ரூ.*1,550/-* வீதம் வசூலிக்கப்பட்டு வந்தது.

சென்னை மாநகராட்சி, பெருநகர சென்னை மாநகராட்சியாக விரிவாக்கம் செய்யப்பட்ட பின்னர் அதிகளவில் கால்நடைகள் சாலைகளில் சுற்றித்திரிவதால் போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் மிகவும் இடையூறு இருப்பதாக பொது மக்கள் புகார் பிரிவில் அதிகளவில் புகார்கள் பெறப்பட்டு வந்ததால் இப்பிரச்சனைக்கு தீர்வு காணும் பொருட்டு மாடு ஒன்றிற்கு அபராதத் தொகையாக ரூ.*10,750/-* என *01.04.2018* முதல் உயர்த்தப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

உயர்த்தப்பட்டுள்ள அபராதத் தொகையை குறைக்க கோரி மாடு உரிமையாளர்களிடமிருந்தும் பல்வேறு அரசியல் பிரமுகர்களிடமிருந்தும் கோரிக்கை கடிதங்கள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

1. திரு.*B.R.*தாமோதரன், மாநில தலைவர், சமாஜ்வாடி மக்கள் கட்சி, சென்னை- *49*, தேதி *08.05.2018.*
2. திரு.*M.V.*சேகர், நிறுவனர்/தலைவர், கோகுல மக்கள் கட்சி ஆழ்வார்பேட்டை, சென்னை- *18*, தேதி: *23.04.2018.*
3. திருவல்லிக்கேணி-சேப்பாக்கம் யாதவர்கள் மாடு வளர்ப்போர் சங்கம், திருவல்லிக்கேணி சேப்பாக்கம் தொகுதி, சென்னை-*05*, தேதி: *06.04.2018.*
4. திரு.*K.*ராஜேந்திரன், மாநகர கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியாளர் நலச்சங்கம், அமைந்தகரை, சென்னை.*29.*
5. திரு.கோபாலகிருஷ்ணன், மாநில தலைவர் தமிழ்நாடு யாதவ் மகாசபை, சிந்தாதரிப்பேட்டை, சென்னை-*02.*
6. திரு.சரசுமுத்து யாதவ், நிறுவனர்/தலைவர், தமிழ்நாடு யாதவ சங்கம், சென்னை-*81.*
7. பொதுச் செயலாளர், கால்நடை விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், தேதி: *31.05.2021.*

கடந்த *5* ஆண்டுகளில் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு இரண்டு மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்ட விவரம் மற்றும் வசூலிக்கப்பட்டு கருவூலத்தில் செலுத்தப்பட்ட அபராதத் தொகை விவரம் பின்வருமாறு:

பொ.சு.கா.ம.பி.ந.க.எண்.அ2/0238 /2021

| வ.எண். | வருடம் | பிடிக்கப்பட்ட மாடுகளின் எண்ணிக்கை | வசூலிக்கப்பட்ட அபராத தொகை |
|---|---|---|---|
| 01. | 2016-2017 | 1371 | ரூ.21,79,200/- |
| 02. | 2017-2018 | 1622 | ரூ.26,99,200/- |
| அபராதத் தொகை உயர்த்தப்பட்ட பின் | | | |
| 01. | 2018-2019 | 653 | ரூ.52,46,900/- |
| 02. | 2019-2020 | 642 | ரூ.64,79,100/- |
| 03. | 2020-2021 | 280 | ரூ.27,42,000/- |

இந்த அட்டவணைப்படி, அபராதத் தொகை உயர்த்தப்பட்ட பிறகு மண்டலந்தோறும் பிடிக்கப்படும் சுற்றித்திரியும் மாடுகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. இதுகுறித்து மண்டல அளவில் மண்டல நல அலுவலர், கால்நடை உதவி மருத்துவர், துப்புரவு அலுவலர் ஆகியோர் மாடுகளின் உரிமையாளர்களுடன் அவ்வப்போது கலந்துரையாடல் கூட்டங்களை நடத்தி மாடுகளை சாலைகளில் திரிய விடக்கூடாது என்று அறிவுரைகளையும் விழிப்புணர்வையும் வழங்கி வருகின்றனர்.

உயர்த்தப்பட்ட அபராத தொகையை குறைக்க வேண்டி கால்நடை விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களிடம் கோரிக்கை மனுவை 31.05.2021 அன்று அளித்துள்ளனர்.

மேலும் துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களிடம் 07.06.2021 அன்று, அபராத தொகை குறைப்பு குறித்து நடத்தப்பட்ட ஆலோசனையில் இந்த அபராதத் தொகையை மாடு ஒன்றிற்கு ரூ.1,550/-ஆக குறைக்க அறிவுறுத்தியுள்ளார்.

ஆகவே, மாடு வளர்ப்போர்கள் மற்றும் உரிமையாளர்களின் ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு, மனிதாபிமான அடிப்படையிலும், கொரோனா பெருந்தொற்று காலம் என்பதையும் கருத்தில் கொண்டு சுற்றித்திரியும் மாடுகளை பிடிக்கும் இடத்திலும், அவற்றை மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களில் அடைக்கும் போதும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மாடுகளை சாலைகளில் திரிய விடுபவர்களுக்கு உரிய எச்சரிக்கை விடுப்பதற்கு ஏதுவாகவும், தற்போது வசூலிக்கப்பட்டு வரும் அபராதத் தொகையான மாடு ஒன்றிற்கு ரூ.10,750/- என்பதை ரூ.1,550/- ஆக குறைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள் மற்றும் பொது இடங்களில் சுற்றித் திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டால், அபராதத் தொகையாக மாடு ஒன்றிற்கு 3 தினங்களுக்கு ரூ.1,250/- மற்றும் 3 நாட்களுக்கு பராமரிப்பு செலவாக ரூ.300/- ஆக மொத்தம் ரூ.1,550/-ஐ அபராதத் தொகையாக நிர்ணயம் செய்வதற்கும், இதனை 20.06.2021 முதல் நடைமுறைப்படுத்தவும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியால் பிடிக்கப்படும் கால்நடைகளுக்கு அடையாளமாக காது மடலில் பெருநகர சென்னை மாநகராட்சி வரிசை எண்கள் அடிப்படையில் முத்திரை வில்லை பொருத்துவதற்கும்,
3. முத்திரை வில்லை பெருத்தப்பட்ட கால்நடைகள் மீண்டும் பிடிக்கப்பட்டால், அவற்றை தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் உரிய முறையில் ஒப்படைக்கவும்,

4. காவல் துறையின் ஒத்துழைப்புடன் மாடு பிடிக்கும் பணியை மேற்கொள்வதற்கும்,
5. அதன்படி, தற்போது மாடுகள் பிடிக்கப்பட்ட பின்னர், அதனை மாட்டு தொழுவத்திலிருந்து விடுவித்து எடுத்து செல்ல மாட்டின் உரிமையாளர்கள் சமர்ப்பிக்கும் பிரமாண பத்திரத்தில் மாடுகளை விடுவிக்க சுகாதார ஆய்வாளர் மற்றும் மண்டல நல அலுவலர் ஆகியோர் பரிந்துரைத்து கையெழுத்திடுவர். இந்த நடைமுறையில் கூடுதலாக மாடு வளர்ப்பவர்களின் வீடு அல்லது மாடு பிடிப்பட்ட எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் உள்ள ஆய்வாளர்களின் பரிந்துரை கையொப்பமும் மாடு வளர்ப்பவர்கள் பெற்று சமர்ப்பிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**பொ.து.ந.க.எண்.ஈ2/27614/2020**

**தீர்மானஎண்.516/2021** **நாள்:22-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மன்றத் துறை - மன்றச் செயலாளர் - 15.05.2020யை மைய நாளாகக் கொண்டு 2020-2021 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் - காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் இன்மைப்பட்டியல் (Nil Panel) ஆக வெளியிட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், மன்றத்துறை, மன்றச் செயலாளர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் 1 ஆகும். இப்பதவிக்கான 'தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மையநாள் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 15 ஆம் தேதி ஆகும். தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | மன்றச் செயலாளர் | | |
| 2. | மைய நாள் | மே-15 ம் நாள். | | |
| 3. | ஊதிய விகிதம் | ரூ.15600-39100+6600 தர ஊதியம் (அரசாணை நிலை எண்.303, நிதித் (ஊ.கு.) துறை, நாள்.11.10.2017ன்படி, நிலை:25, ரூ.59300-187700). | | |
| | ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | **Class II Officers of the Corporation of Madras who have served as such officers for a period of not less than five years.**<br>i) B.L. Degree of any of the University in the State of Tamil Nadu or an equivalent degree of any other university in the Union of India;<br>ii) Adequate knowledge of Tamil to write notes and drafts in that language; and<br>iii) Must not have completed thirty five years of age at the time of making the application in the case of a candidate who is appointed by direct recruitment; (G.O.Ms. No.366, RD&LA, dt-19/3/86) | | |
| 4. | காலிப்பணியிட விவரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | - | 01 |
| | | மொத்தம் | - | 01 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | - | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | - | 01 |
| | | தற்போது பணியில் உள்ள வர் | - | 01 |
| | | மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 00 |
| | | 15.05.2018 முதல் 14.05.2019 வரை (ம) 15.05.2019 முதல் 14.05.2020 வரை பணியிலிருந்து ஓய்வு பெற்றதால்/பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | அரசாணை (ப) எண்.103, நாள்.09.10.2014ன்படி எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | மொத்த காலிப்பணியிடம் | - | 00 |
| 5. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | 2018 – 2019 மற்றும் 2019 - 2020 ஆம் ஆண்டிற்கு மன்றச் செயலாளர் பதவிக்கு இன்மைப் பட்டியல் பொ.து.ந.க.எண்.ஈ2/22016/2019, 25.02.2020 நாளிட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. | | |

**பொ.து.ந.க.எண்.ஈ2/27614/2020**

தற்போது திரு.பி.இராஜசேகர், மன்றச் செயலாளர், மன்றத்துறை அவர்கள் பணிபுரிந்து வருவதாலும், தனியர் கடந்த 30.06.2020ல் வயது முதிர்வில் ஓய்வில் செல்ல வேண்டிய நிலையில் அரசாணை எண். 62, பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத்(FRII) துறை, நாள். 01.06.2020ன்படி, வயது முதிர்வு காலத்தினை ஓராண்டு நீட்டித்து ஆணை வழங்கப்பட்டதால், தனியர் வரும் 30.06.2021 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். ஆகவே, மன்றச் செயலாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க இப்பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால், 2020-2021 ஆம் ஆண்டிற்கான மன்றச் செயலாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலை "இன்மை பட்டியல்" (Nil Panel) ஆக வெளியிடப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மன்றச் செயலாளர் பதவி வகுப்பு- 1 (A)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறையில், மன்றச் செயலாளர் பதவிக்கு "இன்மை பட்டியல்" (Nil Panel) வெளியிடுவதற்கு அனுமதியளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, 15.05.2020-யை மைய நாளாகக் கொண்டு 2020-2021ம் ஆண்டிற்கான மன்றச் செயலாளர் பதவிக்கான காலிப்பணியிடம் இல்லாத நிலையில் "இன்மை பட்டியல்" (Nil Panel) ஆக வெளியிட சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 20.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" 2020-2021ம் ஆண்டிற்கான மன்றச் செயலாளர் பதவிக்கு "இன்மை பட்டியல்" (Nil Panel) ஆக வெளியிட சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.ஈ2/3337/2021**

**தீர்மானஎண்.517/2021** **நாள்:22-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - டாக்டர். ஜோதிலட்சுமி வேலு, மருத்துவ அலுவலர், மருத்துவ சேவைகள் துறை அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் 21/01/2021 நாளிட்ட கடிதத்தில், மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் டாக்டர். ஜோதிலட்சுமி வேலு, மருத்துவ அலுவலர் அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் மருத்துவ அலுவலரின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள். | துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நாள். |
|---|---|---|---|
| 1. | டாக்டர். ஜோதிலட்சுமி வேலு, மருத்துவ அலுவலர் , | 29.03.2010 மு.ப | MC தேர்வு தேர்ச்சி, நாள். 07.03.2012<br>EO தேர்வு தேர்ச்சி, நாள். 07.03.2012 |

மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை / விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் 14.07.2010 முதல் 22.07.2010 வரை 9 நாட்கள் மற்றும் 11.02.2012 முதல் 15.02.2012 வரை 5 நாட்கள் மருத்துவ விடுப்பின் பேரிலான ஈட்டிய விடுப்பு துய்த்துள்ளார்.

மேலும், ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ3/49369/2012, நாள்.24.11.2012ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு.2ன் கீழ் வரும் பதவிகளுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகார பங்களிப்பு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, டாக்டர். ஜோதிலட்சுமி வேலு, மருத்துவ அலுவலர், பாரதிபுரம் நகர ஆரம்ப சுகாதார நிலையம், அண்ணாநகர் மருத்துவ மண்டலம், மருத்துவ சேவைகள் துறை அவர்களுக்கு கீழ்கண்டவாறு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 20.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள். | விடுப்பு துய்த்த விவரம் | பணிவரன் முறைப் படுத்த வேண்டிய நாள். | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள். | தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|---|---|---|
| 1. | டாக்டர். ஜோதிலட்சுமி வேலு, மருத்துவ அலுவலர். | 29.03.2010 மு.ப | UEL on MC From 14.07.2010 to 22.07.2010 - 9 Days and 11.02.2012 to 15.02.2012 - 5 Days (Total 14 days) | 29.03.2010 மு.ப | 11.04.2012 | 12.04.2012 மு.ப |

**"மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/19482/2020</u>**

**தீர்மானஎண்.518/2021** **நாள்:22-06-2021**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி.ஈ.நிர்மலா, உதவி வருவாய் அலுவலர், வடக்கு வட்டார அலுவலகம் அவர்களுக்கு உதவி வருவாய் அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க அனுமதி.</u>**

ஆணையர் அவர்களின் 26.05.2015 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திருமதி.ஈ.நிர்மலா, அவர்களுக்கு 15.05.2014-ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலின்படி உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 11.09.2020 நாளிட்ட கடிதத்தில், திருமதி.ஈ.நிர்மலா, உதவி வருவாய் அலுவலர் அவர்கள் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று 29.05.2015 அன்று பிற்பகல் முதல் பணியில் சேர்ந்தார் என்றும், தற்போது தனியர் தன் விருப்ப ஓய்வு பெறவுள்ளதாக தெரிவித்து 14.07.2020 அன்று கடிதம் அளித்துள்ளதாகவும், தனியருக்கு உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக ஆணை பெறப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது 29.05.2015 முதல் இந்நாள் வரை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்றும், தனியருக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க ஆணை அளிப்பது குறித்து ஒப்புதல் வேண்டி கோப்பு பெறப்பட்டுள்ளது.

திருமதி.ஈ.நிர்மலா, உதவி வருவாய் அலுவலர் அவர்களின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பதவி | பதவியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைப்படுத்திய நாள் | தகுதிகாண் பருவம் முடித்த நாள் | வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | பதிவுரு எழுத்தர் | 14.11.1983 | 14.11.1983 | 14.11.1985 | III |
| 2. | இளநிலை உதவியாளர் | 23.12.1994 | 23.12.1994 | - | |
| 3. | உதவியாளர் | 10.09.1998 | 10.09.1998 | - | |
| 4. | உரிமம் ஆய்வாளர் | 08.01.2008 | 08.01.2008 | - | |
| 5. | வரிமதிப்பீட்டாளர் | 04.12.2009 | 04.12.2009 | - | |
| 6. | உதவி வருவாய் அலுவலர் | 29.05.2015 பி.ப. | 29.05.2015 பி.ப. | - | II |

மேலும், தனியருக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/2311/2015, 30.08.2016 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 29.05.2015 பிற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டது.

தனியர் ஏற்கனவே வகித்த வரிமதிப்பீட்டாளர் பதவி வகுப்பு -3 ன் கீழ் வருவதாகும். தற்போதுள்ள உதவி வருவாய் அலுவலர் பதவி வகுப்பு-2ன் கீழ் வருவதால், தனியருக்கு தற்போது தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டும்.

மேலும், தனியர் 19.05.2017 முதல் 01.06.2017 வரை 14 நாட்கள் மருத்துவ விடுப்பு துய்த்துள்ளார் (UEL on MC).

**பொ.து.ந.க.எண்.ஈ2/19482/2020**

இந்நிலையில், தனியர் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களிடம், "எனது குடும்ப சூழ்நிலை மற்றும் என் இரண்டு மகள்களுக்கு திருமணம் செய்ய கடன் பெற்றேன் என்றும் அந்த கடனை திருப்பி செலுத்த வேண்டி உள்ளதாலும், எனக்கு 57 வயதாகிய நிலையில் 37 வருடம் பணி புரிந்துள்ளதால் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி அளிக்குமாறும் கோரி" 14.07.2020 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் உதவி வருவாய் அலுவலர் பதவி வகுப்பு 2-ன் கீழ் வருவதால், தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, திருமதி.ஈ.நிர்மலா, உதவி வருவாய் அலுவலர், வடக்கு வட்டார அலுவலகம் அவர்களுக்கு கீழ்கண்டவாறு உதவி வருவாய் அலுவலர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 20.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| **வ. எண்.** | **உதவி வருவாய் அலுவலர் பெயர்** | **தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள்.** | **ஊதியமில்லா மருத்துவ விடுப்பு** | **தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள்.** |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.ஈ.நிர்மலா | 29.05.2015 பி.ப. | 19.05.2017 முதல் 01.06.2017 வரை (14 நாட்கள்) | 11.06.2017 பி.ப. |

**"உதவி வருவாய் அலுவலர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ6/12896/2021**

**தீர்மானஎண்.519/2021** **நாள்:22-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.S.ராஜ்குமார், சாலைப்பணியாளர், கோட்டம்-59, பகுதி-14, மண்டலம்-5 - பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது - குடும்ப சூழ்நிலை காரணமாக பதிவுரு எழுத்தர் பதவியில் சேர முடியவில்லை - பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என அளித்த கோரிக்கையின் அடிப்படையில் சாலை பணியாளர் பதவியில் தொடர்ந்து பணிபுரிவதற்கான ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணிகளுக்கான திருத்தப்பட்ட சார்நிலைப்பணி துணை விதிகள் 2009, மன்றத்தீர்மான எண்.13/2015, நாள்.29.01.2015ன்படி பதிவுரு எழுத்தர் பதவி உயர்வுக்கு 14-நபர்களின் பெயர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் தீர்மான எண்.979/2020, நாள்.28.11.2020ன் மூலம் அங்கீகரிக்கப்பட்டதை தொடர்ந்து இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் இடம் பெற்றிருந்த திரு.S.ராஜ்குமார், சாலை பணியாளர், கோட்டம்-59, பகுதி-14 மண்டலம்-5 அவர்களுக்கு பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு அளித்து, ஆணையர் அவர்களின் 10.12.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி வருவாய் துறையில் பணியமர்த்தப்பட்டார்.

தனியர், சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளித்த 21.04.2021 நாளிட்ட கடிதத்தில், தனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு ஆணையை பெற்றுக் கொண்டு தன்னால் பதிவுரு எழுத்தர் பணியில் சேர முடியவில்லை என்றும், இந்த கால தாமதத்திற்கு தன்னை மன்னிக்குமாறும், தனக்கு பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என சுய நினைவுடன் தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, Tamil Nadu Act No.14 of 2016 விதி 57 பிரிவு 2ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years, subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of the period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted, subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained.

மேற்கண்ட தனியரின் கோரிக்கை தமிழ்நாடு மாநில சார்நிலை பணியாளர்களுக்கான பணி விதிகள் 57(2)ன்படி, தனியர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என தெரிவித்துள்ளது மூன்றாண்டுகள் நடைமுறையில் இருக்கும், இவரின் முதுநிலை சாலை பணியாளர் பதவியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.

ஆகவே, திரு.S.ராஜ்குமார், சாலை பணியாளர், கோட்டம்-59, பகுதி-14, மண்டலம்-5 அவர்கள் பதிவுரு எழுத்தர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என அளித்த கோரிக்கையின் அடிப்படையில் சாலை பணியாளர் பதவியில் தொடர்ந்து பணிபுரிவதற்கான ஆணை வழங்க சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 20.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"சாலை பணியாளர் பதவியில் தொடர்ந்து பணிபுரிய, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**பொ.து.ந.க.எண்.இ6/ 1329/2021**

**தீர்மானஎண்.520/2021** **நாள்:22-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.C.சரவணன், இளநிலை உதவியாளர், மண்டலம்-4 - பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வேலூர் மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ல் இளநிலை உதவியாளராக பணிபுரியும், திரு.C.சரவணன் அவர்கள் தனது சொந்த ஊர் வேலூர் மாவட்டம் எனவும், தன்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் பொருட்டும், வேலூர் மாவட்டத்தில் இருந்து பணி செய்யும் இடத்திற்கு சென்று வருவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வேலூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் அளிக்குமாறு ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை கோரியுள்ளார்.

வட்டார துணை ஆணையர்(வடக்கு) அவர்களின் 10/05/2021 நாளிட்ட குறிப்பில், திரு.C.சரவணன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி2/5503/2007, நாள்.31.08.2009ன்படி ஆண் இரண சிகிச்சையாளராக பணி நியமனம் செய்யப்பட்டு 07.09.2009 அன்று புதிய மண்டலம்-1ல், சுகாதாரப்பிரிவில் பணியில் சேர்ந்துள்ளார். தனியருக்கு ஆண் இரண சிகிச்சையாளர் பதவியில் 07.09.2009அன்று பணிவரன்முறை செய்யப்பட்டும், 23.09.2011 அன்றைய தேதியில் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் ஆண் இரண சிகிச்சையாளர் பதவியில் இருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று, 05.09.2018 அன்று மண்டலம்-4ல் பணியில் சேர்ந்துள்ளார். தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 05.09.2018 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டும், 24.10.2020 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் 08.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனவும், தனியர் மீது தணிக்கைத்தடை மீதான நிர்வாகப்பிரிவின் அறிக்கையில், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் 2018-2019 ஆம் ஆண்டு வரை ஏதும் நிலுவையில் இல்லை எனவும், 2019-2020 மற்றும் 2020-2021ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகள், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வழங்கப்படாத காரணத்தினால் முழுமையான தணிக்கைத் தடையில்லா சான்று வழங்க இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் இளநிலை உதவியாளர் என்பதாலும் நிதி தொடர்பான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்பாடததாலும், தனியர் மீது தணிக்கை தடைகள் ஏதுமில்லை எனவும், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நகராட்சி அல்லது மாநகராட்சி பணியின் அலுவலர் மற்றொரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாறுதல் பெற விருப்பினால் அரசு கடித எண்.27274/மா.ந.க.96-1, நாள்.08.07.1996ல் கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

1) ஒரு நகராட்சி அல்லது மாநகராட்சி பணியில் அலுவலர் மற்றொரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாறுதல் பெற விரும்பினால் அவர் பணிபுரியும் அந்த நகராட்சி/ மாநகராட்சி ஆணையருக்குத்தான் தனது மனுவினை அனுப்ப வேண்டும்.
2) சம்மந்தப்பட்ட ஆணையர் அவர்கள் இந்த மனுவினை பரிசீலித்து அன்னாரை விடுவிக்கும் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்க வேண்டும்.
3) மாறுதல் கோரப்பட்டுள்ள நகராட்சி அல்லது மாநகராட்சியின் ஆணையர் அங்கு பணியிடம் காலி இருந்து அவரை எடுத்துக் கொள்ளலாம் எனக் கருதினால் அதற்கான மன்றத்தீர்மானம் நிறைவேற்றி அந்த நகலுடன் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு எடுத்துக் கொள்ளும் நகராட்சி/மாநகராட்சி அனுப்பி வைக்க வேண்டும். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவைகளைப் பரிசீலித்து தனது குறிப்புகளுடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**பொ.து.ந.க.எண்.இ6/ 1329/2021**

4) எனினும் ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற விரும்பினால் இரண்டு மாநகராட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் எடுத்துக் கொள்ளும் மாநகராட்சி இதற்கான செயற்குறிப்புடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5) மாறுதல் வேண்டுபவர்கள் நகராட்சிக்கோ, மாநகராட்சிக்கோ மாறுதல் வேண்டி விண்ணப்பம் கொடுத்து அதன் நகலை அரசுக்கு அனுப்பக் கூடாது.
6) மாறுதல் பெற விரும்பும் நபரை ஒரு நகராட்சியோ, மாநகராட்சியோ எடுத்துக் கொள்ள விரும்பவில்லையென்றால் அல்லது பணியிடம் காலியில்லை யென்றால் அலுவலர் பணியாற்றும் ஆணையருக்குத்தான் தகவல் தெரிவிக்க வேண்டும். பணியாளருக்கு ஆணையரே தக்க பதிலை அளிக்க வேண்டும். அரசுக்கு அனுப்பத் தேவையில்லை.

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 11.01.2021 நாளிட்ட கடிதத்தில், ஒரு வழி பணியிட மாறுதல் கோரிய திரு.C. சரவணன், இளநிலை உதவியாளர், மண்டலம்-4 அவர்களை எடுத்துக் கொள்வது குறித்து வேலூர் மாநகராட்சியில் இளநிலை உதவியாளர் பதவி இருப்பின் அப்பதவியின் காலிப்பணியிட விவரம், கல்வித்தகுதி, மற்றும் ஊதிய விகிதம் ஆகிய விவரம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

ஆணையர் மற்றும் தனி அலுவலர், வேலூர் மாநகராட்சி அவர்களின் 05.02.2021 நாளிட்ட கடிதத்தில், வேலூர் மாநகராட்சியில் இளநிலை உதவியாளர் பதவியில் 17 காலிப்பணியிடங்கள் இன்றைய நாளில் உள்ளதாகவும், இப்பதவிக்கான கல்வித்தகுதி 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்று இருத்தல் வேண்டும் எனவும், இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான ஏழாவது ஊதியக்குழுவின் ஊதிய விகிதம் (Level-8) ரூ.19500 – 62000 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, திரு.C. சரவணன், இளநிலை உதவியாளர், மண்டலம்-4 அவர்கள் தனது குடும்ப சூழ்நிலையை தெரிவித்து பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வேலூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாற்றம் கோரி மனு அளித்துள்ள நிலையில், மேற்கண்ட அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில், தனியரின் மனுவினை பரிசீலனை செய்து தனியரை பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வேலூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலில் செல்வது குறித்து தீர்மானம் நிறைவேற்றிட சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 20.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வேலூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.க.கு.ந.க.எண். அ8/0588/2021**

**தீர்மானஎண்.521/2021** **நாள்:25-06-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) மற்றும் - ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் 01.04.2021 முதல் 30.06.2021 வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) அரசாணைகள் வழங்கப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை(நிலை) எண்.125,நிதி (படிகள்)த்துறை நாள்:28.04.2021 மற்றும் அரசாணை (நிலை) எண்.132 ,நிதி(PGC-I) த்துறை,நாள்:.24.05.2021 ல் தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் (2021-2022) 01.04.2021 முதல் 30.06.2021 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என நிர்ணயித்து அரசாணைகள் வெளியிடப்பட்டது.

அரசாணைகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.125, Dated 28th April, 2021.**

*(sarvari, Chittirai -15, Thiruvalluvar Aandu 2052)*

**ABSTRACT**

**Provident Fund-** General Provident Fund(Tamil Nadu) – Rate of interest for the financial year 2021- 2022 – with effect from 01.04.2021 to 30.06.2021 – Orders – Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.231,Finance(Allowances)Department,dated 23.04.2020.
2. G.O.Ms.No.306,Finance(Allowances)Department, dated 27.07.2020.
3. G.O.Ms.No.386,Finance(Allowances)Department, dated 02.11.2020.
4. G.O.Ms.No.30, Finance(Allowances)Department, dated 22.01.2021.
5. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution No.F.No.5(4)-B(PD)/2021, dated: 19.04.2021.

-oOo-

**ORDER:**

In the Government Order first to fourth read above, orders were issued regarding fixation of the rate of interest on the accumulation at the credit of the subscribers of General Provident Fund(Tamil Nadu) during the financial year 2020-2021 as detailed below:

| Sl. No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1. | I | 01-04-2020 to 30-06-2020 | 7.1% |
| 2. | II | 01-07-2020 to 30-09-2020 | 7.1% |
| 3. | III | 01-10-2020 to 31-12-2020 | 7.1% |
| 4. | IV | 01.01.2021 to 31.03.2021 | 7.1% |

2. The Government of India, in its resolution fifth read above, announced that during the year 2021-2022, accumulation at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st April 2021 to 30th June, 2021.

3. The Government now directs that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of **7.1%** (Seven point one percent) with effect from 1st April 2021 to 30th June, 2021..

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**
S. KRISHANAN
***ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT***

**(and)**

**FINANCE [PGC-I] DEPARTMENT**

**G.O.Ms.No.132, Dated 24th MAY 2021**

*(Pilava,Vaikasi -10,Thiruvalluvar Aandu 2052*

**ABSTRACT**

PENSION - Pension – Contributory Pension Scheme (TamilNadu) – Accumulations at the credit of subscribers to the Contributory Pension Scheme (both Employees and Employers Contribution) Rate of interest for the Financial Year 2021 – 2022 - With effect from 01.04.2021 to 30.06.2021 – Orders –Issued.

---

**Read the following:-**

**1.**G.O.Ms.No.51,Finance(PCG-I) Department, dated:22.02.2021.
**2.**G.O.Ms.No.125,Finance(Allowances)Department,dated:28.04.2021.

**-oOo-**

**ORDER:**

In the Government Orders first read above, orders were issued fixing the rate of interest on the accumulation at the credit of the subscribers of Contributory Pension Scheme at **7.1% (Seven point one percent)** for the period from 1st January 2021 to 31st March 2021.

**2.** In the Government Order second read above, the rate of interest for accumulation at the credit of subscribers to the General Provident Fund (Tamil Nadu) were fixed at the rate of **7.1%** (Seven point one percent) for the period from 1st April 2021 to 30th June 2021.

**3.** The Government now direct that, the rate of interest on the accumulations at the credit of the subscribers to the Contributory Pension Scheme (Tamil Nadu) shall be fixed at **7.1%** (Seven point one percent) for the period from 1st April 2021 to 30th June 2021.

**(BY ORDER OF THE GOVERNOR)**
**S. KRISHNAN**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**ம.க.கு.ந.க.எண். அ8/0588/2021**

எனவே, பொது வருங்கால வைப்பு நிதி *01.04.2021* முதல் *30.06.2021* வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் *7.1%* (ஏழு புள்ளி ஒன்று சதவிகிதம்) என நிர்ணயித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.*125*, நிதி(படிகள்)த்துறை, நாள். *28.04.2021* மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் *01.04.2021* முதல் *30.06.2021* வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் *7.1%* (ஏழு புள்ளி ஒன்று சதவீதம்) என நிர்ணயித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.*132* நிதி(*PCG-I*)த்துறை, நாள். *24.05.2021*யை, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 20.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

**********

**Br.D.C.No.B3/385-1/2018**

**Resolution No.522 /2021** **Date:25-06-2021**

**Greater Chennai Corporation - Bridges Department - Construction of Bridge across Puzhal Surplus Water Canal at Vadaperumbakkam in Dn – 17, Zone-II by Design, Engineering, Procurement and Construction (DEPC) method – Work is in progress – Work delayed due to Covid-19 pandemic situation – Extension of time requested – For approval.**

The work of construction of Bridge across the Puzhal surplus Water Canal at Vadaperumbakkam in Division – 17, Zone – II has been entrusted to the Contractor Mr.M.Rajkumar. Letter of Acceptance was issued to the contractor on 12.07.2019 and work is in progress.

The design and drawings prepared by the contractor has been proof checked by IIT Madras and the work was commenced by the contractor on 30.01.2020.

Due to Covid-19 pandemic situation work could not be continued from 23.03.2020, as Government of Tamil Nadu vide G.O.(Ms).No.152 dated 23.03.2020 instructed to close the industries to contain the spread of Corona Virus.

Government vide G.O.(Ms).No.262 dated 31.05.2020 stated that industries can operate with 100% of employees. Hence the work was stalled for the period of 2 months, from 23.03.2020 to 31.05.2020.

At present, about 80% of works on bridge portion have been completed and the ramp works on both sides are to be taken up. About 4735 sqm of land is required to accommodate ramps for which land acquisition proposal has been sent to the Government through Collectorate vide letter dated.09.11.2020. Due to Tamil Nadu Assembly elections, the land acquisition process is getting delayed.

After the land acquisition, 900 mm dia D.I. Desalination water line has to be rerouted through the proposed acquired land. About 2 months will be required for rerouting work. Only after completion of re-routing of 900mm dia D.I. Desalination water line, ramp work on southern side of the bridge could be taken up.

The contractor vide his letter dated 21.04.2021, has requested to extend the contract period for 6 months due to Covid-19 pandemic situation and Land has been not acquired till this date to take up the ramp work.

It is submitted that, as per the contract the date of completion of this project is 30.04.2021. The lock down period from 23.03.2020 to 31.05.2020 may be considered as break period (2 months) and this 2 months period may be compensated by extending the contract period from 30.04.2021 to 30.06.2021. The contract period may be extended further for 4 months from 01.07.2021 to 31.10.2021, due to delay in land acquisition and Shifting of 900mm dia D.I desalination water line and due to heavy rains, PWD has released the surplus water in two occasions (04.12.2020 & 05.01.2021), the work site was inundated with flood water thereby work could not be carried out. The approximate time period required for completion of this project is 6 months from 30.04.2021.

| | | |
|---|---|---|
| Break period due to Covid-19 (from 23.03.2020 to 31.05.2020 and compensation for this 2 months period by extending the contract period from 30.04.2021 to 30.06.2021) | - | 2 months<br>Upto 30.06.2021 |
| Extension of Time required to complete the project in all respects from 01.07.2021 to 31.10.2021 | - | 4 months<br>Upto 31.10.2021 |

**Br.D.C.No.B3/385-1/2018**

Hence,

1) To consider the lock down period from 23.03.2020 to 31.05.2020 as break period and to compensate this 2 months period from 30.04.2021 to 30.06.2021.
2) To extend the contract period up to 31.10.2021 to complete the project in all respects.

Sl.No. 1 and 2 above, Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested.

**Principal Secreatary/ Commissioner's endorsement dated.22.06.2021 is as follows:**

**"Land acquisition for the approach is pending.**

**Put my D.O letter to CLA.**

**S.E/E.E to personally meet CLA & get approvals."**

Principal Secretary/Commissioner's Note dated.22.06.2021 is read.

**"As per Principal Secreatary/ Commissioner's endorsement, Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

********

**Br.D.C.No.B3/385-2/2018**

**Resolution No.523 /2021** **Date: 25-06-2021**

**Greater Chennai Corporation - Bridges Department - Construction of bridge across Puzhal Surplus Canal at Amullavoyal, Manali in Dn-18, Zone -II by Design, Engineering, Procurement and Construction (DEPC) method – Work is in progress – Work delayed due to Covid-19 pandemic situation – Extension of time requested – For approval.**

The work of construction of Bridge across the Puzhal surplus Water Canal at Amullavoyal, Manali in Dn-18, Zone -II has been entrusted to the Contractor Mr.M.Rajkumar. Letter of Acceptance was issued to the contractor on 12.07.2019 and work is in progress.

The design and drawings prepared by the contractor has been proof checked by IIT Madras and the work was commenced by the contractor on 30.01.2020.

Due to Covid-19 pandemic situation work could not be continued from 23.03.2020, as Government of Tamil Nadu vide G.O.(Ms).No.152 dated 23.03.2020 instructed to close the industries to contain the spread of Corona Virus.

Government vide G.O.(Ms).No.262 dated 31.05.2020, stated that industries can operate with 100% of employees. Hence the work was stalled for the period of 2 months, from 23.03.2020 to 31.05.2020.

At present, about 60% of works on bridge portion have been completed and southern side abutment span Girder & Deck slab and ramp works could not be taken up due to existence of High Tension electrical lines running above the existing bridge.

In this connection, requested the TANTRANSO to heightening the 230 KV High Tension Electric Transmission lines and to furnish the cost estimate for heightening the Transmission lines which is passing over the alignment of the proposed bridge, vide this office letter dated 28.05.2020.

The TANTRANSCO vide letter dated.27.08.2020, has furnished the cost estimate of Rs.1,82,35,221/- towards heightening the 230 KV High Tension Electric Transmission lines.

Greater Chennai Corporation vide this office letter dated.16.10.2020, has remitted the amount of Rs.1,82,35,221/- towards heightening the 230 KV High Tension Electric Transmission lines.

TANTRANSCO has commenced the erection of Tower work in the month of March 2021 and yet to commence the work for erecting the second Tower. Only after completion of Tower work and heightening the 230 KV High Tension Electric Transmission lines, the Abutment span Girder & Deck slab and ramp works on southern side could be commenced.

The contractor vide his letter dated.21.04.2021, has requested to extend the contract period for 6 months due to Covid-19 pandemic situation and delay in shifting of HT line, Deck slab and approach road work could not be taken up.

It is submitted that, as per the contract the date of completion of this project is 30.04.2021. The lock down period from 23.03.2020 to 31.05.2020 may be considered as break period (2 months) and this 2 months period may be compensated by extending the contract period from 30.04.2021 to 30.06.2021. The contract period may be extended further for 4 months from 01.07.2021 to 31.10.2021, due to delay in completing the erection of two towers and heightening of HT line by TANTRANSCO and due to heavy rains, PWD has released the surplus water in two occasions (04.12.2020 & 05.01.2021), the work site was inundated with flood water thereby work could not be carried out. The approximate time period required for completion of this project is 6 months from 30.04.2021.

**Br.D.C.No.B3/385-2/2018**

| | | |
|---|---|---|
| Break period due to Covid-19 (from 23.03.2020 to 31.05.2020 and compensation for this 2 months period by extending the contract period from 30.04.2021 to 30.06.2021) | - | 2 months<br>Upto 30.06.2021 |
| Extension of Time required to complete the project in all respects from 01.07.2021 to 31.10.2021 | - | 4 months<br>Upto 31.10.2021 |

Hence,

1) To consider the lock down period from 23.03.2020 to 31.05.2020 as break period and to compensate this 2 months period from 30.04.2021 to 30.06.2021.

2) To extend the contract period up to 31.10.2021 to complete the project in all respects.

Sl.No. 1 and 2 above, Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.22.06.2021 is read.

**"Sl.No. 1 and 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

**********

**Br.D.C.No.B3/385-3/2018**

**Resolution No.524 /2021** **Date:26-06-2021**

**Greater Chennai Corporation - Bridges Department - Construction of Bridge across the Puzhal surplus Water Canal at Burma Nagar Main Road in Division – 16, Zone – II by Design, Engineering, Procurement and Construction (DEPC) method – Work is in progress – Work delayed due to Covid-19 pandemic situation – Extension of time requested – For approval.**

The work of construction of Bridge across the Puzhal surplus Water Canal at Burma Nagar Main Road in Division – 16, Zone – II has been entrusted to the Contractor M/s.Thomas Iyyadurai Infrastructure Private Limited JV with M/s. Arul Jothi infrastructure Pvt. Ltd. Letter of Acceptance was issued to the contractor on 12.07.2019 and work is in progress.

The design and drawings prepared by the contractor has been proof checked by IIT Madras and the work was commenced by the contractor on 30.01.2020.

Due to Covid-19 pandemic situation work could not be continued from 23.03.2020, as Government of Tamil Nadu vide G.O.(Ms).No.152 dated 23.03.2020 instructed to close the industries to contain the spread of Corona Virus.

Government vide G.O.(Ms).No.262 dated 31.05.2020 stated that industries can operate with 100% of employees. Hence the work was stalled for the period of 2 months, from 23.03.2020 to 31.05.2020.

The existing steel bridge across the Puzhal surplus Water Canal erected and maintained by Tamil Nadu Petroproducts Limited (TPL) is falls on the alignment of the proposed high level bridge and hence the existing steel bridge has to be removed. It was requested the TPL to remove the existing steel bridge vide this office letter dated.20.04.2021. The TPL is yet to remove the steel bridge.

Only after removal of the existing steel bridge by the TPL, the Abutment span Girder & Deck slab and ramp works on southern side could be taken up.

The contractor vide his letter dated.23.04.2021, has requested to extend the contract period up to September 2021 due to following reasons:-

i) Redesign was carried out, due to IOCL Petroleum pipe lines falls in the alignment of proposed bridge.
ii) Delay in shifting of HT lines by TANGEDCO.
iii) Covid-19 pandemic situation work was not carried out for more than 2 months
iv) PWD released excess water two times makes the site inaccessible for one month.
v) Delay in removing of existing steel bridge belongs to TPL which falls in the alignment of proposed bridge.

It is submitted that, as per the contract the date of completion of this project is 30.04.2021. The lock down period from 23.03.2020 to 31.05.2020 may be considered as break period (2 months) and this 2 months period may be compensated by extending the contract period from 30.04.2021 to 30.06.2021. The contract period may be extended further for 3 months from 01.07.2021 to 30.09.2021, due to IOCL Petroleum pipeline redesign was carried out, delay in shifting of HT lines by TANGEDCO, delay in removing the existing steel bridge by the TPL and due to heavy rains, PWD has released the surplus water in two occasions (04.12.2020 & 05.01.2021), the work site was inundated with flood water thereby work could not be carried out. The approximate time period required for completion of this project is 5 months from 30.04.2021.

**Br.D.C.No.B3/385-3/2018**

| | | |
|---|---|---|
| Break period due to Covid-19 (from 23.03.2020 to 31.05.2020 and compensation for this 2 months period by extending the contract period from 30.04.2021 to 30.06.2021) | - | 2 months<br>Upto 30.06.2021 |
| Extension of Time required to complete the project in all respects from 01.07.2021 to 30.09.2021 | - | 3 months<br>Upto 30.09.2021 |

Hence,

1) To consider the lock down period from 23.03.2020 to 31.05.2020 as break period and to compensate this 2 months period from 30.04.2021 to 30.06.2021.
2) To extend the contract period up to 30.09.2021 to complete the project in all respects.

Sl.No. 1 and 2 above, Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.22.06.2021 is read.

**"Sl.No. 1 and 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

********

**Br.D.C.No.B3/1005/2018**

**Resolution No.525 /2021** **Date:26-06-2021**

**Greater Chennai Corporation - Bridges Department - Construction of skywalk with Escalators from Mambalam Railway station to T.Nagar Bus Terminus in Div – 136, Zone – X – Work is in progress – Work delayed due to Covid-19 pandemic situation – Extension of time requested – For approval.**

The work of construction of Skywalk with Escalators from Mambalam Railway station to T.Nagar Bus Terminus in Div – 136, Zone – X under the smart city scheme was entrusted to the contractor M/s.Chendur Infrastructures Pvt. Limited JV with M/s. P & C Projects Pvt. Ltd. Letter of Acceptance was issued to the contractor on 27.01.2020 and work is in progress.

The design and drawings were proof checked by IIT Madras and the work was commenced by the contractor on 05.03.2020.

Due to Covid-19 pandemic situation work could not be continued from 23.03.2020, as Government of Tamil Nadu vide G.O.(Ms).No.152 dated 23.03.2020 instructed to close the industries to contain the spread of Corona Virus.

Government vide G.O.(Ms).No.262 dated 31.05.2020 stated that industries can operate with 100% of employees. Hence the work was stalled for the period of 2 months, from 23.03.2020 to 31.05.2020.

The contractor vide his letter dated.29.04.2021, has requested to extend the contract period up to 31.12.2021 due to following reasons:-

i) Covid-19 pandemic situation work was not carried out for more than 2 months.
ii) The Traffic police has given permission to work only night time, leads to delay in achieving the target.
iii) Delay in shifting of TANGEDCO Cables, BSNL Cables and CMWSSB water lines.

It is submitted that as per the contract, the date of completion of this project is 04.06.2021. The lock down period from 23.03.2020 to 31.05.2020 may be considered as break period (2 months) and this 2 months period may be compensated by extending the contract period from 04.06.2021 to 04.08.2021. The contract period may be extended further for 4 months from 05.08.2021 to 04.12.2021, due to delay in shifting of TANGEDCO Cables, BSNL Cables and CMWSSB water lines and also work could be carried out only during night time. The approximate time period required for completion of this project is 6 months from 04.06.2021.

| | | |
|---|---|---|
| Break period due to Covid-19 (from 23.03.2020 to 31.05.2020 and compensation for this 2 months period by extending the contract period from 04.06.2021 to 04.08.2021) | - | 2 months<br>Upto 04.08.2021 |

**Br.D.C.No.B3/1005/2018**

| | | |
|---|---|---|
| Extension of Time required to complete the project in all respects from 05.08.2021 to 04.12.2021 | - | 4 months<br>Upto 04.12.2021 |

Hence,

1) To consider the lock down period from 23.03.2020 to 31.05.2020 as break period and to compensate this 2 months period from 04.06.2021 to 04.08.2021.

2) To extend the contract period up to 04.12.2021 to complete the project in all respects.

Sl.No. 1 and 2 above, Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.22.06.2021 is read.

**"Sl.No. 1 and 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

************

**Br.D.C.No.B3/0463/2015**

**Resolution No.526 /2021** **Date:26-06-2021**

**Greater Chennai Corporation - Bridges Department - Construction of integrated ROB in lieu of existing LC No. 2A at Ennore High Road and LC No. 2B at Manali Road in Dn. 38 & 41, Zone – IV – Contract to be closed – For orders.**

The work of construction of an integrated ROB at the existing level crossing LC 2A at Ennore High Road and LC 2B at Manali Road in Dn.38 & 41, Zone-IV was taken up by Greater Chennai Corporation, as per the announcement made by the Hon'ble Chief Minister on the floor of the Assembly, under Rule 110 in the year 2015-16.

Administrative Sanction for the estimated cost of Rs. 117.47 crores was obtained vide G.O.Ms.No.189 MA&WS dated 31.12.2015 with 50:50 cost sharing between Government and Grater Chennai Corporation.

The work was awarded to M/s.R.Krishnamurthy & Co JV with M/s P & C Projects (P) Ltd for the tender value of Rs.106.20 Crores and **Letter of Acceptance was issued to the contractor on 12.09.2016.** The contractor had commenced the work and completed the initial pile test in two locations and subsequent work could not be continued, as the NOC from Traffic Police has been awaited for taking up the bridge work.

Since lot of public representations were received to extend the ROB on Manali Road side towards Tondiarpet High Road to cover the link canal also, it has been decided to extend the ROB for another 175m length. Hence the total project cost has been increased from Rs.117.47 crores to Rs.137.53 crores, for which revised administrative sanction was obtained **vide G.O. (2D) No. 3, Dated 08.01.2019.**

It has been requested to the Traffic Police to accord permission for diversion of traffic for taking up the ROB work at LC 2A & 2B vide letter dated.24.07.2017, 18.08.2017 & 18.09.2017.

The following works were taken up and completed by Greater Chennai Corporation as requested by the Traffic Police:-

1. An alternate road has been formed at the cost of Rs.2 crore along the banks of the Buckingam Canal called as PWD Inspection Road.
2. Kodungaiyur Canal retaining wall at the junction of Ezhil Nagar and Thoppai Vinayagar Koil Street has been raised.
3. The existing compound wall to a length of 5.5 mts. was demolished and a road has been laid between IOC road and PWD Inspection Road.
4. Storm Water Drain at Nedunchezhian Nagar has been completed.
5. Provided Street Lightings along the PWD Inspection Road.

The Additional Commissioner of Police (Traffic) vide letter dated.20.03.2020, has recommended the NOC from traffic point of view to close the Railway Level Crossings 2A & 2B and construction of ROB over these Level Crossings.

Based on the above letter, it was planned to conduct the trial run on 23.03.2020 with the assistance of the Assistant Commissioner of Police (Traffic), MTC and Railways. But the trial run was stalled since prolonged lockdowns due to Covid-19 pandemic situation.

Now, the Additional Commissioner of Police, Traffic Zone vide letter dated.10.08.2020, has requested to obtain No Objection Certificate from Indian Oil Corporation Limited (IOCL), since the alternate route fall on the enroute of pipes carrying crudes.

**Br.D.C.No.B3/0463/2015**

Since work could not be taken up for the last 4 years, Railways have foreclosed their contract for railway portion of the ROB. Railways informed that they are planning to take up the work of Road Under Bridge (RUB) at Korukkupet Railway Level Crossing No.2 (LC2) which is also long pending work to be completed.

It has been proposed to construct a subway in lieu of existing level crossing at LC2 near Korukkupet Railway Station jointly with Railways and Greater Chennai Corporation on 50:50 cost sharing basis.

Tenders were called for this subway work and tenders received on the due date 27.06.2008. While planning to commence the subway work, the Traffic Police had not given permission to construct the RUB citing reasons that since an ROB at Kathivakkam High road (LC 1A) was being constructed nearer to this level crossing, all vehicle users and public may suffer if the level crossing was closed and also informed that the permission would be granted only after the completion of the ROB at Kathivakkam High road – Cochrane Basin road (LC 1A). Subsequently the tender was cancelled.

As the Railways have foreclosed their tender for Railway portion of 2A & 2B ROB,GCC portion tender may also be cancelled and take up the subway work at LC2 near Korukkupet Railway Station in line with Railways.

As per the clause 59 of tender document, the contract of M/s. R.Krishnamurthy & Co., JV with M/s P & C Projects (P) Ltd with Greater Chennai Corporation may be terminated due to the following reasons:-

- The work could be commenced only after obtaining NOC from IOCL and clearance from Traffic Police.
- Railways already foreclosed the contract on railway portion of the ROB.
- The contract has been awarded 4 years back and estimate was prepared based on 2014-15 Schedule of Rates (SOR). Now SOR has been revised 5 times and hence it is very difficult to carryout the work with the rates.

So far, an expenditure of Rs.10,29,500/- has been made for obtaining CRZ Clearance for this project (Rs.1,15,000/- for Anna University towards cost for HTL/LDL Map and Rs. 9,14,500/- for Consultancy charges). The CRZ clearance was obtained for this project.

Though the contract has been expired, the expenditure of about Rs. 6,80,37,344/- has to be made for the following:-

1. Payment for the work done by the contractor - Rs. 1,59,30,000/-
2. Payment for the Project Management Consultants - Rs. 3,15,000/-
3. Payment for TANTRANSCO towards heightening of 230 KV and 110 KV HT lines by erecting new Towers - Rs. 5,17,92,344/-

Hence,

1) To close the existing contract of M/s. R.Krishnamurthy & Co.,JV with M/s P & C Projects (P) Ltd for the work of construction of an integrated ROB at the existing level crossing LC 2A at Ennore High Road and LC 2B at Manali Road in Dn.38 & 41, Zone-IV.
2) To call for retender after obtaining necessary clearance from Traffic Police and IOCL
3) To pay Rs. 1,59,30,000/- to the contractor M/s. R.Krishnamurthy & Co.,JV with M/s P & C Projects (P) Ltd.

**Br.D.C.No.B3/0463/2015**

4) To pay Rs.3,15,000/- to the Project Management Consultant M/s.Vax Consultant Pvt. Ltd.
5) To pay Rs.5,17,92,344/- to the TANTRANSCO towards heightening of 230 KV and 110 KV HT lines by erecting new Towers
6) To intimate the Government regarding closure of the contract.

Sl.No. 1 to 6 above, Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.22.06.2021 is read.

**"Sl.No. 1 to 6 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

********

**பொ.து.ந.க.எண். இ5/28248/2020**

**தீர்மானஎண்.527/2021** **நாள்:26-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 01.07.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ஆம் ஆண்டிற்கான உதவியாளர் பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2020-2021ஆம் ஆண்டிற்கான உதவியாளர் காலிப்பணியிடங்களை ஏழாவது ஊதியக்குழு அட்டவணைப்படி நிலை 10 ரூ.20600-65500/- என்ற ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.07.2020 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும். உதவியாளர் பதவி உயர்வுக்கான நியமனமுறை மற்றும் தகுதிகள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது..

| | | | |
|---|---|---|---|
| 1. | *Total cadre strength* | | *628 Nos* |
| | *(i) Temporary* | | *Nil* |
| | *(ii) Permanent* | | *628 Nos* |
| 2. | *Number of vacancies on retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules)* | | *Nil* |
| 3. | *5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment)* | | - |
| 4. | *Number of likely promotion (From Assistant to Superintendent, License Inspector and Statistical Assistant (8+8+1)* | | *17 Nos* |
| 5. | *Number of new posts likely to be sanctioned during the period and the Number of posts sanctioned earlier but not included in the previous year estimate* | | - |
| | *Vacancies not filled by promotion due to non availability of eligible hands* | | *36 Nos* |
| | ***Add*** | | |
| 6. | *Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O. Ms. No.103 Personnel and Administrative Reforms (S) Department, dated 09/10/2014 (with reference to the actual estimate computing the items from 2 to 5 above) 53x15% = 7.95 rounded off to 8* | | *08 Nos* |
| | ***Deduct*** | | |
| 7. | *Number of posts disbanded during the recruitment year* | | - |
| 8. | *Number of vacancies apportioned for direct Recruitment* | *100 Nos* | |
| | ***Total*** | | *61 Nos* |
| 9. | *Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up* | | - |
| 10. | *Number of persons who have been deputed to other posts for a specific period and subsequently reverted to the lower cadre for want of vacancy.* | | - |

**பொ.து.ந.க.எண். இ5/28248/2020**

உதவியாளர் பதவிக்குரிய நியமனமுறை மற்றும் கல்வித் தகுதிகள்

| நியமன முறை | நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் | ஊதிய விகிதம் மற்றும் நிர்ணய நாள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் ஆகிய பதவிகளில் 3 : 1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு<br><br>(3 இளநிலை உதவியாளர்கள் 1 தட்டச்சர்)<br><br>2.இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவியில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.<br><br>3. நேரடி நியமனம். | 1) குறைந்தபட்ச பொதுக்கல்வி தகுதி<br><br>2) சார்நிலை பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி<br><br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு பட்டம் கணினிப்பயிற்சியில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து PGDCA / Office Automation சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட துறைத் தேர்வுகளில் இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும். | ரூ. 20600 - 65500/ -<br><br>நிர்ணய நாள்<br>ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 1ஆம் நாள் | 1) உதவியாளர், உதவி பண்டக காப்பாளர், உதவி பணப்பொறுப்பாளர், தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் ஆகியோர் பொதுவான பணிவகையினை சேர்ந்தவராக கருதப்பட வேண்டும்.<br><br>2. பதவி உயர்வுக்கு ஊட்டப்பதவியில் முதுநிலையின் அடிப்படையில் பணிமூப்பு அறுதியிடப்படும்.<br><br>3) ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஊட்டப்பதவியில் இருந்து தகுதியான பணியாளர்கள் அனைவரையும் பதவி உயர்வு செய்த பின்னர் அதே ஆண்டில் எஞ்சிய காலிப்பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும். |

2019-2020 ஆம் ஆண்டிற்கான உதவியாளர் பதவிக்கான தேர்ந்தோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு 20 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இப்பட்டியலாண்டில் உதவியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களைக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்க இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளில் மேற்கண்ட தகுதிகளுடன் உள்ள நபர்களின் பணி விவரங்கள் கோரப்பட்டதில் 29 நபர்களின் பணிவிவரங்கள் மற்றும் பணிப்பதிவேடுகள் பெறப்பட்டு ஆய்வு செய்து தற்போது கணக்கிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் அடிப்படையில் விகிதாச்சார அடிப்படையில் பணிவிவர பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பணிவிவர பட்டியலில் கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்கள் பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படவில்லை

| வ. எண். | பெயர் / பதவி / பணிபுரியும் துறை / மண்டலம் / வட்டார அலுவலகம் | குறிப்பு |
|---|---|---|
| 01 | வி.கிரிஜா தேவி<br>இளநிலை உதவியாளர்,<br>மண்டலம் 9 | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 02 | ஈ.சுரேஷ்<br>இளநிலை உதவியாளர்,<br>வருவாய் துறை | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |

| | | |
|---|---|---|
| 03 | டி.சேகர்<br>இளநிலை உதவியாளர்<br>பொது சுகாதாரத்துறை | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 04 | கே.சீனிவாசுலு,<br>இளநிலை உதவியாளர்<br>மத்திய கணக்கு குழுமம் | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 05 | ஈ.சங்கர்,<br>இளநிலை உதவியாளர்<br>மத்திய கணக்கு குழுமம் | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 06 | ட்டி.ஆனந்தன்,<br>இளநிலை உதவியாளர்<br>மத்திய கணக்கு குழுமம் | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 07 | எம்.முரளிகிருஷ்ணா<br>இளநிலை உதவியாளர்<br>மண்டலம் 11 | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 08 | ஜே.குப்புசாமி,<br>இளநிலை உதவியாளர்<br>மண்டலம் 15 | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 09 | கே.ராமானுஜம்,<br>இளநிலை உதவியாளர்<br>தலைமைப் பொறியாளர் (பொது) | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 10 | என்.ரங்கராஜன்,<br>இளநிலை உதவியாளர்<br>மண்டலம் 4 | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |
| 11 | சி.சரவணன்,<br>இளநிலை உதவியாளர்<br>மண்டலம் 4 | மைய நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் பூர்த்தி செய்யவில்லை. |

தட்டச்சர் முதுநிலைப் பட்டியலில் உள்ள பின்வரும் நபர்கள் உதவியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படவில்லை.

| முதுநிலை வ.எண். | பெயர் / பதவி / பணிபுரியும் துறை / வட்டார அலுவலகம் / மண்டலம் | குறிப்பு |
|---|---|---|
| 01 | கே.அஞ்சலி தேவி, தட்டச்சர்,<br>மண்டலம் 12 | துறைத் தேர்வுகளில் தேர்ச்சியில்லை |
| 02 | கே.கல்யாண சுகுமார், தட்டச்சர்<br>வடக்கு வட்டார அலுவலகம் | கணக்கு தேர்வு பாகம் 1 தேர்ச்சியில்லை |
| 03 | எஸ்.பிருந்தாவனம், தட்டச்சர்<br>மண்டலம் 9 | துறைத் தேர்வுகளில் தேர்ச்சியில்லை |
| 04 | ப்பி. ஆனந்தராஜ், தட்டச்சர்,<br>மண்டலம் 5 | துறைத் தேர்வுகளில் தேர்ச்சியில்லை<br>மண்டல அலுவலர் கடித எண்.<br>ம.அ.4ந.க.எண். அ1/10125/2020, நாள்<br>30.1202020 |
| 05 | ஆர்.ராமலிங்கம், தட்டச்சர்<br>தெற்கு வட்டார அலுவலகம் | துறைத் தேர்வுகளில் தேர்ச்சியில்லை |
| 06 | எம்.செல்வராஜ், தட்டச்சர்<br>விழிப்பு குழுமம் | துறைத் தேர்வுகளில் தேர்ச்சியில்லை |
| 07 | கே.சுரேஷ்குமார், தட்டச்சர்<br>பொதுத்துறை | ஒழுங்கு நடவடிக்கை நிலுவை |
| 08 | டி.அலமேலு, தட்டச்சர், மண்டலம் 11 | தற்காலிக விருப்பமின்மை கடிதம், நாள்<br>24.12.2020 |
| 09 | எஸ்.சந்திரசேகரன், தட்டச்சர்<br>மண்டலம் 9 | தற்காலிக விருப்பமின்மை கடிதம், நாள்<br>10.02.2021 |

**பொ.து.ந.க.எண். இ5/28248/2020**

| | | |
|---|---|---|
| 10 | கே.பானுமதி, தட்டச்சர், மண்டலம் 10 | தற்காலிக விருப்பமின்மை கடிதம், நாள் 27.01.2021 |
| 11 | எ.ஜஸ்டின் பிரபாகர், தட்டச்சர் மத்திய வட்டார அலுவலகம் | துறைத் தேர்வுகளில் தேர்ச்சியில்லை, |
| 12 | வி.நடராஜன், தட்டச்சர், தொற்றுநோய் மருத்துவமனை | துறைத்தேர்வுகளில் தேர்ச்சி இல்லை |
| 13 | ஜி.குமரன், தட்டச்சர் தலைமைப் பொறியாளர் (சிறப்பு திட்டம்) | கணக்கு தேர்வு பாகம் 1ல் தேர்ச்சியில்லை |
| 14 | டி.கிரிராஜ், தட்டச்சர், மண்டலம் 6 | தற்காலிக விருப்பமின்மை கடிதம், நாள் 23.12.2019 (பொ.து.ந.க.எண். இ5/28200/2019. நாள் 28.07.2020) |
| 17 | எஸ்.கவிதா, தட்டச்சர், மண்டலம்13 | கணக்கு தேர்வு பாகம் 1ல் தேர்ச்சியில்லை |
| 20 | எஸ்.ஹேமசந்திரன்,தட்டச்சர் மண்டலம் 5 | தற்காலிக விருப்பமின்மை கடிதம் நாள்:26.12.2019 (பொ.து.ந.க.எண். இ5/28200/2019. நாள் 28.07.2020) |
| 21 | ப்பி.ஜோஸ்வா ராஜ்குமார், தட்டச்சர் மழைநீர் வடிகால் துறை | தற்காலிக விருப்பமின்மை கடிதம், நாள்31.10.2019 (பொ.து.ந.க.எண். இ5/28200/2019. நாள் 28.07.2020) |
| 22 | எஸ்.முனிரேகா, தட்டச்சர், மண்டலம் 1 | துறைத் தேர்வுகளில் தேர்ச்சியில்லை |
| 24 | பி.வனிதா, தட்டச்சர் கால்நடைப்பிரிவு | கணக்கு தேர்வு பாகம் 1ல் தேர்ச்சியில்லை |
| 28 | வி.சரஸ்வதி, தட்டச்சர், தரக்கட்டுப்பாடு துறை | ஆபீஸ் ஆட்டோமேஷன் கல்வியில் தேர்ச்சி பெறவில்லை |
| 30 | எஸ்.மஞ்சுளா, தட்டச்சர், மண்டலம் 2 | தற்காலிக விருப்பமின்மை கடிதம், நாள் 02.02.2021 |
| 39 | எம்.சுலோச்சனா, தட்டச்சர் தலைமைப் பொறியாளர் (பொது) | தற்காலிக விருப்பமின்மை கடிதம், நாள் 24.12.2020 |
| 40 | எஸ்.திருச்செல்வி, தட்டச்சர் மண்டலம் 1 | DOM தேர்ச்சியில்லை |
| 41 | எம்.சுமதி, தட்டச்சர், பேருந்து சாலைகள் துறை | கணக்கு தேர்வு பாகம் 1ல் தேர்ச்சியில்லை |

2020-2021 ஆம் ஆண்டு உதவியாளர் பதவி உயர்வுக்கு முதுநிலையில் உள்ள கீழ்க்கண்ட தட்டச்சர்கள் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்கள். அதன் விவரம் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் / பதவி / பணிபுரியும் துறை மண்டலம் | தனியரின் கடித நாள் |
|---|---|---|
| 01 | திருமதி.எம்.சுலோச்சனா, தட்டச்சர் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம் | 24.12.2020 நாளிட்ட கடிதம் |
| 02 | திருமதி.எஸ்.மஞ்சுளா, தட்டச்சர் மண்டலம் -2 | 02.02.2021 நாளிட்ட கடிதம் |
| 03 | திரு.எஸ்.சந்திரசேகரன், தட்டச்சர் மண்டலம் -9 | 10.02.2021 நாளிட்ட கடிதம் |
| 04 | திருமதி.கே.பானுமதி, தட்டச்சர் மண்டலம் -10 | 27.01.2021 நாளிட்ட கடிதம் |
| 05 | திருமதி.டி.அலமேலு, தட்டச்சர் மண்டலம் -11 | 24.12.2020 நாளிட்ட கடிதம் |

**பொ.து.ந.க.எண். இ5/28248/2020**

மேற்படி தனியர்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு *Tamilnadu Government Servants (Conditions of Service) Act 2016. Tamilnadu Act No.14 of 2016* விதி 57(2)ன்படி மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என தெரிவித்து தனியர்களுக்கு ஆணை வழங்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு (2019-2020) உதவியாளர் பதவிக்கு இறுதியாக தட்டச்சர் பதவி உயர்வு பெற்றதால், இப்பட்டியலாண்டில் (2020-2021) இளநிலை உதவியாளர் பதவியில் உள்ள நபரைக்கொண்டு 3 : 1 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், பணிவிதிகளின்படி விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிமுடித்த தகுதியான நபர் ஒருவரே உள்ள நிலையில், உதவியாளர் பதவியில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளதால் அக்காலிப்பணியிடங்களை தட்டச்சர் பதவியில் இரண்டு ஆண்டுகள் பணிமுடித்த நபர்களைக் கொண்டு நிரப்பலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்கண்ட பட்டியலில் உள்ள நபர்கள் மீது கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தண்டனைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சம்பந்தப்பட்ட துறை / வட்டார அலுவலகம் / மண்டலங்களில் இருந்து பெறப்பட்டுள்ள பணியாளர்களின் பணிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 01.07.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ஆம் ஆண்டிற்கான உதவியாளர் காலிப்பணியிடங்களை ஏழாவது ஊதியக்குழு அட்டவணையின்படி - ரூ.20600-65500/- என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் தகுதியுள்ள 18 நபர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உதவியாளர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்க்கண்டவாறு வெளியிடப்பட்டது.

2020-2021ஆம் ஆண்டு உதவியாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்

| வ.எண். | பெயர் திருவாளர் | தற்போது வகிக்கும் பதவி | பணிபுரியும் துறை/ மண்டலம் | தற்போதுவகித்து வ பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 01 | S.பிரேம்குமார் | இளநிலை உதவியாளர் | மண்டலம் 1 | 22.05.2006 |
| 02 | G.சிவநேசன் | தட்டச்சர் | வருவாய் துறை | 01.12.2017 |
| 03 | U.G.கோமளா | தட்டச்சர் | கல்வித்துறை | 20.01.2017 |
| 04 | S.நதியா | தட்டச்சர் | மண்டலம் 8 | 20.01.2017 |
| 05 | P.கோவிந்தம்மா | தட்டச்சர் | மருத்துவ சேவைகள் துறை | 19.01.2017 |
| 06 | K.P.சுகன்யா | தட்டச்சர் | அரங்கத்துறை | 23.02.2017 |
| 07 | C.பாண்டுரங்கன் | தட்டச்சர் | பொதுத்துறை | 12.07.2017 |
| 08 | B.உமா மகேஸ்வரி | தட்டச்சர் | பணித்துறை | 12.07.2017 |
| 09 | P. ராமலிங்கம் | தட்டச்சர் | மத்திய கணக்கு குழுமம் | 28.03.2018 |
| 10 | G.அனுராதா | தட்டச்சர் | மண்டலம் 10 | 28.03.2018 |
| 11 | M.பாஸ்கரன் | தட்டச்சர் | மண்டலம் 13 | 28.03.2018 |
| 12 | R.ராஜலட்சுமி | தட்டச்சர் | பொது சுகாதாரத்துறை | 04.04.2018 |
| 13 | E.திவ்யாஸ்ரீ | தட்டச்சர் | கட்டடத்துறை | 27.03.2018 |
| 14 | K.ராஜசேகர் | தட்டச்சர் | பொதுத்துறை | 28.03.2018 |
| 15 | D.மோனிகா | தட்டச்சர் | மண்டலம் 4 | 27.03.2018 |
| 16 | J.ராதிகா | தட்டச்சர் | திடக்கழிவு மேலாண்மை துறை | 28.03.2018 |
| 17 | G.தீபிகா | தட்டச்சர் | பொதுத்துறை | 27.03.2018 |
| 18 | L.காயத்திரி | தட்டச்சர் | மத்திய கணக்கு குழுமம் | 28.03.2018 |

மேற்கண்ட தற்காலிக தெரிவுப்பட்டியலை இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவியில் உள்ளவர்களுக்கு சுற்றுக்கு விட்டு சேர்ப்பன மற்றும் தவிர்ப்பன குறித்து ஆட்சேபணைகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட தட்டச்சர்கள் உதவியாளர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்கள். அதன் விவரங்கள் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

1) தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண். 13ல் இடம் பெற்றுள்ள திருமதி. E.திவ்யாஸ்ரீ, தட்டச்சர், கட்டடத்துறை அவர்களின் 09.04.2021 நாளிட்ட கடிதத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் டிப்ளமோ சிவில் பயின்று வருவதாலும் பொறியாளர்கள் பிரிவில் செல்ல விருப்பமுள்ளதால் தற்காலிகமாக உதவியாளர் பதவி உயர்வு வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

**பொ.து.ந.க.எண். இ5/ 28248/2020**

2) தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண். 14ல் இடம் பெற்றுள்ள திரு.K.ராஜசேகர், தட்டச்சர், பொதுத்துறை அவர்களின் 04.03.2021 நாளிட்ட கடிதத்தில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக இவ்வாண்டிற்கான 2020-2021 ஆம் ஆண்டிற்கான உதவியாளர் பதவி உயர்வுக்கு தனது பெயரினை தற்காலிகமாக பரிசீலிக்க வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

3) தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.15ல் இடம் பெற்றுள்ள திருமதி.D.மோனிகா, தட்டச்சர், மண்டலம் 4 அவர்கள் 08.03.2021 நாளிட்ட கடிதத்தில் Diploma in Civil Engineering முடிக்க ஓராண்டு காலம் உள்ளதால் தனக்கு உதவியாளர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தனியர்கள் அளித்த கோரிக்கைகள் Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 பிரிவு 57(2)ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் மேற்காணும் தனியர்களின் பெயர்கள் தெரிவுப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என தெரிவித்தது மூன்றாண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என தெரிவித்து தனியர்களுக்கு Relinquishment ஆணை வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட ஆட்சேபணைகளை தவிர்த்து சட்டக்குழுமம், பூங்கா துறை, மக்கள் தொடர்பு அலுவலகம், தரக்கட்டுப்பாடு துறை, மழைநீர் வடிகால் துறை, பேருந்து சாலைகள் துறை, வரிவிதிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம், பொது சுகாதாரத்துறை, திட்டம் மற்றும்ம வடிவடிமைப்பு (ம) பயிற்சி துறை, மன்றத்துறை, பூச்சி தடுப்பு துறை, சிறப்பு திட்டங்கள் துறை, தலைமைப் பொறியாளர் (பாலங்கள்) அலுவலகம், வடக்கு வட்டார அலுவலகம், கல்வித்துறை, பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல், மற்றும் மண்டலம், 2,5,8,10,11,12,14,15 ஆகிய மண்டலங்களில் இருந்து ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவித்து இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது. மற்ற துறைகள் மற்றும் மண்டலங்களிலிருந்து ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை.

மேற்படி உதவியாளர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் அந்தந்த பதவிகளில் தகுதிகாண்பருவம் முடித்தவர்களாகவும், சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம் I மற்றும் அலுவலக நடைமுறை நூல் ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லாததால் உதவியாளர் பதவி உயர்வுக்குண்டான தகுதிகளைப் பெற்றுள்ளார்கள் என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆகவே, 01.07.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021 ஆம் ஆண்டிற்கான உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களை ரூ.20600-65500/- என்ற ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் நிரப்புவதற்காக தயாரிக்கப்பட்ட இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

<u>2020-2021ஆம் ஆண்டு உதவியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்</u>

| வ.எண். | பெயர் திருவாளர் | தற்போது வகிக்கும் பதவி | பணிபுரியும் துறை/ மண்டலம் | தற்போது வகித்து வரும் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 01 | S.பிரேம்குமார் | இளநிலை உதவியாளர் | மண்டலம் 1 | 22.05.2006 |
| 02 | G.சிவநேசன் | தட்டச்சர் | வருவாய் துறை | 01.12.2017 |
| 03 | U.G.கோமளா | தட்டச்சர் | கல்வித்துறை | 20.01.2017 |
| 04 | S.நதியா | தட்டச்சர் | மண்டலம் 8 | 20.01.2017 |
| 05 | P.கோவிந்தம்மா | தட்டச்சர் | மருத்துவ சேவைகள் துறை | 19.01.2017 |
| 06 | K.P.சுகன்யா | தட்டச்சர் | அரங்கத்துறை | 23.02.2017 |
| 07 | C.பாண்டுரங்கன் | தட்டச்சர் | பொதுத்துறை | 12.07.2017 |
| 08 | B.உமா மகேஸ்வரி | தட்டச்சர் | பணித்துறை | 12.07.2017 |
| 09 | P. ராமலிங்கம் | தட்டச்சர் | மத்திய கணக்கு குழுமம் | 28.03.2018 |
| 10 | G.அனுராதா | தட்டச்சர் | மண்டலம் 10 | 28.03.2018 |
| 11 | M.பாஸ்கரன் | தட்டச்சர் | மண்டலம் 13 | 28.03.2018 |
| 12 | R.ராஜலட்சுமி | தட்டச்சர் | பொது சுகாதாரத்துறை | 04.04.2018 |
| 13 | J.ராதிகா | தட்டச்சர் | திடக்கழிவு மேலாண்மை துறை | 28.03.2018 |
| 14 | G.தீபிகா | தட்டச்சர் | பொதுத்துறை | 27.03.2018 |
| 15 | L.காயத்திரி | தட்டச்சர் | மத்திய கணக்கு குழுமம் | 28.03.2018 |

எனவே,

1) 01.07.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021 ஆம் ஆண்டு உதவியாளர் பதவி உயர்வுக்கு தற்காலிக விருப்பமின்மை தெரிவித்துள்ள 1) திருமதி.M.சுலோச்சனா, தட்டச்சர், தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம், 2) திருமதி.S.மஞ்சுளா, தட்டச்சர், மண்டலம்-2, 3) திரு.S.சந்திரசேகரன், தட்டச்சர், மண்டலம்-9, 4) திருமதி.K.பானுமதி, தட்டச்சர், மண்டலம்-10, 5) T.அலமேலு, தட்டச்சர், மண்டலம்-11 . 6) திரு.K.ராஜசேகர், தட்டச்சர், பொதுத்துறை, 7) திருமதி. E.திவ்யாஸ்ரீ, தட்டச்சர், கட்டடத்துறை. 8) D.மோனிகா, தட்டச்சர், மண்டலம்-4 ஆகியோரின் தற்காலிக விருப்பமின்மை கோரிக்கைகள் Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 பிரிவு 57(2)ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு, பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என தெரிவித்துள்ளது மூன்றாண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என தெரிவித்து தனியர்களுக்கு Relinquishment ஆணை வழங்கவும்,

2) பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட துணை விதிகள் 2009ன்படி உதவியாளர் பதவிஉயர்வுக்கு பணி துணை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 3 : 1 என்ற விகிதாச்சாரத்தில் (3 இளநிலை உதவியாளர்கள் 1 தட்டச்சர்) 2020-2021 ஆம் ஆண்டு உதவியாளர் பதவிக்கு ஒரு தகுதியான இளநிலை உதவியாளர் உள்ள நிலையில், நிர்வாக நலன் கருதி தட்டச்சர் பதவியில் உள்ள நபர்களை பரிசீலனை செய்யப்பட்டதற்கு ஒப்புதல் அளிக்கவும்,

3) இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவியில் பணிமுதுநிலை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 15 நபர்களின் பெயர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கவும்,

4) ஒப்புதலுக்கு பிறகு தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 15 நபர்களுக்கு பட்டியலாண்டில் உதவியாளர் காலிப்பணியிடங்களில் 7வது ஊதியக்குழு அட்டவணையின்படி ரூ.20600-65500/- என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் உதவியாளர் பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"உதவியாளர் பதவி உயர்வு தெரிவுப்பட்டியல், 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ8/30712/2020**

**தீர்மானஎண்.528/2021** **நாள்:26-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 01/10/2020ஐ மைய நாளாகக் கொண்டு 2020-2021ஆம் ஆண்டிற்கு தட்டச்சர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு-III மற்றும் IVஆம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள்-2009க்கு மன்றத்தீர்மான எண்.13/2015, நாள்:29/01/2015.ன்படி, அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி தட்டச்சர் பதவிக்கு தேர்ந்த பெயர் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1 மைய நாள் (Crucial Date) கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். இப்பதவிக்கு காலமுறை ஊதிய விகிதம் ரூ.19500-62000/. நிலை-8 (பழைய ஊதிய விகிதம் 5200 - 20200 + தர ஊதியம் 2400) கீழ்காணும் பணி துணை விதிகளின்படி நிரப்பப்பட வேண்டும்.

**தட்டச்சர் பதவிக்கு பணி நியமன விதிகள்-2009**

| வ. எண் | பதவி | நியமன முறை | கல்வித் தகுதி மற்றும் தொழில் நுட்ப தகுதி | நிர்ணய நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | தட்டச்சர் | **1)** அனைத்து கீழ்வகை பதவிகளிலிருந்து தகுதி காண் பருவம் முடித்தவர்கள், பணி நியமனம் செய்யப்பட்ட பதவியில் 2 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும்.<br>**2)** பணிக்காலத்தில் காலஞ்சென்ற மாநகராட்சிப் பணியாளர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர்களை நியமனம் செய்தல்<br>**3)** வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேரடி நியமனம். | 1) குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி<br>2) அரசு தொழில் நுட்ப தேர்வில் தட்டச்சுத் தேர்வில் கீழ்கண்டவாறு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>a) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலையில் தேர்ச்சி<br>அல்லது<br>b) தமிழ் மொழியில் உயர்நிலை தேர்ச்சி மற்றும் ஆங்கில மொழியில் கீழ் நிலை தேர்ச்சி<br>அல்லது<br>c) ஆங்கில மொழியில் உயர்நிலை தேர்ச்சி மற்றும் தமிழ் மொழியில் கீழ் நிலை தேர்ச்சி<br>3) எம்.எஸ்.ஆபீஸ் (விண்டோஸ்) படிப்பில் தேர்ச்சி | ஊதிய விகிதம் ரூ.5200-20200+ தர ஊதியம் 2400/-<br><br>நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 1-ம் நாள் அட்டவணை-11 | பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாச்சாரம் 1:1 |

**காலிப்பணியிடம் அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | **Total cadre strength** | **129 Nos** |
| | (i) Temporary | - NIL – |
| | (ii) **Permanent** | **129 Nos** |
| 2. | Number of vacancies of retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, Dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules) | - NIL – |
| 3. | 5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment) | - NIL – |

<u>பொ.து.ந.க.எண்.இ8/30712/2020</u>

<table>
<tr><td>4.</td><td>Number of likely promotions (Typist to Assistant = 14)</td><td>14 Nos</td></tr>
<tr><td>5.</td><td>Number of new posts likely to be sanctioned during the panel period and the number of posts sanctioned earlier but not included in the previous year estimate</td><td>- NIL –</td></tr>
<tr><td></td><td align="right">Vacancies</td><td>14Nos</td></tr>
<tr><td>6.</td><td>Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O.Ms.No.103, Personnel and Administrative Reforms (S) Department, Dated 9th October 1994.<br><table>
<tr><td>When the total vacancies arrived at with reference General rule 4 are between</td><td>Provision for unexpected contingencies as a percentage of total vacancies</td></tr>
<tr><td>1 to 10</td><td>40%</td></tr>
<tr><td>11 to 20</td><td>30%</td></tr>
<tr><td>21 to 40</td><td>20%</td></tr>
<tr><td>41 to 100</td><td>15%</td></tr>
<tr><td>100 and above</td><td>10%</td></tr>
</table>Promotion Vacancies 14 x 30%= (4.2) 4 Nos</td><td>04 Nos</td></tr>
<tr><td></td><td>Deduct</td><td></td></tr>
<tr><td>7.</td><td>Number of posts disbanded during the recruitment year</td><td>- NIL –</td></tr>
<tr><td>8.</td><td>Number of vacancies apportioned for direct recruitment<br><br>2014-2015 – 4 Nos<br>2015-2016 – 4 Nos<br>2016-2017 – 19 Nos<br>2017-2018 – 21 Nos<br>2018-2019 – 05 Nos<br>2019-2020 – 11 Nos<br>-------<br>Total 64 Nos<br>-------<br>2020-2021 – - NIL –</td><td></td></tr>
<tr><td></td><td align="right">Total</td><td>18 Nos</td></tr>
<tr><td>9.</td><td>Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up.</td><td>- NIL –</td></tr>
<tr><td>10.</td><td>Number of persons who have been deputed to other posts for a specified period and subsequently revered to the lower cadre for want of vacancy.</td><td>- NIL –</td></tr>
</table>

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மொத்தம் 129 தட்டச்சர் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மன்றத்தீர்மானத்தின்படி, தட்டச்சர் பதவிக்கு 1:1 விகிதாச்சாரம் (பதவி உயர்வு 1 - நேரடி நியமனம் 1) என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த (129) பணியிடத்தில் விகிதாசாரத்தின்படி மேற்கண்டுள்ள அட்டவணையில் நேரடி நியமனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியலாண்டு (2020-2021) முதல் தட்டச்சர் பதவியில் ஏற்படும் மொத்த காலிப்பணிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சியில் தட்டச்சு பதவிக்கு தகுதிகள் பெற்றுள்ள கீழ்நிலை பணியாளர்களை கொண்டு நிரப்புவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

சென்னை மாநகராட்சி வகுப்பு III மற்றும் IV ஆம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009 மன்றத்தீர்மான எண்.13/2015, நாள்:29/01/2015ன்படி, தட்டச்சர் பதவிக்கு அனைத்து கீழ்வகை பதவிகளிலிருந்து தகுதிகாண் பருவம் முடித்து பணி நியமனம் செய்யப்பட்ட பதவியில் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு செய்த பணியாளர்களின் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வித் தகுதி மற்றும் பணி மூப்பின் அடிப்படையில் நிரப்புவதற்கு 01.10.2020 மைய நாளிட்டு தட்டச்சர் பதவிக்கு தகுதி பெற்று பணியாளர்களின் விவரங்களை அனுப்பிடக்கோரி அனைத்து துறை/வட்டாரங்கள்/மண்டலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பட்டதில், இயந்திர பொறியியல் துறை, அரங்கத்துறை, பூங்காத்துறை, மற்றும் மண்டலம்-1,3,4,5,7,8,9,12 மற்றும் 14லிருந்து கீழ்நிலை பணியாளர்களின் விவரங்கள் பெறப்பட்டது. மற்ற துறைகள் /வட்டார அலுவலகம்/மண்டலங்களிலிருந்து இன்மை அறிக்கைகள் வரப்பெற்றது.

**பொ.து.ந.க.எண்.இ8/ 30712/2020**

துறைகள்/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட 25 கீழ்நிலை பணியாளர்களின் பணிபதிவேடுகள் மற்றும் பணிவிவரங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், 23 பணியாளர்கள் தட்டச்சர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் நிறைவு செய்துள்ளதால், முதுநிலையின்படி பட்டியல் தயார் செய்யப்பட்டு 2020-2021 ஆம் ஆண்டில் ஏற்படவுள்ள 17 (தட்டச்சர்கள் உதவியாளராக பதவி உயர்வு) காலிப்பணியிடங்களுக்கு, அரசாணையின்படி, எதிர்பாரா நிகழ்வுகளால் ஏற்படக்கூடிய 5 பணியிடங்களுடன் சேர்த்து 22 நபர்கள் அடங்கிய தற்காலிக தேர்ந்தப்பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு தயாரித்து வெளியிடப்பட்டது.

2020-2021ஆம் ஆண்டிற்கு தட்டச்சர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்

| வ. எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் துறை/மண்டலம் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | எ. இம்மானுவேல் மலேரியா பணியாளர் | மண்டலம்-4 | 22/07/'2014 |
| 2 | க.சையத் அலி பாத்திமா | மண்டலம்-7 | 5/2/2015 |
| 3 | எ.அப்துல் மாலிக் தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை | 14/03/2016 |
| 4 | பி. நாகராஜ் தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை | 14/03/2016 |
| 5 | பி.ஆர்.சதீஷ் சாலைப்பணியாளர் | மண்டலம்-8 | 17/09/2016 |
| 6 | ஜி.தேவி சாலைப்பணியாளர் | மண்டலம்-14 | 12/09/2016 |
| 7 | எம்.தாரா சாலைப்பணியாளர் | மண்டலம்-8 | 17/09/2016 |
| 8 | ஏ.மோகனபிரியா சாலைப்பணியாளர் | மண்டலம்-3 | 21/09/2016 |
| 9 | ஜி.இளவரசன் சாலைப்பணியாளர் | மண்டலம்-5 | 20/09/2016 |
| 10 | யு.கார்த்திக் தொழிலாளி | அரங்கத்துறை | 10/03/2017 |
| 11 | ப்பி.பிரியதர்ஷினி பூங்கா பணியாளர் | பூங்கா துறை | 16/03/2017 |
| 12 | ஜெ.பிரேமநாதன் சாலைப்பணியாளர் | மண்டலம்-7 | 18/07/2017 |
| 13 | பி.ராம்குமார் தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை. | 07/07/2017 |
| 14 | ட்டி.கண்ணன் தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை | 07/07/2017 |
| 15 | கே.சீனுவாசன் சாலைப்பணியாளர் | மண்டலம்-7 | 18/07/2017 |
| 16 | ப்பி.அகிலா சாலைப்பணியாளர் | மண்டலடம்-12 | 18/07/2017 |
| 17 | எம்.ஐ.சஹானாபானு சாலைப்பணியாளர் | மண்டலம்-1 | 20/07/2017 |
| 18 | பி.கார்த்திகேயன் சாலைப்பணியாளர் | மண்டலம்-3 | 12/07/2017 |

| | | | |
|---|---|---|---|
| 19 | பி.ரம்யா<br>பூங்கா பணியாளர் | மண்டலம்-9 | 28/03/2018 |
| 20 | என்.ஜான்சிராணி<br>பூங்கா பணியாளர் | மண்டலம்-8 | 27/03/2018 |
| 21 | எம்.சாமுண்டீஸ்வரி<br>பூங்கா பணியாளர் | மண்டலம்-9 | 28/03/2018 |
| 22 | ப்பி.என்.ஹேமந்த்ராஜ்<br>தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை | 20/03/2018 |

மேற்காணும் தற்காலிக தெரிவுப்பட்டியலை அனைத்து கீழ்வகை பணியாளர்களுக்கும் சுற்றுக்கு விட்டு ஆட்சேபனை இருப்பின் அதனை இவ்வலுகத்திற்கு தெரியப்படுத்துமாறு கோரப்பட்டதில், ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை. பெரும்பாலும் துறை/வட்டாரம்/மண்டலங்களிலிருந்து "இன்மை" அறிக்கையே பெறப்பட்டுள்ளது.

2020-2021ஆம் ஆண்டிற்கு உதவியாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியலில் 1 இளநிலை உதவியாளர் மற்றும் 17 தட்டச்சர்களுடன் மொத்தம் 18 நபர்கள் கொண்டு வெளியிடப்பட்டது. அப்பட்டியலில் இடம் பெற்றிருந்த வரிசை எண்.13.E.திவ்யாஸ்ரீ, கட்டடத்துறை, 14.K.ராஜசேகர், பொதுத்துறை, 15.D.மோனிகா, மண்டலம்-4, ஆகிய மூன்று தட்டச்சர்கள் தற்காலிகமாக உதவியாளர் பதவி உயர்வு வேண்டாம் என தெரிவித்து கடிதம் அளித்துள்ளதால், தற்போது 14 தட்டச்சர்கள் மட்டுமே உதவியாளராக பதவி உயர்வு பெறவுள்ளதால், தட்டச்சர் பதவியில் ஏற்படும் காலிப்பணியிடம் மாறுதலுக்கு உள்ளாகிறது.

2020-2021 ஆம் ஆண்டிற்கு உதவியாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியலினை அடிப்படையாக கொண்டு தட்டச்சர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் 22 நபர்களை கொண்டு வெளியிடப்பட்டது. தற்போது 14 தட்டச்சர்கள் மட்டும் உதவியாளராக பதவி உயர்வு பெற இருப்பதால் அதன் அடிப்படையில் கணக்கிடப்பட்டு 14 தட்டச்சர் காலிப்பணியிடம் மற்றும் எதிர்பாரா நிகழ்வுகளுக்கான பணியிடம் 4 ஆக மொத்தம் 18 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் தயாரித்து வெளியிடப்பட வேண்டும்.

பணி மூப்பு விவரப்பட்டியலில் வரிசை எண்.1ல் இடம் பெற்றுள்ள திரு.எ.இம்மானுவேல், மலேரியா பணியாளர், மண்டலம்-4 என்பவர் 2014 ஆண்டு முதல் மலேரியா பணியாளராக மண்டலம்-4லில் பணிபுரிந்து வருகிறார். தனியர் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் தெலுங்கு முதல் பாடமாக எடுத்து பயின்றுள்ளதால், தனியர் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் மே'2019ல் நடைப்பெற்ற தமிழ் மொழி தேர்வில் கலந்துக்கொண்டு தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்று பணிப்பதிவேட்டில் பதியப்பெற்றுள்ளது. மேலும், தட்டச்சில் தமிழ் கீழ்நிலை ஆங்கிலத்தில் உயர்நிலை தேர்ச்சியும், கணினியில் எம்.எஸ்.ஆபிஸ் CSCயில் குறுகிய காலம் (2 மாதம்) பயிற்சி பெற்றுள்ளார்.

அதனை தொடர்ந்து வரிசை எண்.9ல் இடம் பெற்றுள்ள திரு.ஜி.இளவரசன், என்பவர் 2016 ஆம் ஆண்டு முதல் சாலைப்பணியாளராக மண்டலம்-5ல் பணிபுரிந்து வருகிறார். தனியர் தட்டச்சு தமிழ் கீழ்நிலை ஆங்கிலத்தில் உயர்நிலை தேர்ச்சி பெற்று கணினியில் எம்.எஸ்.ஆபிஸ் பயிற்சி குறுகிய காலம் பயிற்சி பெற்றுள்ளார்.

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சர் பதவியில் கணினியில் ஆபீஸ் ஆட்டோமேஷன் தேர்ச்சி தொடர்பாக ***G.O Ms No, 130 Personnel and Administrative Reforms (s) Department dated 22.7.2008 - Prescription of Computer Qualification for Typist / Steno-Typist. (i) "Certificate Course in Computer on Office Automation" awarded by the Technical Education Department as additional Technical Educational qualification for the post of Typist, Steno Typist. (iii) (The Certificate Course in Computer on Office Automation is being conducted by Directorate of Technical Education since June 2002 and the examination is being held twice in a year only during January and June) If they fail to possess the above said Certificate Course within the prescribed period they shall not draw their subsequent increment. The same shall be restored on acquiring the above said qualification.***

மேற்காணும் அரசாணையின்படி, பணி மூப்பு விவரப்பட்டியலில் வரிசை எண். 1 மற்றும் 9ல் உள்ள கீழ்நிலை பணியாளர்கள் ஓராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி

**பொ.து.ந.க.எண்.இ8/30712/2020**

இயக்ககம் மூலம் நடத்தப்படும் கணினியில் ஆபீஸ் ஆட்டோமேஷன் (Computer on Office Automation) தேர்வில் தேர்ச்சி பெற்று அரசு தொழில் நுட்ப சான்றிதழ் பெறவேண்டும் தவறும் பட்சத்தில் தனியர்களின் ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேற்படி தனியர்களின் பெயரை தட்டச்சர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

பணி மூப்பு விவரப்பட்டியலில் வரிசை எண்.17ல் இடம் பெற்றுள்ள எம்.ஐ.சஹானாபானு, சாலைப்பணியாளர், மண்டலம்-1, அவர்கள் தட்டச்சு தமிழ் கீழ்நிலை, ஆங்கிலத்தில் உயர்நிலை தேர்ச்சி பெற்று, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் Bachelor of Computer Application, April-2016 ஆண்டு முடித்துள்ளதால், அரசாணை எண்.26, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்:23/02/2017ன்படி, Bachelor of Computer Application, ஆபிஸ் ஆட்டோமெஷன் தேர்ச்சிக்கு இணையாக கருதலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளதால், மேற்படி தனியரின் பெயரினை தட்டச்சர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்காலம்.

பணி விவரப்பட்டியலில் வரிசை எண். 2 முதல் 8 வரை 10 முதல் 18, வரையில் உள்ள நபர்கள் தட்டச்சர் பதவி உயர்வுக்கு தேவையான தட்டச்சு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை அல்லது தமிழில் உயர்நிலை, ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது ஆங்கிலத்தில் உயர்நிலை, தமிழில் கீழ்நிலை தேர்ச்சி பெற்று கணினியில் ஆபீஸ் ஆட்டோமேஷன்/எம்.எஸ்.ஆபிஸ் தொடர்புடைய கம்யூட்டர் அப்பிளிகேஷன் தேர்ச்சி/பயிற்சி குறைந்த பட்சம் நான்கு மாதங்கள் முதல் ஆறு மாத கால பயிற்சியினை அரசு/ அரசு சார்ந்த தனியார் நிறுவனத்தில் முடித்துள்ளதால் மேற்படி தனியர்களை தட்டச்சர் பதவி உயர்வுக்கு பரிசீலனை செய்யலாம் என்றும், மேற்படி நபர்கள் மீது கடந்த ஐந்து ஆண்டுகளில் குற்றச்சாட்டுக்களோ மற்றும் விசாரணையோ ஏதும் நிலுவையில் இல்லை என்பதனை கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, 01/10/2020ஐ மைய நாளாகக் கொண்டு 2020-2021ஆம் ஆண்டிற்கு தட்டச்சர் காலிப்பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பிடும் பொருட்டு, ஏழாவது ஊதியக்குழு நிலை-8ல் ரூ.19500-62000/. (பழைய ஊதிய விகிதம் 5200 -20200 + தர ஊதியம் 2400) மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் 18 நபர்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

**2020-2021 ஆம் ஆண்டிற்கு தட்டச்சர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்**

| வ. எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் துறை/மண்டலம் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | எ. இம்மானுவேல் மலேரியா பணியாளர் | மண்டலம்-4 | 22/07/'2014 |
| 2 | க.சையத் அலி பாத்திமா பூங்கா பணியாளர் | மண்டலம்-7 | 5/2/2015 |
| 3 | எ.அப்துல் மாலிக் தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை | 14/03/2016 |
| 4 | பி. நாகராஜ் தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை | 14/03/2016 |
| 5 | பி.ஆர்.சதீஷ் சாலைப்பணியாளர் | மண்டலம்-8 | 17/09/2016 |
| 6 | ஜி.தேவி சாலைப்பணியாளர் | மண்டலம்-14 | 12/09/2016 |
| 7 | எம்.தாரா சாலைப்பணியாளர் | மண்டலம்-8 | 17/09/2016 |
| 8 | ஏ.மோகனபிரியா சாலைப்பணியாளர் | மண்டலம்-3 | 21/09/2016 |
| 9 | ஜி.இளவரசன் சாலைப்பணியாளர் | மண்டலம்-5 | 20/09/2016 |
| 10 | யு.கார்த்திக் தொழிலாளி | அரங்கத்துறை | 10/03/2017 |

| | | | |
|---|---|---|---|
| 11 | ப்பி.பிரியதர்ஷினி<br>பூங்கா பணியாளர் | பூங்கா துறை | 16/03/2017 |
| 12 | ஜெ.பிரேமநாதன்<br>சாலைப்பணியாளர் | மண்டலம்-7 | 18/07/2017 |
| 13 | பி.ராம்குமார்<br>தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை. | 07/07/2017 |
| 14 | ட்டி.கண்ணன்<br>தொழிலாளி | இயந்திர பொறியியல் துறை | 07/07/2017 |
| 15 | கே.சீனுவாசன்<br>சாலைப்பணியாளர் | மண்டலம்-7 | 18/07/2017 |
| 16 | ப்பி.அகிலா<br>சாலைப்பணியாளர் | மண்டலடம்-12 | 18/07/2017 |
| 17 | எம்.ஐ.சஹானாபானு<br>சாலைப்பணியாளர் | மண்டலம்-1 | 20/07/2017 |
| 18 | பி.கார்த்திகேயன்<br>சாலைப்பணியாளர் | மண்டலம்-3 | 12/07/2017 |

எனவே,

அ) 01/10/2020ஐ மைய நாளாகக் கொண்டு 2020-2021 ஆம் ஆண்டின் தட்டச்சர் பதவிக்கு தகுதி பெற்றுள்ள 18 நபர்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு *III* மற்றும் *IV*ம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் *2009*ன்படி தட்டச்சர் பதவிக்கு கணினியில் எம்.எஸ்.ஆபீஸ் விண்டோஸ் தேர்ச்சி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் பணி மூப்பு விவரப்பட்டியலில் வரிசை எண்.*1* மற்றும் *09*ல் இடம் பெற்றுள்ளவர்களை தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் நடத்தப்படும் கணினியில் ஆபீஸ் ஆட்டோமேஷன் *(Computer on Office Automation)* தேர்வில் ஒர் ஆண்டுக்குள் தேர்ச்சி பெற்று அரசு தொழில் நுட்ப சான்றிதழ் பெறவேண்டும் தவறும் பட்சத்தில் தனியர்களின் ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தப்படும் என்ற நிபந்தனை விதிக்க அனுமதியும்,

இ) *2020*-2021ஆம் ஆண்டு தட்டச்சர் பதவி உயர்வுக்கு இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 18 கீழ்நிலை பணியாளர்களில் தற்போது ஏற்பட்டுள்ள/ ஏற்படவுள்ள தட்டச்சர் காலிப்பணியிடங்களை ஏழாவது ஊதியக்குழு நிலை-8ல் ரூ.19500-62000/. (பழைய ஊதிய விகிதம் 5200 -20200 தர ஊதியம் 2400) மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் தட்டச்சர் பதவி உயர்வு வழங்க ஒப்புதலும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தட்டச்சர் பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுப்பட்டியல், அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

## பொ.து.ந.க.எண்.இ8/6772/2020

**தீர்மானஎண்.529/2021** **நாள்:25-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 01/07/2020ஐ மைய நாளாகக் கொண்டு 2020-2021ஆம் ஆண்டிற்கு நிருபர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு-III மற்றும் IVஆம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள்-2009ன்படி, நிருபர் பதவிக்கு தேர்ந்த பெயர் பட்டியல் தயாரிப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஜீலை 1 மைய நாள் (Crucial Date) கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.

இப்பதவிக்கு காலமுறை ஊதிய விகிதம் ரூ.36200-114800/. நிலை-15 மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் கீழ்காணும் பணி துணை விதிகளின்படி நிரப்பப்பட வேண்டும்.

| வ. எண் | பதவி | நியமன முறை | கல்வித் தகுதி மற்றும் தொழில் நுட்ப தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | நிருபர் | 1. சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-II லிருந்து பதவி உயர்வு மூலம்<br>2. 3 ஆண்டுகள் பணி முடித்திருந்த சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III விருப்பத்தின் அடிப்படையில் பதவி உயர்வு<br>3. நேரடி நியமனம் | 1) குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி<br>2) அரசு தொழில் நுட்ப தட்டச்சு தேர்வில் தமிழ்மொழி மற்றும் ஆங்கில மொழியில் தட்டச்சு தேர்வு உயர்நிலையில் தேர்ச்சி<br>3) அரசு தொழில் நுட்ப அதிவேகத் தேர்வில் தமிழ் மொழியில் சுருக்கெழுத்து தேர்ச்சி<br>4) அரசு தொழில் நுட்ப தேர்வில் ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழியில் சுருக்கெழுத்து உயர்நிலைத் தேர்வில் தேர்ச்சி<br>அல்லது<br>தமிழில் உயர்நிலை ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது ஆங்கிலத்தில் உயர்நிலை தமிழில் கீழ்நிலையில் தேர்ச்சி<br>5) எம்.எஸ்.ஆபீஸ் (விண்டோஸ்) படிப்பில் தேர்ச்சி | ஊதிய விகிதம் ரூ.9300-34800+ தர ஊதியம் 4500/-<br>புதிய ஊதிய விகிதம் ரூ.36200-114800/. நிலை-15<br>நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜீலை 1-ம் நாள்<br>அட்டவணை-7 |

**நிருபர் காலிப்பணியிட விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | Total cadre strength | 8 Nos |
| | (i) Temporary | Nil |
| | (ii) Permanent | 8 Nos |
| 2. | Number of vacancies on retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules) | -Nil- |
| 3. | 5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment) | -Nil- |
| 4. | Number of likely promotion | -Nil- |
| 5. | Number of new posts likely to be sanctioned during the period and the Number of posts sanctioned earlier but not included in the previous year estimate | -Nil- |

**பொ.து.ந.க.எண்.இ8/6772/2020**

| | | |
|---|---|---|
| | Vacancies not filled by promotion due to non availability of eligible hands for the year 2019 | -02- |
| | **Add** | |
| 6. | Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O.Ms.No.103, Personnel and Administrative Reforms (S) Department, Dated 9th October 1994.<br>When the total vacancies arrived at with reference General rule 4 are between → Provision for unexpected contingencies as a percentage of total vacancies:<br>1 to 10 — 40%<br>11 to 20 — 30%<br>21 to 40 — 20%<br>41 to 100 — 15%<br>100 and above — 10%<br>**Promotion Vacancies 2x40%= (0.8) 1 No** | 1No |
| | **Deduct** | |
| 7. | Number of posts disbanded during the recruitment year | - |
| | **Total** | 3 Nos |
| 9. | Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up | - |
| 10. | Number of persons who have been deputed to other posts for a specific period and subsequently reverted to the lower cadre for want of vacancy. | - |

சென்னை மாநகராட்சி வகுப்பு-III மற்றும் IVஆம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ன்படி, நிருபர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி தகுதிகளின் அடிப்படையில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்து சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவியில் பணிபுரிந்து வரும் பணியாளரின் பணிப்பதிவேடு மற்றும் பணிவிவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு ஒரு நபரை கொண்டுள்ள பணி விவரப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, திருமதி.C.பிரேமா, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III, சிறப்பு திட்டங்கள் துறை (பணியிடம் துணை ஆணையர் (பணிகள்) அலுவலகம்) அவர்கள் தட்டச்சு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை தேர்ச்சி, அரசு தொழில் நுட்ப அதிவேகத் தேர்வில் தமிழ் மொழியில் சுருக்கெழுத்து தேர்ச்சி, சுருக்கெழுத்து தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை தேர்ச்சி மற்றும் தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் நடத்தப்படும் ஆபீஸ் ஆட்டோமேஷன் தேர்விலும் தேர்ச்சி பெற்றுள்ளார். தனியர் மீது கடந்த ஐந்து ஆண்டுகளில் குற்றச்சாட்டுகளோ மற்றும் விசாரனணயோ ஏதும் இல்லை.

2020-2021 ஆம் ஆண்டிற்கு மூன்று நபர்களை கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரித்து இரண்டு நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டிய நிலையில் தகுதியான ஒரு பணியாளரின் பணிவிவரங்கள் மற்றும் பணிப்பதிவேடு மட்டுமே வந்தமையால் ஒரு நபரை கொண்டு தயாரித்து தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

**2020-2021ஆம் ஆண்டிற்கு நிருபர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்**

| வ. எண் | பெயர் / பதவி | பணியிடம் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.பிரேமா,<br>சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை -III | சிறப்பு திட்டங்கள் துறை | 04/03/2014 |

**பொ.து.ந.க.எண்.இ8/6772/2020**

மேற்காணும் தற்காலிக தெரிவுப்பட்டியலை வட்டார துணை ஆணையர்கள் / துறைத் தலைவர்கள்/ மண்டல அலுவலர்கள் தங்களின் கீழ் பணிபுரியும் அனைத்து சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-*II* மற்றும் நிலை-*III*ல் உள்ள பணியாளர்களுக்கு சுற்றுக்கு விட்டு ஆட்சேபணை ஏதும் இருப்பின் அதனை தெரியப்படுத்துமாறு கோரப்பட்டதில் பெரும்பாலான துறைகள் மண்டலங்கள் மற்றும் வட்டார அலுவலகங்களிலிருந்து ஆட்சபேணை இல்லை என தெரிவித்து 'இன்மை' அறிக்கை பெறப்பட்டுள்ளது.

ஆகவே, *2020-2021* ஆம் ஆண்டிற்கான நிருபர் காலிப்பணியிடத்தினை ஏழாவது ஊதியக்குழு அட்டவணையின்படி ரூ.*36200-114800/.* நிலை-*15* என்ற ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் நிரப்புவதற்கான இறுதித் தெரிவுப்பட்டியல் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

**2020-2021ஆம் ஆண்டிற்கு நிருபர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்**

| வ. எண் | பெயர் /பதவி | பணியிடம் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| *1* | திருமதி.C.பிரேமா,<br>சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –*III* | சிறப்பு திட்டங்கள் துறை | *04/03/2014* |

எனவே,

அ) 01/07/2020ஐ மைய நாளாகக் கொண்டு 2020-2021 ஆம் ஆண்டின் நிருபர் பதவிக்கு தகுதி வாய்ந்த ஒரு நபர் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

ஆ) *2020*-2021 ஆம் பட்டியலாண்டில் தற்போது இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு நபர் மட்டும் அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதால் ஏழாவது ஊதியக்குழுவின் அட்டவணையின்படி ரூ.36200-114800/. நிலை-15 என்ற ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுன் நிருபர் *(Reporter)* பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"நிருபர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல், அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ6/ 30604/2020**

**தீர்மானஎண்.530 / 2021** **நாள்:25-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2020-2021 ஆம் பட்டியலாண்டில் இளநிலை உதவியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி 2020-2021ஆம் பட்டியல் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களை 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ரூ.19500-62000 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.08.2020 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம்நிலைப் பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ல் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கு நியமன முறை மற்றும் கல்வித்தகுதி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**இளநிலை உதவியாளர் பதவிக்கான நியமன முறை**

| பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப் படும் தகுதி | நிர்ணய நாள். | குறிப்பு |
|---|---|---|---|---|
| இளநிலை உதவியாளர் | 1, அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலம், தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்.<br>i. கீழ்நிலைப்பதவிகளில் 5- ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும்.<br>ii. பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிநியமனம் செய்யப்பட்ட பதவியில் 3 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.<br>(பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாதோர் 1:1 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு வழங்கப்படும்) | குறைந்தபட்ச கல்வித்தகுதி | ரூ.,5200-20200 + நிலை ஊதியம் ரூ.2400 ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி **ரூ.19500-62000**<br>**நிர்ணய நாள்** ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட்1ம் நாள். | 1. இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர் பொதுவான பணிவகையினை சேர்ந்தவர்களாக கருதப்பட வேண்டும். (Common category / Interchangeable post)<br>2. பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாச்சாரம் 1:1<br>3. நேரடி நியமன ஒதுக்கீட்டில் 50% விழுக்காட்டினை கருணை அடிப்படையில் பணி நியமனத்தின் போது பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றுள்ள வாரிசுதாரர்கள் பணி நியமனம்.<br>4. பட்டியாலாண்டில் நிரப்பப்படாமல் நிலுவையில் உள்ள காலிப் பணியிடங்களை அடுத்த ஆண்டிற்கான உரிய ஒதுக்கீட்டிற்கு முன் கொணரப்பட வேண்டும். |

**பொ.து.ந.க.எண்.இ6/ 30604/2020**

**இளநிலை உதவியாளர் உத்தேசிக்கப்பட்ட காலிப்பணியிட விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | **Total cadre strength** | **318 Nos** |
| | (i) Temporary | - NIL – |
| | (ii) **Permanent** | **318 Nos** |
| 2. | Number of vacancies of retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, Dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules)<br>**a) Death** = 1 **No.**<br>Thiru.D.Gopy, Junior Asst/ACC. Death on 21.09.2020<br>**b) Promotion** = 1 **No.**<br>Thiru.A. Chandara Suudan, Promoted to Junior Engineer<br>**C) One Way transfer** = 1 **No.**<br>Thiru.C.Saravanan, J.A. transfer to Vellore Corporation<br>**d) Voluntary Retirement Service = 1 No.**<br>Tmt. C.M. Thiru Arul. J.A./Zone-3 | **04 Nos** |
| 3. | 5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment) | - NIL – |
| 4. | Number of likely promotions<br>**Junior Assistant to Assistant = 1No.**<br>Thiru.S.Prem Kumar. Junior Asst.,/Z-1<br>(Panel Year 2020-2021) | **1 No.** |
| 5. | Number of new posts likely to be sanctioned during the panel period and the number of posts sanctioned earlier but not included in the previous year estimate | - NIL – |
| | **Vacancies** | **05 Nos** |
| | Total Vacancies = 5 Nos<br>**As Per Junior Asst Ratio 1:1**<br>**Promotion** = 3 **Nos**<br>:<br>Direct Recruitment = 2 Nos<br>**Promotion Vacancies** | **03 Nos** |
| 6. | Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O.Ms.No.103, Personnel and Administrative Reforms (S) Department, Dated 9th October 1994.<br>(see table below)<br>**Promotion Vacancies 3x40%= (1.2) 1 Nos** | **01 No** |
| | **Deduct** | |
| 7. | Number of posts disbanded during the recruitment year | - NIL – |

| When the total vacancies arrived at with reference General rule 4 are between | Provision for unexpected contingencies as a percentage of total vacancies |
|---|---|
| 1 to 10 | 40% |
| 11 to 20 | 30% |
| 21 to 40 | 20% |
| 41 to 100 | 15% |
| 100 and above | 10% |

**பொ.து.ந.க.எண்.இ6/ 30604/2020**

| | | | |
|---|---|---|---|
| 8. | Number of vacancies apportioned for direct recruitment | 2017-2018 – 94 Nos<br>2018-2019 – 06 Nos<br>2019-2020 – 06 Nos<br>---------------<br>Total **106 Nos**<br>-----------------<br>2020-2021 02 Nos<br>---------------<br>**Total 108 Nos**<br>-------------- | |
| | **Total** | | **04 Nos** |
| 9. | Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up. | | - NIL – |
| 10. | Number of persons who have been deputed to other posts for a specified period and subsequently revered to the lower cadre for want of vacancy. | | - NIL – |

மேற்கண்ட சென்னை மாநகராட்சி சார்நிலை பணி துணை விதிகளின்படி துறை/ மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் 01.08.2020ஐ மைய நாளாக கொண்ட 2020-2021 ஆம் பட்டியல் ஆண்டின் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய தற்காலிக தெரிவுப்பட்டியல் 16/02/2021 நாளிட்ட சுற்றறிக்கையின் மூலம் கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

**2020-2021ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்**

| வ.எண். | பெயர், பதவி மற்றும் துறை / மண்டலம் (திருவாளர்கள்) | பட்டதாரி / பட்டதாரி அல்லாதவர் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1:1 என்ற விகிதாச்சாரத்தில் 3 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி மற்றும் 5 ஆண்டுகள் பணி முடித்த பட்டதாரி அல்லாதவர் | | | |
| 1. | U. புனிதா<br>பதிவுரு எழுத்தர்,<br>மின்துறை | பட்டதாரி<br>அல்லாதவர் | 04/01/1989 |
| 2. | G. புருஷோத்தம்<br>சாலை பணியாளர்<br>மண்டலம்-1. | பட்டதாரி | 05/11/2013 |
| 3. | N. சுதாகர்<br>நிரந்தர தொழிலாளி,<br>மின்துறை,<br>தொற்று நோய் மருத்துமனை | பட்டதாரி<br>அல்லாதவர் | 23/02/2006 |
| 4. | V. ஹரிகணேஷ்<br>சாலை பணியாளர்,<br>மண்டலம்-10. | பட்டதாரி | 14/03/2014 |

பொதுத்துறையின் 16.02.2021 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் மேற்படி தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து வட்டார துணை ஆணையர்கள் / துறைத்தலைவர்கள்/மண்டல அலுவலர்கள் தங்களின் கீழ் பணிபுரியும் அனைத்து சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கும் தவறாமல் சுற்றுக்கு விட்டு, இத்தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்படும் ஆட்சேபணைக் கருத்துக்களை உரிய ஆவணங்களுடன் 25.02.2021க்குள் பொதுத் துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்டதனை தொடர்ந்து பெறப்பட்ட ஆட்சேபணை குறித்த விவரங்கள் கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**பொ.து.ந.க.எண்.இ6/ 30604/2020**

2020-2021ஆம் பட்டியலாண்டில் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்பட்ட ஆட்சேனை குறித்த விவரங்கள்

| வ.எண். (1) | பெயர் மற்றும் பதவி (2) | ஆட்சேபணை விவரம் (3) | துறையின் கருத்து (4) |
|---|---|---|---|
| 01. | திரு.B. கண்ணன் குமார் நேரக்காப்பாளர், மத்திய வாகன பணிமனை, இயந்திர பொறியியல் துறை. | தன் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை 9(2)ன் கீழ் தண்டனையாக ஓராண்டிற்கு திரண்ட பயனிற்றி ஊதிய உயர்வுநிறுத்தம் செய்யப்பட்டது. தண்டனை முடிவு பெற்றதால் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்குமாறு கோரியுள்ளார். | தனியருக்கு 2017-2018ஆம் பட்டியலாண்டில், இறுதி தெரிவு பட்டியலில் (வ.எண்.21) பெயர் சேர்க்கப்பட்டும், பதவி உயர்வு ஆணையும் வழங்கப்பட்டது. அந்நி லையில் தனியர் மீது 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை உள்ளது என தெரிவிக்கப்பட்டதால், தனியருக்கு பதவி உயர்வு அளிக்கப்படவில்லை.<br>துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 22.02.2019 நாளிட்ட இறுதி ஆணையில் தனியருக்கு ஓர் ஆண்டு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டது.<br>இத்தண்டனை 30.06.2020ல் முடிவடைந்துவிட்டது.<br>இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான மைய நாள்.01.08.2020 என்பதால், தனியரின் பெயர் 2020-2021 பட்டியலாண்டில் மூப்புநிலை அடிப்படையில் இறுதி தெரிவுப் பட்டியலில் வரிசை எண்.2ல் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| 02. | K. சந்திரகலா சாலை பணியாளர் மண்டலம்-13 | 08.03.2014ல் பணியமர்த்தப்பட்ட தன்னுடைய பெயர் இளநிலை உதவியாளர் தற்காலிக தெரிவுப் பட்டியலில் இடம் பெறவில்லை. ஆனால்,14.03.2014ல் பணியமர்த்தப்பட்ட V.ஹரிகணேஷ், அவர்களின் பெயர் வரிசை எண்.4ல் இடம் பெற்றுள்ளது. தன்னுடைய பெயரினையும் பட்டியலில் சேர்க்குமாறு கோரியுள்ளார். | தனியர் பணிமூப்பின் அடிப்படையில் இளையவராக (வ.எண்.8) உள்ளதால், தற்காலிக தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயர் காண்பிக்கப்படவில்லை. |
| 03. | N. சுதாகர் நிரந்தரதொழிலாளி தொற்றுநோய் மருத்துவமனை | தனக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு தற்காலிகமாக விருப்பம் இல்லை என தெரிவித்துள்ளார். | 2020-2021 ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3ல் இடம் பெற்றுள்ள தனியர் தனக்கு இளநிலை |

| | | | |
|---|---|---|---|
| | | | உதவியாளர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என கடிதம் அளித்துள்ளதால், இறுதி தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை காண்பிக்கப்படவில்லை. |

- தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3ல் இடம் பெற்றிருந்த திரு.N.சுதாகர், நிரந்தர தொழிலாளி, தொற்று நோய் மருத்துவமனை (பட்டதாரி அல்லாதவர்) அவர்கள், தனக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என கடிதம் அளித்துள்ளதால், தனியருக்கு அடுத்ததாக (பட்டதாரி அல்லாதவர்) பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.7ல் இடம் பெற்றுள்ள திரு.M. குமார், அலுவலக உதவியாளர், மண்டலம்-4 அவர்களின் பெயர் இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3ல் காண்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடுஅரசு, அரசாணை(நிலை)எண்.29, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்.25.02.2021ல் அரசு பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது தற்போது அமலில் உள்ள 59 வயது என்பது, 60 வயதாக உயர்த்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றினால், இளநிலை உதவியாளர் பதவியில் வயது முதிர்வு ஓய்வினால் ஏற்படவுள்ள காலிப்பணியிடம் குறைவானதால், இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான காலிப்பணியிட மதிப்பீடு (Estimate Vacancy) சேர்த்து 4-என கணிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் 01.08.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான தகுதி வாய்ந்த பணி முதுநிலையில் உள்ள பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாத கீழ்நிலை பணியாளர்கள் (1:1) என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் 4- நபர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

**2020-2021ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்**

| வ.எண். | பெயர், பதவி மற்றும் துறை / மண்டலம் (திருவாளர்கள்) | பட்டதாரி / பட்டதாரி அல்லாதவர் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1:1 என்ற விகிதாச்சாரத்தில் 3 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி மற்றும் 5 ஆண்டுகள் பணி முடித்த பட்டதாரி அல்லாதவர் | | | |
| 1. | U.புனிதா<br>பதிவுரு எழுத்தர்,<br>மின்துறை | பட்டதாரி அல்லாதவர் | 04/01/1989 |
| 2. | B.கண்ணன் குமார்<br>நேரக்காப்பாளர்<br>மத்திய வாகன பணிமனை<br>இயந்திர பொறியியல் துறை | பட்டதாரி | 11/07/2008 |
| 3. | M.குமார்<br>அலுவலக உதவியாளர்<br>மண்டலம்-4 | பட்டதாரி அல்லாதவர் | 01/03/2006 |
| 4. | G.புருஷோத்தம்<br>சாலை பணியாளர்<br>மண்டலம்-1. | பட்டதாரி | 05/11/2013 |

தற்போது இளநிலை உதவியாளர் பதவியில் 2 காலிப்பணியிடங்கள் மட்டுமே உள்ளதால், மேற்கண்ட இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 4 நபர்களில், வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.2ல் இடம்பெற்றுள்ள நபர்களுக்கு மட்டுமே இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்க இயலும் என்றும், இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3 மற்றும் வரிசை எண்.4ல் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு இளநிலை உதவியாளர் காலிப்பணியிடம் ஏற்படும் போது, அப்பதவி நிரப்பப்படும் எனவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| அ) | ஏற்கனவே தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3ல் இடம் பெற்று இளநிலை உதவியாளர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என கடிதம் அளித்துள்ள, திரு.*N*.சுதாகர், நிரந்தர தொழிலாளி, தொற்றுநோய் மருத்துவமனை அவர்களின் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கான (பணி நிபந்தனை விதிகள்) *(Tamil Nadu Government Servants (Conditions of Service) Act* 2016ல் விதி 57(2)ன்படிஏற்று, பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாமென தெரிவித்துள்ளது மூன்றாண்டு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். மூன்று ஆண்டுகள் முடித்த பின்னர் அடுத்து வரும் இளநிலை உதவியாளர் பதவி உயர்வின் போது இவரின் மூப்பு நிலை அப்போதைய நிலையில் நிர்ணயம் செய்யப்படும் எனவும், இது குறித்து முன்னுரிமை ஏதும் வழங்க இயலாது எனவும் தனியருக்கு ஆணை வழங்கவும், |
| ஆ) | 01.08.2020ஐ மைய நாளாக் கொண்ட 2020-2021ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கீழ்நிலை பதவியின் மூப்பு நிலை வரிசையின் அடிப்படையில் தகுதி பெற்றுள்ள 4 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும், |
| இ) | இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு பட்டியலாண்டில் (01.08.2020 முதல் 31.07.2021 வரை) ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் ரூ.19500-62000 என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கவும், |

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"இளநிலை உதவியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல், அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.ஈ1/19852/2012**

**தீர்மானஎண்.531/2021** **நாள்:25-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.கே.ஜி.ராஜேந்திரன் செயற்பொறியாளர் (ஓய்வு), மண்டலம் 5 அவர்களுக்கு - செயற்பொறியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்த அனுமதி.**

மன்றத் தீர்மானம் எண்.592/2012, நாள்.27.12.2012ன்படி, 2012-2013ஆம் ஆண்டிற்கு செயற்பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்த தெரிவுப்பட்டியலில், உதவி செயற்பொறியாளர்களின் மூப்புபட்டியலில் வ.எண்.25ல் இடம் பெற்றிருந்த திரு கே.ஜி.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.06.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, சென்னை மாநகராட்சி பணியாளர் (வகைப்பாடு, கட்டுப்பாடு, மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970-ன் கீழ் விதி எண். 10 (பி)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால், தனியரின் பெயரை சேர்க்காமல் ஒத்தி வைத்து மன்றத் தீர்மானம் எண்.592/2012, நாள்:27.12.2012ல் நிறைவேற்றப்பட்டது.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.07.2015 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.கே.ஜி.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர், அவர்கள் மீது நிலுவையிலிருந்து தொடரப்பட்டிருந்த ஒழுங்கு நடவடிக்கையில் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது மேல்நடவடிக்கை நிறுத்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

24.08.2015 நாளிட்ட கடிதத்தில், திரு.கே.ஜி.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர் மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகம், சென்னை மாநகராட்சி அவர்கள், தன்மீது நிலுவையிலிருந்து தொடரப்பட்டிருந்த ஒழுங்கு நடவடிக்கையில் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது மேல்நடவடிக்கை நிறுத்தப்பட்டு ஆணை பிறப்பபிக்கப்பட்டுள்ளதால், செயற்பொறியாளர் பதவிக்கு 2012-2013 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்த்து, மூப்பு நிலை நிர்ணயம் செய்து, செயற்பொறியாளர் பதவியில் கருத்தியலாக, மன்றத் தீர்மானம் எண்.592/2012 நாள்.27.12.2012 ன்படி தனது இளையவர் செயற்பொறியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்குமாறு கோரப்பட்டதின் அடிப்படையில் பொதுத்துறையின் 16.10.2015 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியருக்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு, ரூ. 15,600- 39,100+ 7,600/- தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.681/2015 நாள்.27.11.2015ன்படி, தனியருக்கு கருத்தியலாக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 30.06.2016 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியர் 30.06.2016 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ஆணையர் அவர்களின் 10.03.2018, 14.05.2019 மற்றும் 01.03.2021 நாளிட்ட செயல்முறை ஆணைகளின்படி, தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் கைவிடப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 28.01.2020 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு செயற்பொறியாளர் பதவியில் கருத்தியலாக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/19852/2012**

பெருநகர சென்னை மாநகராட்சியில், செயற்பொறியாளர் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரின் பணியை வரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் தீர்மானம் பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.கே.ஜி.ராஜேந்திரன், செயற்பொறியாளர் (ஓய்வு), மண்டலம் 5 அவர்களுக்கு செயற்பொறியாளராக பதவியில் சேர்ந்த நாளான 11.11.2015 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்த, சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பணி வரன்முறைப்படுத்த, சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**பொ.து.ந.க.எண்.ஈ2/11775/2021**

**தீர்மானஎண்.532/2021** **நாள்:25-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர். *K.* உஷா, மருத்துவ அலுவலர், தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம்-9 அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டது - திருத்திய செயல்முறை ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் ஆணையர் அவர்களின் *02/09/2020* நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மருத்துவ அலுவலராக நியமனம் செய்யப்படும் நபர்கள் தகுதிகாண்பருவ காலத்திற்குள் பணிவிதிகளின்படி தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு *(Account Test for Executive Officer)* மற்றும் மருத்துவ தொகுப்பில் *(Tamilnadu Medical Code)* தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, டாக்டர். *K.* உஷா, அவர்கள் மருத்துவ அலுவலராக *07.09.2010* அன்று பணியில் சேர்ந்துள்ளார் என்றும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் மன்றத் தீர்மான எண்.*350/2017* நாள்.*07.06.2017*ன்படியும், ஆணையர் அவர்களின் *17.06.2017* நாளிட்ட செயல்முறை ஆணையின்படியும், தனியருக்கு *07.09.2010* அன்று பணிவரன்முறைபடுத்தியும், *06.10.2012* அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும். தனியர் அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் *28.12.2012* அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும்,

டாக்டர். *K.*உஷா, மருத்துவ அலுவலர் அவர்களுக்கு *07.09.2010* முதல் பணிவரன்முறைபடுத்தியும், துறை தேர்வு எழுதிய மறு நாளான *29.12.2012* முதல் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று திருத்திய செயல்முறை ஆணை வழங்க பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் *19.04.2021* நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து கோப்பு பெறப்பட்டது.

சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.*350/2017, 07.06.2017*ல் இரண்டு மருத்துவ அலுவலர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து *17.06.2017* நாளிட்ட செயல்முறை ஆணையில் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டது. இதில், வ.எண். *1*ல் இடம்பெற்றுள்ள டாக்டர். *K.* உஷா அவர்களுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்ட நாள் தவறுதலாக உள்ளதால் தனியருக்கு திருத்திய செயல்முறை ஆணை வழங்க மீண்டும் மன்றத் தீர்மானம் பெறப்பட வேண்டியுள்ளது.

எனவே, டாக்டர். *K.* உஷா அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் கீழ்கண்டவாறு தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாள் | ஏற்கனவே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்ட நாள் | தற்போது தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|---|---|
| *1* | டாக்டர். *K.* உஷா , மருத்துவ அலுவலர் | *07.09.2010* மு.ப. | *07.09.2010* | *06.10.2012* | *29.12.2012* |

**“தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிப்பதற்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

************

**பொ.து.ந.க.எண். இ5/5289/2021**

**தீர்மானஎண்.533/2021** **நாள்:25-06-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.கே.ரவிகுமார், உரிமம் ஆய்வாளர், மண்டலம் 10 உரிமம் ஆய்வாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. - உடல்நிலை காரணமாக உரிமம் ஆய்வாளர் பணியினை தொடர இயலவில்லை என தெரிவித்தது - உதவியாளர் பதவிக்கு இறக்கம் செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணிகளுக்கான திருத்தப்பட்ட சார்நிலைப்பணி துணை விதிகள் 2009, மன்றத் தீர்மான எண். 13/2015, நாள் : 29.01.2015ன்படி உரிமம் ஆய்வாளர் பதவி உயர்வுக்கு 1 : 1 : 1 : 3 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் 11 நபர்களின் பெயர்கள் அடங்கிய இறுதித் தெரிவுப்பட்டியல் சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களின் தீர்மான எண். 1029 / 2020. நாள் 15.12.2020ன் மூலம் அங்கீகரிக்கப்பட்டதை தொடர்ந்து இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை எண். 10ல் இடம் பெற்றிருந்த திரு.கே.ரவிகுமார், பட்டதாரி அல்லாத உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் அவர்களுக்கு உரிமம் ஆய்வாளர் பதவி உயர்வு அளித்து. ஆணையர் அவர்களின் 31/12/2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி மண்டலம்-10ல் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். மேற்படி தனியருக்கு உரிமம் ஆய்வாளர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை.

திரு.கே.ரவிகுமார், உரிமம் ஆய்வாளர், மண்டலம் 10 அவர்கள் சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த 08.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனக்கு சர்க்கரை நோயின் காரணமாக வலது கால் பெருவிரல் நீக்கப்பட்டுள்ளதால், தனது உடல்நிலையின் காரணமாக தன்னால் உரிமம் ஆய்வாளர் பணியினை தொடர்ந்து பணிபுரிய இயலாத நிலையில் உள்ளதால், தன்னை உரிமம் ஆய்வாளர் பதவியிலிருந்து உதவியாளர் பதவிக்கு நிரந்தரமாக பதவியிறக்கம் செய்யுமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

27.02.2021 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் திரு.கே.ரவிகுமார், உரிமம் ஆய்வாளர், மண்டலம் 10 அவர்களின் பதவியிறக்கம் தற்காலிகமாகவா அல்லது நிரந்தரமாகவா என்றும் தனியர் உரிமம் ஆய்வாளர் பதவியில் மேற்கொண்டுவரும் பணிகளின் விவரங்கள், பணித்திறன், ஒழுங்கு நடவடிக்கை விவரங்கள் இருப்பின் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-10 அவர்களின் 05/03/2021 நாளிட்ட கடிதத்தில் திரு.கே.ரவிகுமார், உரிமம் ஆய்வாளர் அவர்கள் கோட்டம் 127 முதல் 129 வரை உள்ள கோட்டங்களில் புதிய உரிமம் வழங்க நடவடிக்கை எடுத்தல், உரிமம் புதுப்பித்தல், நிறுவன வரி, தொழில் வரி மற்றும் இதர பணிகளை சுணக்கம் இன்றி மேற்கொண்டு வருவதாகவும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் இக்கோப்பின் மீதான நடவடிக்கையினை நிலுவையில் வைப்பதற்கு உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 24.03.2021 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

உரிமம் ஆய்வாளர் பதவியிலிருந்து உதவியாளர் பதவிக்கு நிரந்தரமாக பதவி இறக்கம் செய்ய கோரி கடிதம் அளித்துள்ள திரு.கே.ரவிகுமார், உரிமம் ஆய்வாளர் அவர்கள் உரிமம் ஆய்வாளர் பதவியில் சேர்ந்த விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் / பதவி / பணிபுரியும் மண்டலம் | உரிமம் ஆய்வாளர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | திரு.கே.ரவிகுமார்<br>உரிமம் ஆய்வாளர், மண்டலம் -10 | 05.01.2021 |

மேற்கண்ட தனியர் பணிவிதிகளின்படி 1 : 1 : 1 : 3 ( 8 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி அல்லாத வரிவசூலர் 1 நபர், 5 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி வரிவசூலர் 1 நபர், 3 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி அல்லாத உதவியாளர் 1 நபர், பட்டதாரி உதவியாளர்கள் 3 நபர்கள்) என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பட்டதாரி அல்லாத உதவியாளர் பிரிவில் முதுநிலையின் அடிப்படையில் உரிமம் ஆய்வாளர் பதவி உயர்வுக்குண்டான பணித்தகுதிகளைப் பெற்றிருந்ததால் ஆணையர் அவர்களின் 31.12.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி

<u>பொ.து.ந.க.எண். இ5/5289/2021</u>

உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று 05.01.2021 முதல் மண்டலம்-10ல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் தனியர் மீது தற்போது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை. மேற்படி தனியருக்கு உரிமம் ஆய்வாளர் பதவியில் ஊதிய நிர்ணயம் ஏதும் செய்யப்படவில்லை. தற்போது வரை உதவியாளர் பதவியில் ஊதியம் பெற்று வருகிறார்.

மேலும், இது தொடர்பாக கனிவுடன் சமர்ப்பிப்பது யாதெனில், *Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, Tamil Nadu Act No. 14 of 2016* விதி 57 பிரிவு 2ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years, subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of the period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted, subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained.

மேற்கண்ட தனியரின் கோரிக்கை *Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, Tamil Nadu Act No. 14 of 2016* விதி 57(2)ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிமம் ஆய்வாளர் பதவியிலிருந்து உதவியாளர் பதவிக்கு நிரந்தரமாக இறக்கம் செய்யப்பட வேண்டும். மேலும், அன்னார் பதவி உயர்வு வேண்டாம் என தெரிவித்துள்ளது நிரந்தரமாக நடைமுறையில் இருக்கும். இவரின் முதுநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.

ஆகவே, திரு.கே.ரவிகுமார், உரிமம் ஆய்வாளர், மண்டலம்-*10* அவர்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் உரிமம் ஆய்வாளர் பதவியிலிருந்து நிரந்தரமாக இறக்கம் செய்து உதவியாளர் பதவியில் பணியமர்த்த சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"உரிமம் ஆய்வாளர் பதவியிலிருந்து நிரந்தரமாக இறக்கம் செய்து உதவியாளர் பதவியில் பணியமர்த்த, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**G.D.C.No.G4/24724/2019**

**Resolution No.534 /2021** **Date:25-06-2021**

**Establishment – Greater Chennai Corporation - General Department - Properties acquired by the family members of Corporation servant out of their own sources - Rule 7 of Chennai Corporation Conduct Rules, 1968 to amended on par with Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 – Amendment requested by Government – Amendment Proposal Sent –clarification sought – Request for revised Amendment – Proposal to be sent to Government – For orders.**

Government have requested the amendment to be made in Rule 7 of Chennai Corporation Servants Conduct Rules, 1968 on par with the Rule 7 of Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 vide letter.No.25947/MC-3/2018-4, Dated 30.07.2019.

In Rule 7 of Chennai Corporation Servants' Conduct Rules, 1968 for Movable, immovable and valuable property as detailed below:-

"**7. Movable, immovable and valuable property**

(1) No Corporation servant shall, except after notice to the prescribed authority, acquire or dispose of any immovable property by lease, mortgage, purchase, sale, gift, exchange or otherwise either in his own name or in the name of any member of his family.

Such a notice will be necessary even where any immovable property is acquired by any member of the family of the Corporation servant out of the resources of the Corporation Servant.

Provided that any such transaction conducted otherwise than through regular or reputed dealer, shall acquire the previous sanction of the prescribed authority.

Provided further that the previous sanction of the prescribed authority shall not be necessary for the acquisition of immovable property assigned by the Government to the Corporation Servant."

As per G.O.Ms.No.409, P&AR Dept., Dated.24.12.1992, the following amendments made in Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 as follows:

"In the said Rules, in rule 7:

i) In sub-rule (1) in clause (a), the following Explanation shall be added at the end, namely.
**Explanation:-** A Government servant is not required to give notice to the prescribed authority or seek prior permission from the prescribed authority for acquisition or disposal of immovable properties by the members of his family under clause (a), if the immovable property in question is not acquired from the resources of the Government servant concerned.

ii) In the Explanation under Sub-rule (3) the following entries shall be added at the end, namely:
The movable and immovable properties acquired by the members of the family of a Government servant solely with their own resources need not be included in such returns."

**G.D.C.No.G4/24724/2019**

In this regard, it was proposed to a mend Rule 7 of Chennai Corporation Servants' Conduct Rules, 1968 on par with the Rule 7 of Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 with obtaining Special Officer, Council Resolution No.671/2019, Dated: 31.10.2019 and the proposal has been sent to the Government vide this office letter dated.17.12.2019.

In continuation to the above proposal, the Government have pointed out the following points to examine in the above amendment and requested to revised draft amendment proposal to the Government vide letter No.25947/MC-3/2018-6, dated.12/03/2020.

1. There is no clause (a) to sub rule (1) and Explanation to sub rule (3) of rule 7 of the Chennai Corporation Servants Conduct Rules, 1968.
2. Further, consequent to the amendment proposed to Rule 7, clause (4) of rule 2 of the said Chennai Corporation Servants Conduct Rules, 1968 defining the term "members of the family" in relation to Corporation Servants has also to be amended in line with Clause (5) of rule 2 of the Tamil Nadu Government Servant Conduct Rules, 1973 defining the term "Members of the family in relation to a Government Servant".
3. To furnish the updated and authenticated copy of the Chennai Corporation Servants Conduct Rules, 1968 and the Tamil Nadu Government Servants Conduct Rules, 1973.

The above points observed by the Government have been rectified and revised as follows:

1. There is no clause (a) to the sub rule (1) of rule 7 of the Chennai Corporation Servant, Conduct Rules, 1968. Therefore, clause (a) to the sub rule (1) mentioned in the proposal has been deleted and the revised amendment proposal is given below.
2. Points have been rectified in the revised amendment proposal.
3. The updated and authenticated copy of the Chennai Corporation Servants Conduct Rules, 1968 and the Tamil Nadu Government Servants Conduct Rules, 1973 has been enclosed.

As per Government letter the following revised amendment shall be added in Rule 7 of Chennai Corporation Servants' Conduct Rules, 1968 for Movable, immovable and valuable property as detailed below:-

**Revised Amendment proposal**

"In the said Rules, in rule 7:

i) **In sub-rule (1),** the following Explanation shall be added at the end, namely.

   **Explanation:-** A Corporation servant is not required to give notice to the prescribed authority or seek prior permission from the prescribed authority for acquisition or disposal of immovable properties by the members of his family under clause (a), if the immovable property in question is not acquired from the resources of the Corporation servant concerned.

ii) In the Explanation under Sub-rule (3) the following entries shall be added at the end, namely:

   The movable and immovable properties acquired by the members of the family of a **Corporation servant** solely with their own resources need not be included in such returns."

**G.D.C.No.G4/24724/2019**

Hence, to pass Orders on the above revised draft amendment to add in the rule 7 of Chennai Corporation Servants' Conduct Rules, 1968 and revised proposal may be sent to Government in this regard. Orders of the Special Officer- Council are requested, Principal Secretary/Commissioner's Note dated.22.06.2021 is read.

**"Proposal to be sent to Government, approved by Special Officer- Council."**

************

**பொ.து.ந.க.எண். இ11/31989/2020**

**தீர்மானஎண்.535/2021** **நாள்:28-06-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – மருத்துவ சேவைகள் துறை - திரு. N. சந்திரகாந்த், அலுவலக உதவியாளர் – சிறப்பு மறு வாழ்வு மையம் (De-addition Centre) இராயப்பேட்டை, மண்டலம்-9 என்பவர் 06.06.2016 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் சிறப்பு மறுவாழ்வு மையத்தின் பணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது – சென்னை மாநகராட்சி மூன்று (ம) நான்காம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் பெறப்பட்டது - விசாரணை அலுவலர் நியமித்து விசாரணை நடத்தப்பட்டது – விசாரணை அறிக்கை பெறப்பட்டது - தனியரிடம் கூடுதல் விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணை வழங்கப்பட்டது - தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, திரு. N. சந்திரகாந்த், அலுவலக உதவியாளர் – சிறப்பு மறு வாழ்வு மையம் (De-addition Centre) இராயப்பேட்டை, மண்டலம்-9 என்பவர் 06.06.2016 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் சிறப்பு மறுவாழ்வு மையத்தின் பணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியதற்காக சென்னை மாநகராட்சி மூன்று (ம) நான்காம் நிலைப்பணியாளர் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. இக்குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு தனியர் 10.01.2020 அன்று விளக்கம் அளித்துள்ளார்.

துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 05.02.2020 நாளிட்ட உத்தரவின்படி, தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் குற்றச்சாட்டுகளுக்கு தனியர் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கை அளிக்கக்கோரி டாக்டர்.திருமதி. ஆஷா லதா, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்-6, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார்.

**குற்றச்சாட்டு-1:**

திரு.N. சந்திரகாந்த், அலுவலக உதவியாளர், அவர்கள் 06.06.2016 முதல் இதுநாள் வரை பணிக்கு வராமல் சிறப்பு மறுவாழ்வு மையத்தின் பணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு-2:**

தனியர் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த 14.11.1986 முதல் அவ்வப்போது நீண்ட நாட்கள் பணிக்கு வராமல் இருந்த காரணத்தால் பல்வேறு துறைகள் மூலம் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணையில் தண்டனையாக (ஆறு முறை 10 ஆண்டுகள்) ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தனியருக்கு சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிவதில் அக்கறை இல்லை என்பதை காட்டுகிறது.

**குற்றச்சாட்டு-3:**

தனியர் அடிக்கடி முன்னறிவிப்பின்றி நீண்ட நாட்கள் பணிக்கு வராமல் இருப்பதன் மூலம் மற்ற பணியாளர்களுக்கு இடையே ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாக கருதப்படுகிறது.

**குற்றச்சாட்டு-4:**

தனியர் உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை மதிக்காமல் உதாசீனப்படுத்துவதை வாடிக்கையாக கொண்டுள்ளது.

**குற்றச்சாட்டு-5:**

தனியர் முன்னறிவிப்பின்றி அடிக்கடி நீண்ட நாட்கள் விடுப்பு எடுப்பதால், தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை கோப்புகளை உருவாக்கி அதனை முடிக்கும் வரை நிர்வாகப்பணிகளுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துவது.

**பொ.து.ந.க.எண். இ11/31989/2020**

**குற்றச்சாட்டு-6 :**

தனியர் முன்னறிவிப்பின்றி அடிக்கடி நீண்ட நாட்கள் விடுப்பு எடுப்பதன் மூலம் தனியருக்கு இப்பணியின் மீது அக்கறையின்மையையும்/அலட்சியப் போக்கினையும்/ ஆர்வமின்மையையும் காட்டுகிறது.

**குற்றச்சாட்டு-7 :**

தனியரின் இச்செயல் சென்னை மாநகராட்சி விதி 20ஐ மீறிய செயலாகும்.

**மேற்கண்ட 1 முதல் 7 வரையிலான குற்றசாட்டுகளுக்கு தனியர் அளித்த விளக்கம்:**

“நான் சென்னை மாநகராட்சியில் 14.11.1986 முதல் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணிக்கு சேர்ந்த நாள் முதல் 2016 வரை வேலைக்கு ஒழுங்காக வந்துக்கொண்டிருந்தேன். திடீரென 2016ஆம் ஆண்டில் எனக்கு காசநோய் (Tuberculosis) ஏற்பட்டது. அது முதல் காசநோய் காரணமாக என் உடல் மிகவும் பாதிக்கப்பட்டு என்னால் தொடர்ந்து வேலைக்கு வர முடியவில்லை. அவ்வப்போது மேற்கண்ட நோயால் என்னால் பேச முடியவில்லை மற்றும் நடக்க முடியவில்லை. இது சம்மந்தமாக 23.10.2017 மற்றும் 04.12.2019 ஆகிய தேதிகளில் கடிதம் கொடுத்துள்ளேன். அந்த கடிதங்களில் நான் காசநோயால் பாதிக்கப்பட்டதை தெரிவித்து, அதனால் என்னால் வேலைக்கு தொடர்ந்து வர இயலவில்லையென தெரிவித்து, அந்த காலங்களில் மருத்துவ விடுப்பாக (Medical Leave) கருதும்படி கேட்டுக்கொண்டேன். மேலும் என்னை மன்னித்து மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டேன். நான் தொடர்ந்து வேலைக்கு வராததால் 24.12.2019 அன்று எனக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை கொடுத்துள்ளீர்கள். நான் 2016ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது பணிக்கு வராதது உண்மைதான். நான் வேண்டுமென்றே பணிக்கு வரவில்லையென தவறுதலாக கருத வேண்டாம். 2016ஆம் ஆண்டு முதல் நான் காசநோயால் பாதிக்கப்பட்டதால் பணிக்கு சரிவர வர முடியவில்லை என்பது தான் உண்மை. இப்பொழுது நான் ஓரளவு குணம் அடைந்துள்ளேன். இனிமேல் நான் ஒழுங்காக பணிக்கு வருகிறேன் என உத்திரவாதம் அளிக்கிறேன். நான் காசநோயால் பாதிக்கப்பட்டதற்கு ஆதாரமாக தாம்பரம் காசநோய் சானடோரியம் மருத்துவமனை வழங்கிய சான்றிதழ் இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன். நான் 2016ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பணிக்கு வரவில்லை என்ற குற்றச்சட்டை மன்னித்து என்னை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் 24.12.2019 தேதியிட்ட குற்றச்சாட்டை ரத்து செய்து என்னை மன்னித்து மீண்டும் பணியில் அமர்த்துமாறு மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நானும் எனது குடும்பமும் மிகவும் வறுமையில் வாடுகிறோம். என்னை நம்பிதான் என் குடும்பம் இருக்கிறது. ஆகவே, எனது குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டு, என் மீதான குற்றச்சாட்டை மன்னித்து, குற்றச்சாட்டு குறிப்பாணை ரத்து செய்து, என்னை மீண்டும் பணியில் அமர்த்தும்படி மிக்க தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். இனி வரும் காலங்களில் நான் எவ்வித காரணமும் சொல்லாமல் தொடர்ந்து பணிக்கு வருவேன் என்று உறுதி கூறுகிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு-1க்கு விசாரணை அலுவலர் முன் தனியர் அளித்த விளக்கம் :**

எனக்கு காசநோய் ஏற்பட்டதால், காசநோய் காரணமாக உடல் மிகவும் பாதிக்கப்பட்டு பேச முடியவில்லை, நடக்க முடியவில்லை தொடர்ந்து பணிக்கு வர இயலவில்லை. இது சம்பந்தமாக 23.10.2017 (ம) 04.12.2019 ஆகிய தேதிகளில் கடிதம் கொடுத்து இந்த நோயினால் பாதிக்கப்பட்டதை தெரிவித்து என்னால் பணிக்கு தொடர்ந்து வர இயலவில்லையென தெரிவித்து இப்பணிக்கு வராத நாட்களை மருத்துவ விடுப்பாக கருதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு-1க்கான விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியரின் பதில் ஏற்புடையதாக இல்லை. தனக்கு காசநோய் (Tuberculosis) பாதிக்கப்பட்டதால் 26.06.2016 முதல் தொடர்ந்து பணிக்கு வர இயலவில்லை என தெரிவித்து மருத்துவ சான்றுகள் சமர்ப்பித்துள்ளார். அதில் தனியருக்கு 31.12.2016 அன்றே நோயிலிருந்து முழுமையாக குணமடைந்து உள்ளதாகவும் அறிக்கை பெற்றுள்ள நிலையில் நோயின்

**பொ.து.ந.க.எண். இ11/ 31989/ 2020**

காரணமாக தன்னால் பேச முடியவில்லை என 23.10.2017 (ம) 14.12.2019 ஆகிய தேதிகளில் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து உள்ளார். தனியரின் இப்போக்கு அலுவலக விதிகளின் மீது அலட்சியத்தினை காட்டுகிறது. **எனவே இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு -1க்கான தனியரின் கூடுதல் விளக்கம்**

காசநோய் என்பது மைக்ரோபாக்டிரியம் டியூபர் குளோசிஸ் மூலம் ஏற்படக்கூடிய ஒரு பரவக் கூடிய தொற்று நோயாகும். வழக்கமாக இந்த நோய், அழற்சியை (வீக்கம்) ஏற்படுத்தி நுரையீரல்களை பாதித்து படிப்படியாக அவற்றை சேதப்படுத்துகிறது. சில நேரங்களில், காசநோய் (டி.பி) மூளை, தண்டு வடத்திற்கு, அல்லது சில நேரங்களில் சிறு நீரகங்களுக்குப் பரவுகிறது. நாள்பட்ட இருமல், இரத்தச்சளி, மூச்சு விடுவதில் சிரமம், காய்ச்சல், இரவு நேர வியர்த்தல், எடை இழப்பு, மயக்கம், பசியின்மை போன்ற அறிகுறிகள் வெளிப்படுத்துகிறது.

மருந்து-எதிர்ப்பு நோய்த் தொற்றுவில், அந்த நுண்ணுயிர் மருந்துகளின் விளைவுகளை எதிர்த்து செயலாற்ற, குறிப்பிட்ட வழிமுறைகளை உருவாக்கி, அவற்றை எதிர்ப்பதாக மாறுகிறது. இதனால், முதலில், அந்த நுண்ணுயிரைக் கொல்ல பயன்படுத்தப்படும் சிகிச்சையாக, எந்த மருந்துகளைப் பயன் படுத்தலாம் என்பதைக் கண்டறிய உணர்திறன் சோதனை நடத்தப்படுகிறது. அந்த மருந்து வேறு மருந்துகளோடு சேர்த்து கூட்டு சிகிச்சையாக அளிக்கப்படுகின்றன. எதிர்ப்பாற்றலை, அதாவது பல்வேறு-மருந்து எதிர்ப்பு (எம்.டி.ஆர். காசநோய் (டி.பி.) அல்லது தீவிர மருந்து எதிர்ப்பு (எக்ஸ்.டி.ஆர். காசேநோய் (டி.பி.) பொறுத்து, சிகிச்சையும், 18 மாதங்கள் முதல் 3 வருடங்கள் வரையுள்ள கால அளவில், சிகிச்சைக்கான கால அளவும் தீர்மானிக்கப்படுகின்றன. மேற்கண்ட அறிகுறிகளைக் கொண்ட தொற்றுநோய் எனக்கு காசநோய் (டி.பி.) ஏற்பட்டுள்ள காரணத்தால் என்னால் பணிக்கு வர இயலவில்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு- 2க்கு விசாரணை அலுவலர் முன் தனியர் அளித்த விளக்கம் :**

பணிக்கு வராதது உண்மைதான். நான் வேண்டுமென்றே பணிக்கு வரவில்லை என தவறுதலாக கருத வேண்டாம். 2016ஆம் ஆண்டு முதல் நான் காசநோயால் பாதிக்கப் பட்டதால் சரிவர பணிக்கு வர முடியவில்லை என்பது தான் உண்மை. இப்போது குணமடைந்து உள்ளது. இனிமேல் நான் ஒழுக்கமாக பணிக்கு வருவேன் என உத்திரவாதம் அளிக்கிறேன்.

**குற்றச்சாட்டு-2க்கான விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியர் பணிக்கு வராதது உண்மைதான். நான் வேண்டுமென்றே பணிக்கு வரவில்லை என தவறுதலாக கருத வேண்டாம். 2016ஆம் ஆண்டு முதல் தான் காசநோயால் பாதிக்கப்பட்டதால் சரிவர பணிக்கு வர முடியவில்லை என்பது தான் உண்மை. இப்போது குணமடைந்துள்ளது. இனிமேல் தான் ஒழுக்கமாக பணிக்கு வருவேன் என உத்திரவாதம் அளித்துள்ளார். தனியரின் பதில் ஏற்புடையதாக இல்லை. **எனவே இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு -2க்கான தனியரின் கூடுதல் விளக்கம்:**

நான் பெருநகர சென்னை மாநகராட்சியில் 14.11.1986 பணியில் சேர்ந்தபோது என்னுடைய குடும்ப சூழ்நிலையும் என்னை சுற்றியுள்ள நண்பர்களும், நண்பர்களால் ஏற்பட்ட பல கெட்ட பழக்கங்களாலும் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சில சண்டைகள், இளம் வயதில் மன அழுத்தத்திற்கு உள்ளாகி அடிக்கடி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத சூழ்நிலை ஏற்பட்டது. அலுவலகங்களில் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டது. அதன் பின்னர் எனக்கு திருமணமானப்பிறகு என் மனைவியின் அறிவுரையின் பேரில் இது போன்ற மேற்கண்ட நிகழ்வுகள் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொண்டு பணியில் அக்கறையுடன் பணிபுரிந்து வந்துள்ளேன் என தெரிவித்துக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு- 3க்கு விசாரணை அலுவலர் முன் தனியர் அளித்த விளக்கம் :**

தனியர் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

**குற்றச்சாட்டு-3க்கான விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியர் பதில் எதுவும் கூறாமல் இருந்துள்ளதால் **இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு -3க்கான தனியரின் கூடுதல் விளக்கம்:**

எனக்கு காசநோய் இருப்பது 2016 ஆம் ஆண்டு முதல் உறுதி செய்யப்பட்டதால் தொடர் இரும்பல், காய்ச்சல், எடை குறைவு, மூச்சு விடுவதில் சிரமம் போன்ற அறிகுறிகளால் பாதிப்புக்குள்ளானேன். இது தொற்று நோய் என தெரியப்பட்டதால் எனக்கு வந்த நோய் மற்றவர்களுக்கு தொற்றிவிடும் என பயந்து என்னுடன் பணிபுரியும் பணியாளர்களுக்கும் உறவினர்களுடன் தனிமைப்படுத்திக் கொண்டேன். அவ்வப்போது பணிக்கு வர இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் அலுவலகத்தில் எனக்கு தண்டனை வழங்கப்பட்டது என தெரிவித்துக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு- 4க்கு விசாரணை அலுவலர் முன் தனியர் அளித்த விளக்கம் :**

என்னை நம்பி தான் என் குடும்பம் உள்ளது. தற்போது என் குடும்பம் மிகவும் வறுமையில் வாடி உள்ளது. என்னை மன்னித்து என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து மீண்டும் பணியில் அமர்த்துமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டுள்ளார். இனி வரும் காலங்களில் தொடர்ந்து பணிக்கு வருவேன் என உறுதி கூறியுள்ளார்.

**குற்றச்சாட்டு-4க்கான விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியரின் பதில் ஏற்புடையதாக இல்லை. **எனவே இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு - 4க்கான தனியரின் கூடுதல் விளக்கம்**

எனக்கு காசநோய் ஏற்பட்ட காரணத்தால் எனக்கு ஏற்பட்ட தொற்று மற்றவர்களுக்கும் என் மூலம் பரவிடும் என்ற அச்சத்தாலும் அப்பொழுது மன உளைச்சலில் இருந்ததாலும், உயர் அதிகாரிகளுக்கு பதில் அளிக்க இயலாத சூழ்நிலையில் இருந்ததே காரணம். எனவே, என்னை மன்னித்து என்னுடைய விளக்கத்தினை ஏற்றுக்கொண்டு இக் குற்றச்சாட்டை கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு- 5க்கு விசாரணை அலுவலர் முன் தனியர் அளித்த விளக்கம் :**

தனியர் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

**குற்றச்சாட்டு-5க்கான விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியர் இந்த கேள்விக்கு பதில் எதுவும் தெரிவிக்காததால் **இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு -5க்கான தனியரின் கூடுதல் விளக்கம்**

எனக்கு காசநோய் ஏற்பட்ட காரணத்தால் எனக்கு ஏற்பட்ட தொற்று மற்றவர்களுக்கும் என் மூலம் பரவிடும் என்ற அச்சத்தாலும் பல மருத்துவர்களை பார்த்து ஆலோசனையும், இத்தொற்று நோயிக்கான மருந்துகளும் பெற்றுக் கொண்டு உபயோகித்து கொண்டு வந்தேன். ஆங்கில மருத்துவம் விட்டு ஆயுர்வேத மருந்துகளும் ஒரு ஆண்டுகளாக பயன்படுத்தி என்னுடைய உடல்நிலை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டதால் அடிக்கடி பணிக்கு வராத சூழ்நிலை ஏற்பட்டது என தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய விளக்கத்தினை ஏற்றுக் கொண்டு குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு- 6க்கு விசாரணை அலுவலர் முன் தனியர் அளித்த விளக்கம் :**

நான் காசநோயால் பாதிக்கப் பட்டதால் சரிவர பணிக்கு வர இயலவில்லை என்பது தான் உண்மை. தற்போது நான் ஓரளவுக்கு குணமடைந்து உள்ளதால் என்னை மன்னித்து என் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளில் இருந்து விடுவித்து மீண்டும் பணியில் அமர்த்துமாறு பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

**பொ.து.ந.க.எண். இ11/ 31989/ 2020**

**குற்றச்சாட்டு-6க்கான விசாரணை அலுவலரின் அறிக்கை:**

தனியரின் பதில் ஏற்புடையதாக இல்லை. **எனவே, இக் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு -6க்கான தனியரின் கூடுதல் விளக்கம்:**

எனக்கு காசநோய் ஏற்பட்ட காரணத்தால் எனக்கு ஏற்பட்ட தொற்றுநோய் மற்றவர்களுக்கும் என் மூலம் பரவிடும் என்ற அச்சத்தாலும் பல மருத்துவர்களை பார்த்து ஆலோசனையும், இத்தொற்று நோயிக்கான மருந்துகளும் பெற்றுக் கொண்டு உபயோகித்து கொண்டு வந்தேன். ஆங்கில மருத்துவம் விட்டு ஆயுர்வேத மருந்துகளும் ஒரு ஆண்டுக்கு மேலாக பயன்படுத்தி என்னுடைய உடல்நிலையை பழைய நிலைமைக்கு கொண்டுவர பல முயற்சிகளை எடுத்து மீண்டும் பணியில் சேர்ந்து என் பணியை செம்மையாக செய்திட வேண்டுமென பலமுறை கடவுளை வழிபட்டு ஒரு வழியாக தொற்றில் இருந்து விடுபட்டு குணமடைந்து உள்ளேன் என தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட முயற்சிகள் அத்தனையும் என் பணியின் மீதான அக்கறையின் பாலும் என் குடும்ப சூழ்நிலையும் மனதில் கொண்டு இனி வரும் காலங்களில் முன்னறிவிப்பு இன்றி பணிக்கு வராமல் இதுபோன்ற தவறுகளை செய்யமாட்டேன் என உறுதியளிக்கிறேன். என்னுடைய விளக்கத்தினை ஏற்றுக் கொண்டு குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு- 7க்கு விசாரணை அலுவலர் முன் தனியர் அளித்த விளக்கம் :**

தனியர் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

**குற்றச்சாட்டு-7க்கான விசாரணை அலுவலரின் அறிக்கை:**

மேற்கண்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதால் **இக்குற்றச்சாட்டும் நிரூபணமாகிறது.**

**குற்றச்சாட்டு -7க்கான தனியரின் கூடுதல் விளக்கம்:**

குற்றச்சாட்டு-6க்கான கூடுதல் விளக்கத்தினையே குற்றச்சாட்டு-7க்கும் அளித்துள்ளார்.

விசாரணை அலுவலர் அவர்களின் *21.02.2020* நாளிட்ட விசாரணை அறிக்கையில் தனியர் திரு. *N.* சந்திரகாந்த், அலுவலக உதவியாளர் – சிறப்பு மறு வாழ்வு மையம் *(De-addition Centre)* இராயப்பேட்டை, மண்டலம்-*9* என்பவர் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், திரு. *N.* சந்திரகாந்த், அலுவலக உதவியாளர் – சிறப்பு மறு வாழ்வு மையம் *(De-addition Centre)* இராயப்பேட்டை, மண்டலம்-*9* என்பவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணை வேண்டி இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் *20.07.2020* நாளிட்ட குறிப்பில், “He is highly irregulalr as stated by ACMO & CMO. Check for Procedure. Serve enquiry Officer Report and get explanation and resubmit” எனத் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் தனியருக்கு மீண்டும் விசாரணை அறிக்கை சார்பு செய்யப்பட்டு, கூடுதல் விளக்கம் கோரப்பட்டது.

தனியரின் *07.09.2020* நாளிட்ட கூடுதல் விளக்கத்தில், “ என் மீது ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக அளிக்கப்பட்ட விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையின் மீது கூடுதல் ஏதும் இல்லை என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் செய்த தவறை உணர்ந்து விட்டேன். இதுபோல் இனி மேல் செய்யமாட்டேன் என்று உறுதியளிக்கிறேன். விசாரணை காலத்தில் எந்த வருமானமும் இல்லாமல் எனது குடும்பம் கஷ்டப்படுகிறது. என் குடும்ப வறுமை காரணமாக ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணைக்கு உட்பட்டு என்னை மீண்டும் பணியில் அமர்த்துமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

**பொ.து.ந.க.எண். இ11/31989/2020**

திரு. *N*. சந்திரகாந்த், அலுவலக உதவியாளர், சிறப்பு மறு வாழ்வு மையம் *(De-addition Centre)* இராயப்பேட்டை, மண்டலம்-*9* என்பவர் *06.06.2016* முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்தால் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக, “He is unauthorizedly absent from 06.06.2016. He was not regular to work earlier also and 6 times 9(2) charges were framed against him between 1989 to 2014. Enquiry officer has also reported that current charges are proved. Considering his irregularity, it is ordered for his dismissal from service under rule 5 (xi) of Chennai Corporation Class III and IV (Discipline and Appeal) Bye-laws 1983” என பணியிலிருந்து நீக்கம் செய்து இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஆணை வழங்கப்பட்டது. தனியருக்கு *22.10.2020* அன்று சார்பு செய்து ஒப்பம் பெறப்பட்டது. அவ்வாணையில் தனியர் விரும்பினால் *60* நாட்களுக்குள் சிறப்பு அதிகாரி மன்றம், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு மேல் முறையீட்டு மனு சமர்ப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

*03.11.2020* நாளிட்ட மனுவில், தன் தவறை உணர்ந்து விட்டதாகவும், இது போன்ற தவறை செய்யவே மாட்டேன் எனவும், எவ்வித வருமானமும் இல்லாமல் தன் குடும்பம், தன் மனைவி மற்றுங்ம பிள்ளைகள் சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்து, தன்னுடைய மேல்முறையீட்டு மனுவினை ஏற்று தனக்கு மீண்டும் பணி வழங்கி தன் குடும்பத்தைக் காப்பாற்றி உதவிடுமாறு கேட்டுக் கொண்டு *03.11.2020* அன்று மேல்முறையீட்டு மனுவை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளார்.

ஆகவே, திரு. *N*. சந்திரகாந்த், அலுவலக உதவியாளர் வகுப்பு - *4*ஐ சார்ந்த பணியாளர் என்பதால், தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“The individual is absent unauthorisdly for over 4 years. His explanation of being a T.B patient & total unauthorized absence based on that is not acceptable. So, earlier order is upheld” என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது”.**

********